

கல்கி

KALKI 19-12-1971 45 காசு



My My!
My choice for the MAN

Century's *Cosy-Cot* COTTON SHIRTING with rich woollen feel


CENTURY for 100% cotton textiles

CENTURIZED
PRESHRUNK FABRIC

THE CENTURY SPG. & MFG. CO. LTD., BOMBAY 25 DD

For Fashion Fabrics choose *Century Shirtings!*


NPS-CM 15




CMTH-14-203 TAM

காணி நிலம் வேண்டும் பராசக்தி காணி நிலத்திடையே ஒரு மாளிகை கட்டித்தர வேண்டும்!

என்று பாரதியார் பராசக்தியை வேண்டினார். பராசக்தி அருளால் நாடு சுதந்திரம் எய்தி, தனியார் துறையிலிருந்த இன்சூரன்சுத் தொழில் பொதுத்துறைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஆயுள் இன்சூரன்சுப் பாலிசிதாரர்களுக்கு, சொந்தமாக ஒரு வீடு வாங்க, அல்லது அவர்கள் நிலத்தில் புதிதாக ஒரு வீடு கட்டிக் கொள்ள, நியாயமான வட்டிக்கு, கணிசமான தொகையைக் கடனாக வழங்குகிறது எல்.ஐ.சி. எல்.ஐ.சியின் "உங்களுக்குச் சொந்தமாக ஒரு வீடு" திட்டத்தின் கீழ் கொடுக்கப்படும் கடன் தொகைகள் சம்பந்தமாக ரூ. 50,000 வரையுள்ள தொகைகளுக்கான அடமானப் பத்திரங்களுக்கு தமிழ்நாட்டிலும், பாண்டிச்சேரியிலும் "ஸ்டாம்ப் டியூட்டி"யிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.



ஆயுள் இன்ஷூரன்சு போல
ஆதரவு தருவது எதுவுமே இல்லை.


ராகம் எமதே,
நாகரீகம் உமதே
தாவண்கெரே
'டெரீன்'/காட்டன்கள்

மனிதனின் பத்து பழமையான ஊழியர்கள் -விரல்கள்



உலகிற்கு பாரதத்தின் மிகப் பயனுள்ள பரிசு

[illegible]



IBM

ஸ்ரீ கிருஷ்ண கான சபா (Regd.)

கிரிப்பித் ரோடு, தியாகராயநகர், சென்னை - 17

போன் : 442806 & 441953

தமிழக முதன் மந்திரியின் தேசப் பாதுகாப்பு நிதிக்காக

கிறிஸ்துமஸ் கலை விழாக்கள் - 1971 டிசம்பர், 1972 ஜனவரி

1971 டிசம்பர்: நாடகங்கள்

❀ வெள்ளி 17ந் தேதி மாலை 6-45 மணிக்கு

'தனிக்குடித்தனம்'

கலாநிலையம்

❀ சனி 18ந் தேதி மாலை 6-45 மணிக்கு

'சம்பவாமி யுகே யுகே'

விவேகா பைன் ஆர்ட்ஸ் கிளப்

ஞாயிறு 19ந் தேதி காலை 10 மணிக்கு

'அண்டர் செகரட்டரி'

கலாநிலையம்

மாலை 6-30 மணிக்கு

'தி டீ ஹவுஸ் ஆப் தி ஆகஸ்டு மூன்'

(ஆங்கில நாடகம்)

விவேகா பைன் ஆர்ட்ஸ் கிளப்

❀ செவ்வாய் 21ந் தேதி மாலை 6-45 மணிக்கு

'ஹரே ராம ஹரே கிருஷ்ணா'

யு. ஏ. ஏ.

புதன் 22ந் தேதி மாலை 6-45 மணிக்கு

'ஹரே ராம ஹரே கிருஷ்ணா'

யு. ஏ. ஏ.

சனி 25ந் தேதி காலை 10 மணிக்கு

'அச்சாணி'

என்னென்னென் தியேட்டர்ஸ்

❀ மாலை 6-30 மணிக்கு

'அச்சாணி'

என்னென்னென் தியேட்டர்ஸ்

❀ ஞாயிறு 26ந் தேதி காலை 10 மணிக்கு

'ஓடிப்போன கணவன்'

ஸ்டேஜ் கிரியேஷன்ஸ்

மாலை 6-30 மணிக்கு

'இரவில் சென்னை'

விவேகா பைன் ஆர்ட்ஸ் கிளப்

வெள்ளி 31ந் தேதி மாலை 6-45 மணிக்கு

'இறைவன் இறந்து விட்டானா?'

விவேகா பைன் ஆர்ட்ஸ் கிளப்

சங்கீதக் கச்சேரிகள்

திங்கள் 20ந் தேதி மாலை 5-45 மணிக்கு

பாலக்காடு கே. வி. நாராயணசுவாமி

டி. என். கிருஷ்ணன், பாலக்காடு ரகு

வியாழன் 23ந் தேதி மாலை 5-45 மணிக்கு

வயலின் டூயட் **லால்குடி, ஸ்ரீமதி பிரும்மானந்தம்,** *பாலக்காடு ரகு, விநாயகராம்*

வெள்ளி 24ந் தேதி மாலை 5-45 மணிக்கு

புல்லாங்குழல் மாலி, *சந்திரசேகரன், சிவராமன்*

திங்கள் 27ந் தேதி மாலை 5-45 மணிக்கு

நெடுநூரி கிருஷ்ணமூர்த்தி

லால்குடி & ராமபத்ரன்

செவ்வாய் 28ந் தேதி மாலை 5-45 மணிக்கு

எம். டி. ராமநாதன், *வி. வி. சுப்ரமணியம் குருவாயூர் துரை.*

புதன் 29ந் தேதி மாலை 5-45 மணிக்கு

பாலமுரளி கிருஷ்ணா, *சிக்கில் பாஸ்கரன் காரைக்குடி மணி*

வியாழன் 30ந் தேதி மாலை 5-45 மணிக்கு

டி. எம். தியாகராஜன்

லால்குடி, டி. கே. மூர்த்தி

1972 ஜனவரி

சனி 1ந் தேதி காலை 8-15லிருந்து 10-30 மணி வரை

வயலின் டூயட் **டி. என். கிருஷ்ணன் & சந்திரசேகரன்,** *ராமபத்திரன், உபேந்திரன் (இரு மிருதங்கங்கள்)*

ஞாயிறு 2ந் தேதி காலை 8-15லிருந்து 10-30 வரை

வயலின் டூயட் **எம். எஸ். கோபாலகிருஷ்ணன் & எம். எஸ். அனந்தராமன்**

சிவராமன் & நாகராஜன்

நடனங்கள்

1972 ஜனவரி 1ந் தேதி சனி மாலை 6 மணிக்கு

ஜயலலிதா - பரதநாட்டியம்

1972 ஜனவரி 2ந் தேதி ஞாயிறு மாலை 6 மணிக்கு

குமாரி ஸ்ரீவித்யா - பரதநாட்டியம்

❀ சீஸன் டிக்கெட்டுகள் 5 நாடகங்களுக்கு மாத்திரம் ரிஸர்வ்டு : ரூ. 15

முதல் வகுப்பு (ரிஸர்வ் செய்யாதது) ரூ. 10.

தினசரி டிக்கெட்டுகள் : ரூ. 15, 10, 5, 3, 2

சீஸன் டிக்கெட்டுகள் 9 கச்சேரிகளுக்கு

ரிஸர்வ்டு வகுப்பு : ரூ. 25. முதல் வகுப்பு : ரூ. 15

தினசரி டிக்கெட்டுகள் : ரூ. 15, 10, 5, 3, 2

நடனங்களுக்கு: தினசரி டிக்கெட்டுகள்: 15, 10, 5, 3

கலை விழாக்குரிய சீஸன் டிக்கெட்டுகள் : ரூ. 100, ரூ. 60

இப்பொழுதே முன் பணம் செலுத்திப் பதிவு செய்து கொள்ளலாம். வேலை நாட்களில் மாலை 6 லிருந்து 8 மணி வரை ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 மணியிலிருந்து 10 மணி வரை

வெளியூர் ரஸிகர்கள் மணியார்டர் மூலம் தொகையை அனுப்பி முன்னதாகவே சீஸன் டிக்கெட்டுகளைப் பதிவு செய்து கொள்ளலாம்.



கொஞ்சுமிளம் தென்றலோ, குலவ வரும் மல்லிகையோ!

கம கமக்கும் மல்லிகை மணம். இளமை
கொழிக்கும் மேனியெழில். இரண்டையும்
உங்களுக்கு வழங்கவே ஜேய் அழகு
சோப். வில்லை கரைந்தாலும் சுகந்தம்
குறையாத அதன் மென்மை நுரை
உங்கள் சருமத்திற்கு நேயமானது.
உங்கள் பைந்தளிர் மேனி என்றும்
பதினாறாகப் புதுமையுடன் பொலிய
உபயோகியுங்கள் ஜேய்—ஜிகினாத்
தாளுறை தரித்த ஒரே அழகு சோப்!

**உங்கள் புத்தெழில் பெருக ஜேய் அழகு சோப்
மணங்கவர் மல்லிகை மணம் கமழ்வது.**



டாடா தயாரிப்பு.

வேறு எந்தத் தூள் தேயிலையையும் விட அதிகக் கோப்பைகள் தேநீர் பெறுங்கள்

உபயோகித்துப் பாருங்கள்! லிப்டன் ரூபி டஸ்ட் வேறெந்தத் தூள் தேயிலையையும் விட அதிகக் கோப்பைகள் தேநீர் தருகிறது.

அது மட்டுமல்ல! ரூபி டஸ்ட் தேயிலையைக் கொண்டு நிறம், மணம், குணம் நிறைந்த ருசி மிகுந்த பானத்தை உடனடியாகப் பெறலாம்.

எனவே லிப்டன் ரூபி டஸ்ட் "தூள் தேயிலைகளில் ஒப்புயர்வற்ற மன்னன்" என்பதில் அதிசயம் எதுவும் இல்லை.



லிப்டன் ரூபி டஸ்ட்

தூள் தேயிலைகளில் ஒப்புயர்வற்ற மன்னன்



லிப்ட
என்று
நல்ல

பாக்கிங் செய்த தேயிலை மட்டுமே புதிதாகவும், மணத்துடனும் திகழ்கிறது

LRDC-8

கல்கி

பொருளடக்கம்



குளிர்காலத்திலும் சரி,
கோடைகாலத்திலும் சரி—
மார்கோசோப்
சுத்தம் செய்வதோடு மட்டும்
நிற்பதில்லை—
சருமத்தை பாதுகாக்கிறது.

ஏனெனில் மார்கோவில்
மட்டுமே வேப்பெண்ணெய்
சேர்ந்துள்ளது.



மார்கோ சோப்

ஒரு கல்கத்தா கெமிகலின் தயாரிப்பு

CCM-4183-A (Rev)

கல்கி

மலர் 31
இதழ் 21

தமிழ்த்திரு நாடுதன்னைப் - பெற்ற
தாயென்று கும்மியடி பாப்பா
— பாரதியார்

போரின் எதிர் விளைவுகள்

க. சந்தானம்

பாகிஸ்தான் அதிபர் யாஹ்யா கான் இந்தியாவின்மீது யுத்தப் பிரகடனம் செய்தவுடனே, நாம் வங்காள தேசத்தைத் தனி அரசாக அங்கீகரிக்க வேண்டியது இன்றியமையாததாயிற்று. சமாதான முறையில் தீர்வு காண்பதற்கான நோக்கங்களுக்குப் பாதகம் ஏற்படுத்தக் கூடாது என்றேதான், இத்துணைக் காலமும் வங்காள தேச அங்கீகாரத்தைத் தாம் தள்ளிப் போட்டு வந்ததாக நமது பிரதமரவர்கள் விளக்கம் தந்துள்ளார். இப்போது சமாதானப் பைசலுக்கு இடமின்றி யுத்தம் என்றே வந்துவிட்டதால் இதன் பின்னும் வங்காள தேசத்தை இந்தியா அங்கீகரிக்காமல் இருப்பதற்கில்லை. இந்த உண்மையை எவ்வித பாரபட்சமும் இன்றி மற்ற நாடுகள் கவனித்துப் பார்த்தால் வங்காள தேச அங்கீகாரத்தை வரவேற்கவே செய்யும். இந்தியா மண்ணாசை கொண்டு தனக்கென்று எந்தப் பிரதேசத்தையும் ஆக்கிரகம் செய்து பிடித்து வைத்துக் கொள்ள விரும்பவில்லை என்று வங்காள தேசத்தை நாம் அங்கீகரித்ததிலிருந்து தெளிவாகிறது. தங்களது சொந்தப் பிரதிநிதிகளைக் கொண்டே தம்மை ஆண்டுகொள்ள விரும்பும் அண்டை நாட்டு மக்களுடன் அமைதியுடன் வாழவே இந்தியா விரும்புகிறது என்பதும் தெளிவாகிறது.

இந்தியாவில் உள்ள சகல கட்சிகளும், பத்திரிகைகள் அனைத்தும், நமது மக்கள் யாவரும் வங்காள தேச அங்கீகாரத்தைப் போற்றி வரவேற்றிருக்கிறார்கள். இதில் வியப்பு ஏதும் இல்லை. இந்த அங்கீகாரத்தின் எதிர் விளைவுகளையும் உட்கிடக்கைகளையும் நாம் இப்போது ஏற்கத் தயாராக இருக்க வேண்டும். அவ்விதம் நாம் தயாராக இருப்பதாகவே நம்பலாம். ஆயினும் இந்த எதிர்விளைவுகள் எவ்வளவு தீவிரமாக இருக்கக் கூடும் என்பதை மக்களில் அநேகர் உணர்ந்திருப்பதற்கில்லை.

வங்காள தேசத்தை அங்கீகரித்திருப்பதன் முதல் உட்கிடை யாதெனில், அங்குள்ள பாகிஸ்தான் ராணுவத்தை எவ்வளவு விரைவில் முடியுமோ, அவ்வளவு விரைவில் அடியோடு முறியடித்தாக வேண்டும். இத்திசையில் நமது படைகள் சிறப்பாக முன்னேறி வருகின்றன. ஒருசில தினங்களிலேயே நமது இலட்சியத்தை அடைந்து விடலாம் என்று காண மகிழ்ச்சியாக இருக்கிறது. இவ்விதம் தனது படை முறியடிக்கப்படுவதையும், அது சரணாகதி செய்வதையும் தவிர்ப்பதற்காகத்தான் ஐ.நா. பாதுகாப்புக் குழுவிலும், ஐ. நா. பொதுச் சபையிலும் பாகிஸ்தான் படாத பாடு பட்டது. வங்காள தேசத்திலிருந்து தனது படைகளைப் பூரணமாகப் பின்வாங்கிக் கொள்வதற்குப் பாகிஸ்தான் சம்மதித்தால், அதன் பின்னரே இந்தியா போர்நிறுத்தம் செய்வதற்கு இணங்க முடியும். ஆனால் பாகிஸ்தான் தன் படைகளை வாபஸ் பெற்றுக் கொள்வதாக வாக்குறுதி தராவிடில் இந்தியா போர்நிறுத்தம் செய்வதற்கில்லை; ஏனெனில் இந்த நிலையில் வங்காள தேச மக்களை ஒரு புதிய கொடுங்கோன்மைக்கும், படுகொலைக்கும் ஆட்படுத்த நாம் அநுமதி தந்ததாகிவிடும். ஆதலால் வங்காள தேசத்தைப் பாகிஸ்தானின் ராணுவத்திடமிருந்து மீட்டுவிடுவதே நமது முதல் கடமையாகும்.

இந்த மீட்புக்குப் பிறகு வங்காள தேசத்துக்குப் பல பிரச்னைகள் ஏற்படும். அங்கு நல்ல நிருவாகத்தை நிறுவுவது, போக்குவரத்துக்களைச் சரி செய்வது, அகதிகளை மீண்டும் அழைத்துக் கொள்வது ஆகியன கடினமான பிரச்னைகள்; செலவு மிக்க பிரச்னைகள். இந்தியா—பாகிஸ்தான் போர் முடிவுறாத மட்டும் சோவியத் யூனியன் தவிர வேறெந்த நாட்டிடமிருந்தும் உதவி எதிர்பார்ப்பதற்கில்லை. இந்தியா தன்னால் இயன்ற உதவியைச் செய்யும்.

வங்காள தேசத்தின் சுதந்திர வீரர்கள் சொந்த சர்க்காரை அமைத்துக் கொண்டவுடன், பாகிஸ்தான் ராணுவத்துக்கு ஆதரவு காட்டியவர்களை எல்லாம் கொடிய முறையில் பழி வாங்குவதில் இறங்கக் கூடும். இவ்விதம் செய்தால் அது புதிய தேசத்துக்குக் கெட்ட பெயர் உண்டாக்கும் என்பதோடு, இந்தியாவுக்கும் அபக்கியாதி ஏற்படுத்தும்.

எனவே பழி வாங்கும் செயல்களில் வங்காள தேசம் இறங்கக் கூடாது என்பதை இந்தியா அந்த நாட்டுக்கு வற்புறுத்தி அறிவுறுத்த வேண்டும். கொலை, மானபங்கம் போன்ற கொடுங் குற்றங்களில் நேரடியாக ஈடுபட்டவர்கள் மீது பட்சபாதமற்ற நீதிபதிகளைக் கொண்டு விசாரணை நடத்திச் சட்ட பூர்வமான தண்டனையே வழங்க வேண்டும். நேரடியாக இப்படிப்பட்ட காரியங்களை இயக்காமல், மேல் நிலையில் உள்ளவர்களுக்கு அடங்கி நடந்த மற்றவர்களுக்கு எவ்விதத் தீங்கும் இழைக்கக் கூடாது. இந்த அம்சத்தில் சுதந்திர இந்தியாவின் உதாரணத்தை வங்காள தேசம் பின்பற்ற வேண்டும். நாம் சுதந்திரம் பெற்ற பின், அதற்கு முன்பு பிரிட்டிஷ் ஆட்சியை ஆதரித்தவர்களிடம் எவ்வித குரோதமும் காட்டவில்லை; அவர்களில் பலருக்குச் சுதந்திர பாரதத்தில் முக்கியமான பதவிகளும் தரப்பட்டன. இதனை வங்காள தேசம் பின்பற்ற வேண்டும்.

* * *

கிழக்கு வங்காளத்தில் போர் ஓய்ந்த பின்னரும், மேற்குப் பகுதியில் இந்தியா — பாகிஸ்தான் யுத்தம் நீடிக்கக்கூடும். இந்தியாவின் இழப்பையும் இன்னலையும் அதிகமாக்க வேண்டும் என்றே மேற்குப் பகுதியில் பாகிஸ்தானியர் போரை நீடிக்கக் கூடும். அவர்கள் நமக்கு நாட்டை இழந்தது போலவே காட்டிக்கொண்டு, உள்ளுக்குப் பின்வாங்கிக்கொள்ளக்கூடும். அவர்கள் நாட்டுக்குள் நாம் புகுந்தால், நம்மை ஆக்கிரமிப்பாளர் என்று குற்றம் சாட்டுவதற்கே இவ்விதம் செய்வர். இந்த விஷமத்துக்கு நாம் ஒருகாலும் ஏமாந்துவிடக் கூடாது. 1962ல் சீனம் செய்ததை நாம் பின்பற்றவேண்டும். இந்திய ராணுவத்துக்குத் தோல்வி தந்த பின் சீனம் தானாகவே தனது சட்டபூர்வமான எல்லை என்று அது கருதிய பகுதிக்கு ராணுவத்தைப் பின்வாங்கிக் கொண்டது. இவ்விதம் இப்போது பாகிஸ்தான் படைகள் வெற்றி பெறுவது சாத்தியமல்ல என்று நாம் நிரூபித்துக் காட்டிய பின், முடிந்தமட்டில் நமது எல்லைகளுக்கே திரும்பிவிட வேண்டும். அப்போதுதான் பாகிஸ்தான் மீது நாம் ஆக்கிரமிப்பு நிகழ்த்தியதாக அந்த நாடு குற்றம் சாட்ட இடமில்லாமற் போகும். ஆனால் பாகிஸ்தான் முன் அக்கிரமமாகப் பிடித்து வைத்திருக்கும் பாகங்களைக் காச்மீரத்துடன் மீண்டும் இணைத்து விடலாம்.

* * *

அமெரிக்கா, பாகிஸ்தானையே ஆதரிக்க முற்பட்டு, இந்தியாவை ஆக்கிரமிப்பாளர் என்று குற்றம் சாட்டி விருப்பதையும் நமக்கு ராணுவ உதவி மட்டுமின்றிப் பொருளாதார உதவியையும் கூட நிறுத்திவிட்டதையும் குறித்து நமது தேசத்தில் எழுந்துள்ள கோபம் இயல்பானதே. அமெரிக்கா இப்படிச் செய்யும் என்பது ஒருவிதத்தில் எதிர் பார்த்ததே. ஆனால் இதைவிட ஆச்சரியம் யாதெனில், ஜப்பானும் பொருளாதார உதவியை நிறுத்தி வைத்திருப்பதுதான். மற்ற இந்திய உதவிக் குழு நாடுகள், உலக பாங்கு ஆகியவையும் இவ்வாறே செய்யக் கூடும். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கு மிடையே சமாதானம் உண்டாகும் வரையில் அவை உதவியை நிறுத்தக் கூடும். இதுவே போரை நீடித்து, இந்தியாவைச் சங்கடப்படுத்துவதற்குப் பாகிஸ்தானுக்கு ஊக்கம் அளிக்கலாம்.

மொத்தத்தில், யுத்தம் காரணமாக இந்தியாவுக்கு ஏற்படக்கூடிய பொருளாதார, நிதிச் சுமைகள் — குறிப்பாக அந்நிய உதவி நிறுத்தப்படுவதால் — தாங்கவொண்ணாததாகும். பற்றாக்குறைக்குப் பரிகாரமாகப் பணவீக்கத்தை மேற்கொள்ளத் தோன்றும். ஆனால் பண வீக்கத்தின் எதிர் விளைவு நாட்டுக்கு மிகவும் பாதகமாக முடியும். எனவே பணவீக்கம் இன்றியே சுமையைத் தாங்க உறுதி கொள்ள வேண்டும். மக்கள் இவ்விஷயத்தில் போதிய விழிப்புப் பெற வேண்டும். இல்லாவிடில் தேசத்துக்குப் பெரும் தீங்கு உண்டாகும். பண வீக்கம் கூடாதென்பதால், இப்போது தயங்காமல் உடனே செய்ய வேண்டுவது, நான்காவது திட்டத்தை அடுத்த ஓரிரு வருடங்களுக்கு அமல் செய்யாது நிறுத்த வேண்டும். ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட திட்ட இனங்களை மட்டுமே தொடரலாம். நெருக்கடிக் காலத்தில் எல்லா விதமான வேலை நிறுத்தங்களையும் கதவடைப்புக்களையும் தடை செய்வதும், சம்பள உயர்வைத் தடுப்பதும் விவேகமாயிருக்கும். யுத்தம், ராணுவம் தவிர மற்ற எல்லா இனங்களிலும் மத்திய, மாநில பட்ஜெட்கள் வரவையும் செலவையும் ஈடுகட்டுபவையாகவே இருத்தல் வேண்டும் — பற்றாக்குறை பட்ஜெட் வகுப்பதை அநுமதிக்கக்கூடாது. இவ்விஷயத்தில் மிகுந்த கண்டிப்புடன் செயல்பட வேண்டும். இந்தியாவில் தற்போதுள்ள எல்லாப் பண்ணைகளும் ஆலைகளும் அதிகபட்ச உற்பத்தியில் ஈடுபடுமாயின், நமது தேசிய உற்பத்தியை மேலும் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புக்கு உயர்த்துவது சிரமம் அல்ல. அவ்விதம் செய்தால், யுத்தத்தால் ஏற்படும் பற்றாக்குறை தவிர்க்கப்படும். அதிகப்படி ஷிப்ட்டுகள் வைத்து எல்லா நிறுவனங்களிலும் அவற்றின் பூரண சக்தியையும் பயனாக்கி உற்பத்தியை உயர்த்துவதால் ஏராளமானவர்களுக்கு வேலை வாய்ப்புக்களும் கிடைக்கும். யுத்த முயற்சியின் காரணமாக மற்ற பல நாடுகளில் தொழிற் திறனும், தேசிய ஒருமைப்பாடும் பெரு வளர்ச்சி கண்டன. இந்தியாவிலும் ஏன் அவ்விதமே நடக்கக் கூடாது?

பாகிஸ்தானத்தின் முட்டாள்தனம் காரணமாக இன்று நம்மிடை ஏற்பட்டுள்ள மகிழ்ச்சிக்குரிய அரிய ஐக்கிய உணர்வை முற்றிலும் பயன்படுத்திக் கொண்டு தேசிய ஒருமைப்பாட்டையும், அதிகபட்ச உற்பத்தியையும் வளர்ப்போமாக.

ராஜாஜியின் கருத்துக்கள்

மணல் அஸ்திவாரம் இடிந்தது

ஜின்னு தமது பிடிவாதத்திஞல் கட்டிய பாகிஸ்தானே, இப்போது யாஹ்யா கான் தமது பிடிவாதத்தால் இடித்து விட்டார். ஜின்னு உறுதியான அஸ்திவாரமில்லாமல், மணல் மீது • கோட்டை கட்டினுர். அது இடிந்து போயிற்று.

'பாகிஸ்தான் தனிநாடாகப் பிரியலாகாது; பாதுகாப்பு, வெளி விவகாரம் ஆகியவற்றில் இந்தியாவும் அதுவும் கூட்டாகச் சமஷ்டி முறையில் இயங்க வேண்டும்' என்று ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. இதற்கு "ஸி. ஆர். சூத்திரம்" என்றே அப்போது பெயர் வழங்கியது. காந்தி மகான் விரும்பிய இந்த யோசனைக்கு ஜின்னு விவேகத்துடன் உடன்பட்டிருந்தால் இந்தியா — பாகிஸ்தான் சமஷ்டியாக உருவாகி, ஒரு சக்தி வாய்ந்த ஆசிய துணைக் கண்டமாகக் கற்பாறை அஸ்திவாரத்தின் மீது நிலைத்து நின்றிருக்கும். ஜின்னு இதனை ஏற்காமல் தனிப் பாகிஸ்தானுக்கு முனைந்து நின்றபோதே பாகிஸ்தானின் துர்ப்பாக்கியத் தலைவிதி நிர்ணயமாகி விட்டது.

'இந்தியா சுதந்திரம் அடைந்தால் பெரும்பான்மையினர் சிறுபான்மையினருக்குக் கொடுமை செய்வர்; எனவே பிரிட்டிஷ் ஆட்சி நீடிப்பதே நல்லது' என்று கருதியவர் ஜின்னு. தாம் காங்கிரஸோடு சமரஸம் செய்து கொள்ளாமலே இருந்தால் பிரிட்டன் இந்தியாவிலிருந்து வெளியேறாது என்றும் எண்ணினுர் அவர். "பிரிட்டன் என்ருவது வெளியேறும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா என்ன?" என்று என்னிடமே அவர் காந்திஜி ஆகாகான் மாளிகையில் சிறைப்பட்டிருந்தபோது கேட்டிருக்கிருர். தேசப் பிரிவினையைத் தாம் விடாமல் பிடித்துக் கொண்டால், காங்கிரஸ் அதற்கு ஒப்புதல் தராது, எனவே பிரிட்டிஷ் ஆட்சியும் நீடிக்கும் என்று நினைத்தார் ஜின்னு. காந்திஜி அங்கீகரித்த சமஷ்டித் திட்டத்தையும் இதனுலேயே நிராகரித்தார். ஆனுல் அவர் எதிர்பார்த்ததற்கு மாருகக் கடைசியில் காங்கிரஸ் தேசப் பிரிவினைக்கு ஒப்புதல் தந்து விட்டது. பிரிட்டனும் வெளியேறி விட்டது. இப்படியாக வீண் பிடிவாதமும், சூழ்ச்சியும் தன்னைத் தானே மிஞ்சிப் போய் பாகிஸ்தான் பிறந்தது.

மதம் என்ற ஒன்று தவிர, கிழக்கு வங்க மக்களின் இனம், மொழி, பழக்க வழக்கம் அனைத்துமே மேற்கு பஞ்சாபிலிருந்து அவர்களை ஆண்டு வந்தவர்களுக்கு மாருனவை. எனவே மணல் அஸ்திவாரத்தில் கட்டிய வீடாயிற்று பாகிஸ்தான். இந்த அஸ்திவாரம் பிளந்து, கிளர்ச்சி உண்டாவதற்கு இத்தனைக் காலமாயிற்று. மேற்குப் பாகிஸ்தானும் கிழக்குப்பாகிஸ்தானும் பிரிந்து தான் போகும் என்று அப்போதே நானும் மவுண்ட்பேட்டன் பிரபுவும் எதிர்பார்த்தோம். இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின், நாங்கள் எதிர்பார்த்தது மெய்யாகி விட்டது.

இதனுல் இனி நாம் செய்வதற்கு எதுவும் இல்லை என்று அர்த்தமாகாது. இந்தியா—பாகிஸ்தான் இரண்டையும் காக்க ஒரு வழி தேட இனியும் இடம் உண்டு. இப்போதைய போர் முடிந்த பின் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தலாம்.

முன்பு வகுக்கப்பட்ட இந்தியா — பாகிஸ்தான் சமஷ்டி பற்றி மீண்டும் சிந்தனை செலுத்தினுல்தான் ஜனநாயகம் நமது உபகண்டத்தில் காக்கப்படும் என்று ஸ்ரீ வில்ஹெல்ம் வான் பொச்சாமர் என்ற ஜெர்மன் அறிஞர் எனக்கு எழுதியுள்ளார்.

வாக்குறுதித் தகர்ப்புச் சகாப்தம்

முன்னுள் மன்னருக்கு மானியம் தருவது காலத்துக்குப் பொருந்தாத பத்தாம் பசலித்தனம் என்று பிரதமர் வர்ணித்திருக்கிருர். இன்னுெர் அர்த்தத்தில் அவர் சொல்வதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஸ்ரீமதி இந்திரா அம்மை இந்தியாவில் தொடங்கியுள்ள



புதிய சகாப்தத்தில் வாக்குறுதிகளை மதிப்பதென்பது காலத்துக்குப் பொருந்தாத பத்தாம்பசலித்தனமாகத்தானே ஆகிவிட்டது? முன்னாள் மன்னர்கள் தாங்கள் ஆற்றவேண்டிய காரியங்களைச் செய்து, அதற்குப் பிரதியாகப் பாரத அரசிடமிருந்து மானியம் பெறுவதாக வாக்குப் பிரமாணம் பெற்றிருந்தனர். அவர்கள் தங்கள் சம்ஸ்தானங்களை இந்திய யூனியனுடன் இணைத்துத் தமது தரப்பின் பொறுப்பை நிறைவேற்றினர். அப்போது பாரத அரசாங்கத் தரப்பில் வாக்குத் தரப்பட்ட மானியம், 'காலத்துக்குப் பொருந்தாது' என்று இப்போது வருணிக்கப்படுகிறது!

அரசியல் மூல சாஸனம் வாக்குறுதி தந்த அடிப்படை உரிமைகளை இந்திரா ஆட்சியினர் உறுதியாகத் தகர்ப்பதைப் பார்க்கிறோம். சாஸனத்தின் மூன்றாம் பகுதியில் தரப்பட்ட மக்களின் உரிமைகளை நான்காம் பகுதியில் தரப்பட்ட சர்க்கார் கொள்கைகளுக்குக் கீழ் அடக்கி விடுவதற்காக சாஸனத்துக்கே அனர்த்த வியாக்கியானம் தருகிறார்கள். இதுவே 1971ம் ஆண்டின் சோகக் கதை. பகுத்தறிவினாலோ, நாகரிக உலகம் ஒப்பும் சட்ட முறைப்படியோ இந்த அனர்த்த வியாக்கியானத்தை நிலைநாட்ட முடியாது. பெரும்பான்மையின் அசுர பலத்தாலேயே இதை நிலைநாட்ட முடிந்திருக்கிறது.

ஈசுவரனை வாழ்த்துகிறோம்


பாரதம் சுதந்திரம் அடைந்தவுடனேயே, இனி பொருளாதார சுதந்திரம் அடையப் பாடுபட வேண்டும் என்று தேசத் தலைவர்கள் கூறினார்கள். இதற்கு முக்கியமான தேவை அந்நியச் செலாவணி. காந்தி மகான் வாக்கைக் கேட்டு, வீடு வாசல் சொத்து சுதந்திரம் அவ்வளவும் துறந்து தடியடி பட்டுச் சிறை சென்றது எவ்வளவு மகத்தான சேவையோ, அதற்கு இம்மியும் குறைந்ததல்ல, நமது நாட்டில் பொருள் உற்பத்தி செய்து வெளிநாடுகளில் விற்று, டாலராகவும், ஸ்டர்லிங்காகவும், யென்களாகவும் ரூபாய்களாகவும் அந்நியச் செலாவணியைச் சம்பாதிப்பது என்று தேசத் தலைவர்கள் கூறினார்கள். இத்துறையில் மகத்தான சேவை செய்து வருபவர் ஈசன் என்ஜினீரிங் கம்பெனியின் பிரதம நிர்வாக டைரக்டரான திரு கே. ஈசுவரன். இவரது மின்சார டிரான்ஸ்பார்மர்களை உலகில் பல நாடுகள் விரும்பி வாங்கி மேற்குறிப்பிட்ட அந்நியச் செலாவணிகளை வழங்கி வருகின்றன. இப்படி அருமையான மின்சாரப் பொறி இயல் துறை வர்த்தகத்தில் பாரத நாட்டுக்குப் பெயரும் புகழும் ஈட்டித் தரும் திரு கே. ஈசுவரன், பாரதத்தின் பொறி இயல் வர்த்தக வளர்ச்சிக் குழு (Engineering Export Promotion Council, India) வுக்கு 1971–72ம் ஆண்டின் உப தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை அறிந்து மகிழ்கிறோம். இவரது பதவி காலத்தில் பாரதத்தின் வெளி உலக வர்த்தகம் மேலும் மேலும் பெருகுமாக.



திருப்புல்லாணித் திருப்பணி

இராமேசுவர யாத்திரையானது திருப்புல்லாணியில் உள்ள ஸ்ரீ ஆதி ஜகந்நாதப் பெருமாளை வணங்கிய பின்பே நிறைவுறுகிறது என்பது ஐதிகம். பாண்டிய நாட்டில் உள்ள பதினெட்டு வைணவத் திருப்பதிகளில் நாலாவது திவ்ய தேசமாக விளங்குவது தர்ப்பசயனம் என்ற திருப்புல்லாணி. இவ்விடத்தில் வானர சேனையுடன் கடலைக் கடக்க உதவுமாறு வருண பகவானைப் பணித்து, ஸ்ரீ ராமபிரான் தர்ப்பைப் புல்லின் மீது சயனித்து இருந்ததால் தர்ப்பசயனம் என்ற பெயர் ஏற்பட்டது. புத்திரப் பேறு இல்லாதவர்கள் இங்குள்ள ஸ்ரீ ஆதி ஜகந்நாதப் பெருமாளை வணங்கி, நாகப் பிரதிஷ்டை செய்வது பிரசித்தம்.

ஆதி ஜகந்நாத ஆலயத்தின் ராஜகோபுரம் காலப் போக்கில் பழுதடைந்துள்ளது. தற்போது திருப்பணிக் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. சக்கர தீர்த்தத்தை ஒரு சிறிய தெப்பக்குளமாக அமைத்துச் சுற்றிலும் தென்னங் கன்றுகளும் புஷ்பச் செடிகளும் வைத்துச் சோலையாகத் திருத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஆலயச் சிப்பந்திகளுக்குக் குறைந்த செலவில் வீடுகள் கட்டுவதாக இருக்கிறது. இதற்கெல்லாம் செலவு உத்தேசமாக ரூபாய் லட்சத்து எண்பதினாயிரம் ஆகிறது. பக்தர்கள் இந்தப் புனிதமான கைங்கரியத்தில் ஈடுபட வேணும். தொகையை "அட்மினிஸ்ட்ரேஷன் செக்ரட்டரி, திருப்புல்லாணி திருப்பணிக் கமிட்டி, இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானம், இராமநாதபுரம்" என்ற முகவரிக்கு அனுப்பலாம்.





FDSAS-1664TH-A

இசை விழா



ஸ்ரீ பாபநாசம் சிவன்

இவ்வாண்டு மியூஸிக் அகாடெமி விழாவுக்கு பிரம்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்கள் தலைமை தாங்கி, 'சங்கீத கலாநிதி'யாகப் போவது பெருமகிழ்ச்சிக்குரிய விஷயம். தமிழ் நாட்டின் தலைசிறந்த சாகித்திய கர்த்தர். மும்மூர்த்திகள், சுவாதித்திருநாள், கோபால கிருஷ்ண பாரதியார் போல் தமது வாழ்நாளிலேயே சாகித்திய உலகில் சாசுவதச் சுடர் தாரகையாகிவிட்டவர். இப்படிப்பட்ட மாபெரும் வாக்கேயக்காரரும், மகா வித்வானும், பக்திமானும், பண்பாளருமான பாபநாசம் சிவன் அவர்கள் எப்போதோ சங்கீத கலாநிதியாகிவிட்டவர். அதை இப்போது அகாடெமி வாயிலாக உறுதிப்படுத்துகிறார்கள், அவ்வளவே! இறைவனுக்கு, இன் தமிழுக்கு, இசைக் கலைக்கு அற்புதப் பணி செய்யும் இந்த பீஷ்ம பிதாமகரைக் கௌரவிப்பதில் அகாடெமிக்கே கௌரவம்.

ஸ்ரீ சிவன் அவர்களுக்குப் பேராதரவு தந்தவர்களில்—அவரது மேலான இசை ஆதரவைப் பெற்றவர்களில் — முக்கியஸ்தரான ஸ்ரீமதி ருக்மிணி தேவி அவர்கள் சதஸுக்குத் தலைமை தாங்கி, சிவனுக்கு விருது சூட்டுவது, சர்க்கரைப் பந்தலில் தேன் மழை பொழிவதாகும்.

தமிழிசை விழாவுக்குத் தலைமை தாங்கி 'இசைப் பேரறிஞ'ராகிறார் மதுரை திரு சோமசுந்தரம் அவர்கள். வயதில் இளையவராயினும் பல்லாண்டுகளாக முன்னணி வித்வானாகத் திகழ்பவர் அவர். அற்புதமான சுருதி சுத்தமும், வளமான சாரீரமும், கட்டுக்கடங்காத கற்பனையும், சிறந்த தாள ஞானமும், அர்த்த ஞானமும் உள்ளவர். பண்டித — பாமரர்களின் பேராதரவைப் பெற்று இசைத் தமிழுக்குத் தொண்டு செய்பவர் திரு சோமு.

முடிகொண்டான் பிரம்மஸ்ரீ வெங்கடராமய்யர் அவர்கள் இன்று கர்நாடக சங்கீத 'அதாரிடி'களில் முதன்மை ஸ்தானம் வகிப்பவர். மகத்தான இசை மரபிலே வந்தவர். அவரது வித்வத் ஈடிணையற்றது. மியூஸிக் அகாடெமி விவாதங்களில் அவரது நிபுணத்துவம் சகல துறைகளிலும் மிளிர்ந்திருக்கிறது. இப்படிப்பட்ட இசை அறிஞர் இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸின் இவ்வருட விழாவுக்குத் தலைமை தாங்குவது பொருத்தமே.

இசை விழாத் தலைவர்கள் இசை உலகுக்குப் பயனுள்ள யோசனைகள் அளிப்பார்கள் என நம்புகிறோம். அவர்களுக்கு நமது மனமார்ந்த வாழ்த்துக்களை அளிக்கிறோம்.

அட்டைப்படம்: அடையாறு சகோதரிகள்.



முடிகொண்டான்
ஸ்ரீ வேங்கடராமய்யர்



ஸ்ரீமதி ருக்மிணிதேவி



மதுரை ஸ்ரீ சோமசுந்தரம்

சேவையே மேலான பாக்கியம்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

மனிதனாகப் பிறந்தவனுக்கு எவ்வளவோ பாக்கியங்கள் உண்டு. எல்லா பாக்கியங்களுள்ளும் மேலான பாக்கியம் பிறருக்குச் சேவை செய்வதே.

நமக்கு எத்தனையோ கஷ்டங்கள். வேலையில் தொந்தரவு, சாப்பாட்டுக்கு அவஸ்தை, வீட்டுக் கவலை — இத்தியாதி இருக்கின்றன. அவரவரும் தமது குடும்பத்துக்காகச் 'சேவை' என்று தெரியாமலே சேவை செய்கிறோம். அதோடு நமக்குச் சம்பந்தமில்லாத குடும்பத்துக்கு, ஊருக்கு, நாட்டுக்கு, சர்வ தேசத்துக்கும் நம்மால் முடிந்த சேவையைச் செய்ய வேண்டும். நம் சொந்தக் கஷ்டத்துக்கு நடுவில் இது வேறு என்று எண்ணக் கூடாது. இப்படிச் சேவை செய்வதால் சொந்தக் கஷ்டத்தையே மறக்க வழி உண்டாகும்.

மனிதர்களுக்கு மட்டுமின்றி, மாடு போன்ற ஜீவன்களுக்கும் சேவை செய்ய வேண்டும். யாகம், யக்ஞம், தர்ப்பணம், திவசம் முதலியன இந்த உலகத்திலிருப்பவர்களுக்கு மட்டுமின்றி மற்ற உலகத்திலிருப்பவர்களுக்கும் நம் சேவையை விஸ்தரிக்கின்றன என்ற உணர்வோடு அவற்றைச் செய்ய வேண்டும். இவையெல்லாம் மந்திரத்தோடு சேர்த்துச் செய்யப்படும் சேவை.

நம்மைப் போலவே சேவை செய்ய விருப்பம் உள்ளவர்களை எல்லாம் சேர்த்துக் கொண்டு எல்லாரும் ஒரு சங்கமாக, ஒரே அபிப்பிராயமாக இருந்து கொண்டு சேவை செய்வது ஸௌக்கியம். அப்படிப் பலர் கூடிச் செய்யும்போது நிறையப் பணி செய்ய முடியும். சத்தியத்தாலும் நியமத்தாலும் இப்படிப்பட்ட சங்கங்கள் உடையாமல் காக்க வேண்டும். பரோபகாரம் செய்பவர்களுக்கு ஊக்கமும், தைரியமும் அத்தியாவசியம்.

பொழுதுபோக்கு என்று ருசியாகத் தின்கிற இடத்திலும், கண்களைக் கவர்கிற காட்சி சாலைகளிலும் பொழுதை வீணாக்குவது தவறு. இந்தப் பொழுதில் பிறருக்குச் சேவை செய்வதில் ஈடுபட வேண்டும்.]


வாழ்க்கைத் தொல்லைகளிடையே உல்லாசமாகப் பொழுதுபோக்குவது ஒரு தப்பா என்று கேட்பீர்கள். உங்களுக்குச் சொல்கிறேன், பரோபகாரமாகச் சேவை செய்தால் அதுவே பெரிய உல்லாசம் என்று தெரியும். அதுவே விளையாட்டு. அதுவே இன்பம்.

கிருஷ்ண பரமாத்மா இப்படித்தான் வெளியிலே விளையாடுவதாகத் தெரிந்தாலும், உள்ளே அத்தனையும் பரோபகார சேவைதான் செய்தான். எத்தனை பேருடைய, எத்தனை எத்தனை கஷ்டங்களை விளையாட்டாகவே போக்கடித்தான்? குன்றைத் தூக்கிப் பிடித்தது விளையாட்டு மாதிரி இருக்கும். ஆனால் கோபர்களைக் காப்பதற்கே அவ்வளவு பெரிய மலையைப் பாலகிருஷ்ணன் தூக்கினான். சின்னக் குழந்தை விஷம் கக்கும் காளிங்கனின் படத்திலே நர்த்தனம் செய்தது வெளியிலே பார்த்தால் விளையாட்டு; உண்மையில் அதுவும் ஜனங்களைக் காத்து, அவர்களுக்கு நீர்நிலையை மீட்டுத் தருவதற்காகச் செய்த சேவைதான். இப்படித்தான் எத்தனையோ விளையாட்டுக்கள் செய்தான். அத்தனையும் சேவை. அவனைப்போல் விளையாடினவன் இல்லையோ அவனைப் போல் சேவை செய்தவனும் இல்லை என்று கிருஷ்ண பரமாத்மாவின் உதாரணத்தில் பார்க்கிறோம். லௌகிக சேவை மட்டும் இல்லை. ஞான சேவையும் நிறையச் செய்தான். அர்ஜுனன், உத்தவர் போன்றவர்களுக்கு மகா உபதேசங்கள் செய்தான். சேவை, ஞானம், விளையாட்டு எல்லாம் அவனிடம் ஒன்றாக இருந்தன. துளிக்கூடப் பற்றுதல் இன்றியே இத்தனையும் செய்தான். சிரித்துக்கொண்டே சாந்தமாக இவ்வளவையும் செய்தான். நம்மிலும் சேவை செய்கிறவர்களுக்கெல்லாம் இந்தச் சிரிப்பும், சாந்தமும் எப்போதும் இருக்க வேண்டும் — தைரியம், ஊக்கம் இவற்றோடு.

பகவான் எடுத்த பல அவதாரங்களில் கிருஷ்ணாவதாரத்தில்தான் சேவை அதிகம். ராமாவதாரத்தில் சேவைக்கென்றே ஆஞ்சநேய ஸ்வாமி வந்தார். இவர்கள் இருவரையும் ஸ்மரித்து நாமும் சுத்தமான உள்ளத்துடன், எந்த சுயநலமும் கருதாமல், எவ்வித விளம்பரத்துக்கும் ஆசைப்படாமல் சேவை செய்ய வேண்டும்.

நமக்குத் 'தீட்டு' ஏற்பட்டால் அச்சமயத்தில் உலகோடு சேர முடியாமல் ஒதுங்கியிருக்கிறோமல்லவா? அவ்விதமே உலகுக்கு உபயோகமாகச் சேவை செய்யாத ஒவ்வொரு நாளும் நமக்குத் தீட்டு நாள் என்று கருதி அவரவரும் தம்மாலான சேவையில் ஈடுபட வேண்டும்.

படித்துப் பாருங்கள்!



காவிரி அன்னை வாழ்த்துகிறாள்!

காவிரி தான் பாயும் இடங்களிலெல்லாம் நிலத்தை வளப்படுத்துகிறாள்; விவசாயம் செழிக்க உதவுகிறாள்.

இதன் விளைவாகக் காவேரிக் கரையில் செல்வம் கொழித்தது. அதிகக் கவலையற்ற வாழ்க்கை நிலவியது. சகலவிதமான கலைகளும் சிறந்தன. அறிஞர்களும் கவிமான்களும் தோன்றினார்கள். நாகரிகம் தழைத்தது. இறையுணர்ச்சி மிகுந்தது. வரலாறு பிறந்தது. சாம்ராஜ்யங்கள் ஸ்தாபிதமாயின. பொறாமையால் போர்கள் மூண்டன. வீரம் விளைந்தது.

இப்படி ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தனவாக எத்தனையோ பல அம்சங்களைக் காவிரிக் கரையில் காணலாம். இவ்வளவையும் ஆய்ந்து பார்த்து உள்ளடக்கியதோடு, ஒரு நாவலைப் படிக்கும் சுவாரசியத்தையும் நூலில் ஏற்படுத்தியிருக்கிறார்கள், 'புக்வென்சர்' சார்பில் திரு சிட்டியும் திரு தி. ஜானகிராமனும். ஒரு புத்தக வெளியீட்டு நிறுவனம் இவ்விதம் அரியதொரு நூல் உருவாக முயற்சி எடுத்துக் கொண்டு காரும் வழிச் செலவுக்குப் பணமும் கொடுத்து எழுத்தாளர் இருவரையும் ஓர் ஓவியரையும் பல இடங்களுக்கு அனுப்பி வைப்பது இதுதான் முதல் தடவையாக இருக்கும் என்று தோன்றுகிறது.

எழுத்தாளர்களும் ஓவியர் கலாசாகரம் ராஜகோபாலனும் காவிரியின் பிறப்பிடம் முதல் காவிரி கடலில் கலக்கும் இடம் வரை அந்நதிக் கரையோரமாகவே சென்றிருக்கிறார்கள். குக்கிராமம் முதல் பெரிய பெரிய நகரங்கள் வரை பார்த்திருக்கிறார்கள். மழையில் நனைந்து வெய்யிலில் உருகி, சாப்பாடு கிடைக்காது திண்டாடி, எதிர்பாராத அபரிமிதமான உபசரிப்பில் திணறிப் பலவிதமான அனுபவங்களை அடைந்திருக்கிறார்கள். அந்த அனுபவங்களை விவரிக்கும் பயண நூல் 'நடந்தாய்; வாழி காவேரி!' இது பயண நூலாக மட்டுமின்றி ஆராய்ச்சி நூலாகவும் திகழ்கிறது. அது மட்டுமா? இலக்கிய நயமும் மிகுந்திருக்கிறது. வரலாற்று நிகழ்ச்சிகளை விவரிக்கிறது, கர்ண பரம்பரைக் கதைகளைக் கூறுகிறது.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல 'அமைதி' என்ற ஓர் அத்தியாயத்தின் சிறப்பை மட்டும் இங்கு காண்போம்:

இலக்கிய நயம்:

☐ நாங்கள் போய்க் கொண்டிருந்த சாலையுடன் பல வளைவுகளில் நெருங்கியும் விலகியும் வந்து சென்று காவேரி எங்களுடன் தொட்டு விளையாடிக் கொண்டிருந்தாள்.

☐ இருட்டு, மாலையை முட்டித் தள்ளிக் கொண்டு ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிட்டது.

☐ மூன்று பகுதிகள் கொண்ட ஆலயத்தின்மேல் மிகவும் அழகான வேலைப்பாடு கொண்ட மூன்று விமானங்கள், தொலைவில் கேட்கும் மெல்லிய நாதஸ்வர ஒலிபோல் எழுந்து நிற்கின்றன.

☐ (சோமநாதபுரம் சென்னகேசவர்) ஆலயத்தின் உள்ளிருக்கும் போது ஆபரணங்கள் நிறைந்த அழகான சம்புடம் ஒன்றுக்குள் நடமாடுவது போல் தோன்றியது.

கர்ண பரம்பரைக் கதைகள்:

☐ ராணி ரங்கம்மாளிடமிருந்த விலைமதிப்பற்ற மூக்குத்தி ஒன்றைக் கவர்ந்துகொள்ள மைசூர் மன்னர் திட்டமிட்டார். தம் சூழ்ச்சி பலிக்காமல் போனதும் அவர் தலைக்காட்டு மீது படையெடுத்து வந்தார். போரில் திருமலை ராஜா இறந்துவிட்டதும் பத்தினி ராணி ரங்கம்மாள் காவேரிக்கு விரைந்து மாலங்கி என்ற இடத்தில் மூக்குத்தியை நீரில் எறிந்துவிட்டுத் தானும் மூழ்கி உயிர் நீத்தாள். அப்போது ஒரு சாபமிட்டாள்: தலைக்காடு முழுவதும் மண் மூடிப் போகட்டும்! மாலங்கி ஒரு சுழற்களையாகட்டும்! மைசூர் மன்னர்களுக்குச் சந்ததி இல்லாமல் போகட்டும்!"

இந்தக் கதையைக் கூறிவிட்டு முத்தாய்ப்பாக ஆசிரியர்கள் எழுதுகின்றனர்:

சமவெளிப் பரப்புத் தோற்றத்தை உடைய அந்தப் பகுதியில் தலைக்காட்டில் மட்டும் எங்கிருந்து இவ்வளவு மணல் வந்தது என்பது ஆச்சரியமாகவே இருக்கிறது. ஆண்டுதோறும் பத்தடி தூரம் விகிதம் நகர்ந்து வந்து இந்த மணற் குன்றுகள் மக்களின் வாழ்வையே ஆக்கிரமித்துக் கொள்கின்றன. கண்ணுக்கெதிரே அந்த இயற்கை நடவடிக்கையைப் பார்த்தபோது எங்களுக்கு மனித வாழ்க்கையில் ஏற்படும் பல பெரும் இடையூறுகள் பற்றிய அச்சம் தரும் உணர்ச்சி தோன்றிற்று.

திருமுக்கூடலில் லிங்கத்தின் தலையில் ஒரு சிறு பள்ளம் இருப்பதற்கான காரணக் கதையும் தரப்படுகிறது. முடிவில்:

அப்பள்ளத்தில் எப்போதும் சிறிது நீர் தேங்கியிருக்கும். கங்கை தீர்த்தம் என்று கருதப்படும் அந்நீர் பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது.

நகைச்சுவை:

ஸ்ரீரங்கப் பட்டணத்துக்கு அருகே காவேரிப் பாலத்தைக் கடந்து பேட்டை வாயிலில் நுழைந்ததும் ஐந்தாறு பேர் கொண்ட ஒரு குழு எங்களை எதிர் நோக்கி வந்து காரை நிறுத்திற்று. நாங்கள் வருவது பற்றி எப்படியோ தெரிந்து கொண்டு வரவேற்புக் குழு ஒன்று அமைத்துவிட்டார்கள் என்று நினைத்து மாலைகளை வாங்கிக் கொள்ளத் தயாரானோம். காரை நிறுத்தியவர்கள் சுகாதாரத் துறை ஊழியர்கள்; காலராத் தடுப்பு ஊசி போடுவதற்குத்தான் வந்தார்கள் என்று தெரிந்தவுடன்,

காரோட்டியை விரையச் சொல்லி விட்டோம். கார், வேகமாக ஓட்டுவதற்குத்தான்: மெதுவாகச் செலுத்துவதற்கோ, நிறுத்துவதற்கோ அல்ல என்ற அடிப்படைக் கொள்கையைத் தன்னுடைய தத்துவமாகக் கொண்டிருந்த எங்கள் காரோட்டி மிகவும் மகிழ்ச்சியுடன் எங்கள் கட்டளையை நிறைவேற்றி வைத்தார்.

சமூக நோக்கு :

ஸ்ரீ ரங்கநாதர் கோயிலுக்குப் போகும் வழியில் திப்புவின் பிரசித்தி பெற்ற நிலவறை சிறைச்சாலையைப் பார்த்தோம். பூமி மட்டத்துக்கடியில் கட்டப்பட்டிருந்த குதிரை லாயம் போன்ற அந்தப் பெரிய கட்டடத்தைப் பார்க்கும்பொழுது அதற்கு ஏன் சிறைச்சாலை என்று பெயரிட்டார்கள் என்று எங்களுக்குப் புரியவில்லை. அந்தக் கட்டடத்தின் அமைப்பும் விசாலமும் இன்று சென்னை போன்ற நகரங்களில் 'வீடு' என்ற மங்களப் பெயரில் ஒருவனுடைய வாழ்க்கை வருமானத்தின் பெரும் பகுதிக்கு வாடகைகாக விடப்படும் பகுதிகளைவிட நன்றாகத்தான் இருந்தன !



" என்னிடமிருந்து குடை எடுத்துப் போனீர்களே, அதைத் திருப்பிக் கொடுங்கள். என்னிடம் அதைக்கொடுத்தவர் கேட்கிறார். அவருடைய சிநேகிதர் அதை அவரிடம் கொடுத்தாராம். குடையின் சொந்தக்காரர் அந்த சிநேகிதரைத் திருப்பித் தரும்படி கேட்கிறாராம் !"

நூறுபதாயிரம் கன அடி என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. வெள்ள நீரின் ஆழம் நாலு முதல் பத்து அடி வரை இருக்கும்.

□ சென்னகேசவர் ஆலயம் மூன்றடி உயரம் உள்ள ஒரு மேடையின் மேல் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த மேடையின் எட்டு மூலைகளிலும் அஷ்டகஜங்கள் நின்று கொண்டு ஆலயத்தைத் தாங்குகின்றன. ஆலயத்தைச் சுற்றி 210 அடி நீளமும் 172 அடி அகலமும் உள்ள ஒரு திறந்தவெளி. அதைச் சுற்றி 54 அறைகள் கொண்ட ஆளோடி போன்ற ஓர் அமைப்பு.

விவசாய நோக்கு :

□ வழியில் ஒரு தாழ்வான அணைக் கட்டைப் பார்த்தோம். அதற்கு மாதவ மந்திரி கட்டே என்று பெயர். விஜயநகர சாம்ராஜ்ய ராஜ வம்சத்தின் ஆசாரியரான வித்யாரண்யர் தான் அந்த அணைக்கட்டை அமைத்த மாதவ மந்திரி என்று சிலர் கருதுகிறார்கள். திருமுக்கூடல் - நர்சிபூர் என்ற அந்தத் தாலுக்கா பகுதி மைசூரின் நெற்களஞ்சியமாக விளங்குகிறது. காவிரியின் பாசனத்தால் கழனியெங்கும் கதிர் குலுங்கும் காட்சி சுற்றிலும் நிலவுகிறது.

□ திருமுக்கூடல் அருகே சிற்சில இடங்களில் கோடை காலத்தில் கற்கள் அதிகம் இல்லாத பகுதிகளில் காவேரி படுகையை ஒட்டி முலாம், வெள்ளரி போன்ற பழ வகைகள் பயிரிடப்படுகின்றன.

வரலாற்று நோக்கு :

ஸ்ரீரங்கப் பட்டணம் பல முறை முற்றுகையிடப் பட்டது. பதினேழாம் நூற்றாண்டில் ஒரு முறை பிஜப்பூர் படைகள் அந்த நகரத்தை முற்றுகையிட்டுத் தோல்வியடைந்தன......

என்று தொடங்கும் வரலாற்றுப் பகுதி அதன் பின்னர் எந்தெந்த ஆண்டில் யார் யார் ஸ்ரீரங்கப் பட்டணத்தை முற்றுகையிட்டனர், ஒவ்வொரு தடவையும் எவ்வளவு பணம் கொடுத்து எந்தவிதமான சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது என்ற விவரங்களை வெளியிட்டு இறுதியில் இவ்வாறு முடிகிறது:

பதினாறு ஆண்டுகளுக்குப் பின் வாட்டர்லூ போரில் நெப்போலியனை முறியடித்த வெலிங்டன் பிரபு அன்று (1799) கர்னல் வெல்லஸ்லி என்ற பெயரில் பிரிட்டிஷ் படைகளுக்குத் தலைமை தாங்கித் தாக்குதல் நடத்தினான். அந்தப் போர்தான் திப்புவின் இறுதி முயற்சியாக முடிந்தது. அதன் விளைவாக ஸ்ரீரங்கப்பட்டணம் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வசமாகிப் பின்னர் மைசூர் சமஸ்தானத்துக்கு ஐம்பதாயிரம் ரூபாய்க்குக் குத்தகை விடப்பட்டது.

உன்னி நோக்கும் திறன் :

இந்நூலாசிரியர்கள் பல விஷயங்களை எவ்வளவு கருத்தூன்றிப் பார்த்தும் ஆராய்ந்தும் இருக்கிறார்கள் என்பதற்குச் சான்றுகள்:

□ மைசூர் ராஜ்யத்தில் பாயும் காவேரி நதியின் அகலம் சராசரி 300 முதல் 400 அடி அளவிருக்கும். திருமுக்கூடலில் உபநதியான கபிலையின் சங்கமத்துக்குப் பிறகு சிவசமுத்திரம் வரை காவேரியின் அகலம் அதிகரித்து விடுகிறது. பிரவாக சமயங்களில் அந்தப் பகுதியில் காவேரியில் பாயும் தண்ணீரின் அளவு விநாடிக்குச் சுமார் இரண்டு லட்சத்து

* * *

மேலே குறிப்பிட்டிருப்பனவற்றைவிட இன்னும் அதிகமாகவே சுவையானதும் உபயோகமானதுமான தகவல்கள் இந்நூலில் உள்ள ஒரே ஒரு அத்தியாயத்திலேயே இருக்கின்றனவென்றும் மொத்தமுள்ள பதினெட்டு அத்தியாயங்களையும் படிப்பதோ ஓர் அற்புதமான அனுபவமாகவே விளங்குகிறது.

கலாசாகரம் ராஜகோபாலின் சித்திரங்கள் புதுமையான இம்முயற்சிக்கு மேலும் புதுமை பெருகேற்றுகின்றன. புகைப்படங்களும் ஏராளம். 'காவேரி நடக்கும் வழி' என்ற தலைப்பில் ஒரு வரை படமும் (map) 'சென்னை வரும் காவேரி' என்ற தலைப்பில் ஓர் அனுபந்தமும் உள்ளன.

காவேரி நதி நீர் பங்கீடு பிரச்னை இன்னும் பிரச்னையாகவே இருந்து கொண்டிருக்கும் தருணத்தில் தமிழகம் பெருமைப்படக் கூடிய இந்தப் புத்தகம் வெளிவந்திருக்கிறது.

'நடந்தாய் வாழி, காவேரி' எழுதியவர்களைக் காவிரி அன்னையும் பதிலுக்கு மனமார வாழ்த்தி ஆசி கூறுவாள்.

கிடைக்குமிடம் : 'புக் வென்சர்' 14, தணிகாசலம் செட்டி தெரு. சென்னை-17; விலை : ரூ. 10.00.



தத்ரூபமான அழகுக் கோலம்...அதுவே டெக்கோலாம்

அலங்கார லாமினேட்



அசலுக்கு நகல் அடையாளம் தெரியாது. அச்சு என்றால் அதே அச்சு: டெக்கோலாம். பராமரிப்புத் தொல்லையே இல்லை - ஈரத் துணியால் துடைத்தால் போதும்; டெக்கோலாம் சூடு தாங்குவது, கறைபடியாதது!

உலகளந்த மரமுகப்புக்களை, ஒப்பற்ற தினுசுகளிலே, தேர்ந்தெடுக்கத் தருவது டெக்கோலாம். அழகின் திருக்கோலம்-அதுவே டெக்கோலாம்

லிண்டாஸ்-BHL DLM, 33-140 TH

பேகலைட் ஹைலாம் லிமிடெட் தயாரிப்பு



அம்மா

ரா. கணபதி

11. கட்டி பழுத்தது!

தாபத்தால் நாடியெல்லாம் சிதைந்து போகும்;
கவலையினால் நாடியெலாம் தழலாய் வேகும்;
கோபத்தை வென்றிடலே பிறவற்றைத் தான்
கொல்வதற்கு வழி என நான் குறித்திட்டேனே.

— பாரதியார்

பொழுது புலர்ந்தது.

''ஹரி — காளி; ஹரி — காளி; ஹரி — காளி'' என்று கையைத் தட்டிக் கொண்டே படுக்கையை விட்டு எழுந்தார் ராமகிருஷ்ணர். அவர் விழித்துக் கொண்டவுடனே உற்சாகக் கதிர்களை வீச ஆரம்பித்து விடுவார்: வேதாந்தி என்றால் உம்மணா மூஞ்சி ஆகிவிட வேண்டுமென்பதில்லை என்பதை வாழ்ந்து காட்டியவர் அவர்.

உடனேயே, ''மன்னி, இன்னிக்குப் பொன்னுங்கணிக்கீரை மசிச்சுடுங்கோ'' என்று குரல் கொடுத்தார்.

'ஹரி — காளி' தம்மை பாவ சமாதிக்குத் தூக்கிச் சென்றுவிடக் கூடாதென்றே கீரை மசியலுக்கு மனத்தைத் திருப்பினார்.

சாரதை நீர் முகந்து வரச் சென்றாள்; ராமகிருஷ்ணர் கால்வாய்க் கரைக்குப் போனார்.

வழியெங்கும் வரப்புக்களில் நிறைய ஜலம் இருந்ததால் மீன் பறி வைத்திருந்தார்கள்.

''மகாமாயையும் மநுஷனைப் பிடிக்கறதுக்கு எத்தனையோ மீன்பறி வைச்சிருக்கா. இவனும் அசட்டு மச்சமா அதிலே போய் மாட்டிக்கறான். பறிக்குள்ளே போறது மீனுக்குப் பரம சுலபமாயிருக்கு. அப்புறம் என்ன பாடு பட்டாலும் வெளியிலே வர முடியறதா?'' என்றார் ராமகிருஷ்ணர்.

''இந்த மாயையிலெல்லாம் எப்படி மாட்டிக்காம இருக்கிறது?'' என்று வினவினாள் சாரதை.

''மனசைப் பக்தி, பிரேமை இந்த இரண்டுலேருந்தும் அந்தண்டை இந்தண்டை நகர்த்தாமலே இருக்கணும். அதுதான் மாயையில் விழாம இருக்கிற வழி. காலங்கார்த்தாலே உனக்குப் பாடம் ஆரம்பிச்சுட்டேனேன்னு அலுத்துக்காதே. பிரேமையும் பக்தியும் வாழ்நாள் முழுதும் பாடம் கேட்டுண்டே இருக்க வேண்டிய விஷயம். ஜனங்களை ஒதுக்கிட்டு, ஏகாந்தத்துக்குப் போய்ப் பக்தி பண்ணறதைப் புரிஞ்சுண்டு கடைப்பிடிச்சுடலாம். ஜனங்களோடு இருந்துண்டே அவாகிட்டே பிரேமை காட்டறதுதான் ரொம்ப கஷ்டம். தன் மநுஷா—பிற மநுஷா என்கிற வித்தியாசம் தோணிண்டேதான் இருக்கும். தன் மநுஷான்னு சில பேர்கிட்ட வைக்கிற பிரேமைதான் மாயை; எல்லா மநுஷாகிட்டேயும் சமமா வைக்கிற பிரேமை தான் தயை.....''

பேச்சை நிறுத்தி யோசனையில் ஆழ்ந்தார். தயா தத்துவத்தை ஆராய்ந்தாரா? அல்லது சாரதையின் எதிர் காலத்தை ஆராய்ந்தாரா?

அவர் 'தன்' மநுஷ்யர்கள் என்ற குடும்பப் பொறுப்பே இல்லாதவர். இவளோ வருங்காலத்தில் அடியாருக்கெல்லாம் அன்னையாக இருக்கும் போதே, ஒரு குடும்பத்தின் தலைவியாகவும் இருந்து, அந்தக் குடும்பத்தின் கோளாறு படைத்த அங்கத்தினர்கள் செய்த நானாவித இம்சைகளையெல்லாம் அநுபவிக்கப் போகிறவள் ஆயிற்றே!

சாரதை நீர் முகர்ந்தாள். சிறிய வாய் கொண்ட குடம் 'குக்குளு குக்குளு' என்று சப்தமிட்டபடி நீரை முகர்ந்தது.

''ஜலம் ரொம்பாத வரையில் குக்குளு சத்தம் போட்டது. ரொம்பினவிட்டுச் சத்தமேயில்லே பாத்தியா? அப்படித்தான் நிறைகுடமா அமைதியா இருக்கணும்.'' — அமைதியே உருவாக நிற்கும் சாரதையை அன்புடன் பார்த்துச் சொன்னார் ராமகிருஷ்ணர்.

'எந்த ஆசை வடுவும் அவளிடம் இல்லே. இரவு வேளையைப் புனிதமாகக் கழித்துவிட்டுப் புது மலராக எழுந்து வந்திருக்கிறாள். தக்ஷிணேசுவரத்திலிருந்து கிளம்புமுன் அம்பாளிடம் நான் வேண்டிக் கொண்டேனே, தேவி அதற்கு நன்றாகச் செவிசாய்த்துவிட்டாள்!'

திரும்பி வரும் வழியில் எங்கோ எட்டத்தில் பொன்னுங்கண்ணிப் பாத்தி தெரிந்தது. முக்காடிட்டு, பூமியைப் பார்த்தே நடக்கிற சாரதைக்கு உள்ளன்

பானது அந்தப் பாத்தியை எப்படியோ காட்டிக் கொடுத்து விட்டது.

கீரையைக் களைந்தெடுக்கலானாள். பக்கத்திலிருந்த ஒரு வாழையிலிருந்து நார் எடுத்துக் கீரையைக் கட்டினாள்.

"ஒருதரத்துக்கு ரெண்டுதரமா, நன்னா அலசிக் கழுவிட்டு வாணலியிலே போடு. அப்பத்தான் மண் வாசனை போகும்" என்று 'அயனாக'ச் சமையல் குறிப்பு கொடுத்தார் வேதாந்த ஸ்வரூபர். குடும்ப வாழ்வே தெரியாதவர், குடும்ப வாழ்விலேயே ஊறியவனுக்கு அரிய ஆலோசனை தருகிறார் — சந்தேகமில்லை, அம்பாள்தான் அவருக்காக நெல்லைச் சரித்தாள்!

லாறா வீட்டு வண்டி அந்த வழியாக வந்தது. இந்தத் தம்பதியைக் கண்டதும் வண்டி நின்றது.

வண்டிக்காரன் "ஏறுங்க சாமிங்களே, தேவிங்களே" என்றான்.

"சாரு, ஏறிக்கோம்மா! நீங்கள்ளாம் பர்தாப் பொம்மனாட்டிகள். வண்டி உச்சியைத் தலை நிமிர்ந்து



பார்க்காமலே, உத்தேசமா இவ்வளவு உயரம் இருக்கும்னு நெனச்சு ஏறுவேள். ஆனால் மிதியிலே காலே வெச்சவுடனே உங்க பாரத்திலே வண்டி கொஞ்சம் கீழே இறங்கும்ங்கறது உங்களுக்கு நினைப்பு இருக்கிறதில்லே; தலையிலே இடிச்சுண்டுடறேள். அதனாலே, எப்பவுமே வண்டி உச்சி வாஸ்தவமா இருக்கறதைவிட அரை சாண் கீழே இருக்கறதாவே மனசுலே கணக்குப் போட்டுண்டு ஏறணும்.'' — சின்னச் சின்ன விஷயங்களையும் செவ்வை செய்தார் ராமகிருஷ்ணர்.

வண்டியில் பேசிக் கொண்டே போனார். ''இந்த உலகத்திலே சின்ன விஷயம், பெரிய விஷயம்னு வித்தியாசமேயில்லே. சின்னதுன்னு நெனக்கிறது பெரிசாயிடறது. பெரிசா நினைக்கறது பிசுபிசுத்துப் போறது. ஆனபடியாலே, சின்னதோ — பெரிசோ எந்தக் காரியத்தை எடுத்துண்டாலும் ஒரே மாதிரி கவனமா, சிரத்தையா அதைப் பண்ணணும்.''

வீட்டு வாசலில் வண்டி நின்றது.

சாரதை குடத்துடன் உள்ளே போனபோது, ''பார்த்தியா, நான் நெனேச்ச மாதிரியே ஆச்சு! வண்டியோட முதுகுப் பலகையிடுக்கிலே கீரைக் கத்தையைச் செருகினதை மறந்துட்டியே! சாதாரணமா இப்படித்தான் வண்டிலே போறவா விசிறி, கைக் கம்பு இதையெல்லாம் சொருகிட்டு மறந்தே போயிடுவா. வண்டிலே பிரயாணம் பண்றவா மறக்கக் கூடாத ஒரு விஷயம் இது'' என்று இன்னொரு சின்ன—பெரிய விஷயத்தைப் போதித்தார் ராமகிருஷ்ணர்.

''ஆனா, நீ கூடிய மட்டும் எங்கேயும் வெளிலேயே போகாதே!'' என்று தொடர்ந்த ராமகிருஷ்ணரின் உள்ளம் மிகப் பெரிய விஷயத்துக்குத் தாவி விட்டது. ''எங்கே போகணும், எதுக்காகப் போகணும்?'' என்று திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டார். தமது தேனினும் இனிய தீங்குரலில் கமலாகாந்தரின் கீதம் ஒன்றைப் பாடலானார்:

எங்கும் செலாதே மனமே எங்கும் செலாதே
தங்கியுள்ள இடத்திலேயே தங்கமாய்த் ததும்புவாய்
உள்ளிலேயே உள்ளிப் பார்த்தால்
உன்னதெலாம் உளத்தில் காண்பாய்
எங்கும் செலாதே மனமே எங்கும் செலாதே

ஸ்பரிசவேதியும் தராத தேவி ஸ்பரிசச் செல்வம்,
தரிசனமும் தரு கரங்கம் உன் மன அரங்கம்
அவனி முழுதும் அலைந்து திரிந்து அடைந்திட
வொண்ணாத

நவநிதியும் புறக்கடையில் குப்பையாய்க் குவியும்
புவனமாதா புனித ராஜ்யம் புத்தியுள் இருக்க—
எங்கும் செலாதே மனமே எங்கும் செலாதே!
கமலகாந்தன் கண்டுகொண்டான் உலகமான மந்த்ரம்
விமல மந்த்ரவாதி வடிவும் நிலையம் உனது உள்ளம்
எங்கும் செலாதே மனமே எங்கும் செலாதே!

கீத மாதுரியம் சாரதையின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. புக்ககத்தில் இருக்கிறோம் என்பதையும் மறந்து, கீரையைக் களைந்து கொண்டே, 'எங்கும் செலாதே' என்று முனகினாள்.

''ரொம்ப நன்னாயிருக்கே உன் குரல், நான் உனக்குப் பாட்டும் சொல்லித் தரேன்'' என்று ஆர்வமாகக் கூறினார் ராமகிருஷ்ணர்.

சமயகுரு, சமையல் குரு, சங்கீத குருவும் ஆகிறார்!

''இது வீடாவா இருக்கு? கூத்தாடிகளோட ஒத்திகைக் கூடமான்னா ஆயிடுத்து'' என்று எரிச்சலுடன் கூறினாள் பைரவி.

கூத்து என்ற வார்த்தையைக் கேட்டதும் ஹ்ருதயர், ''இன்னிக்குப் 'பாரிஜாத அபஹரணம்' யாத்ரா (நாடகம்) நடக்கப் போறது. திறந்தவெளி அரங்கத்திலே'' என்றார்.


வீட்டில் எல்லோரும் நாடகத்துக்குப் போக வேண்டும் என்று முடிவு செய்தனர்.

சாரதையும் ராமகிருஷ்ணரின் முகத்தைப் பார்த்தாள் — ஒப்புதல் கேட்கிற பாவனையில்.

ராமகிருஷ்ணரின் முகத்தில் நிர்தாட்சிண்ய பாவமே நிலவியது. ''பலபேர் கண்பட நீ திறந்தவெளியில் யாத்ரா பார்ப்பது எனக்குச் சம்மதமில்லே'' என்றார் கண்டிப்பாக.

''கொழந்தைதானே, ஆசையிருக்காதா? ஒரு நாளைக்கு.....'' என்று மன்னி வக்காலத்துப் பேசினாள்.

''ஒரு நாள் செய்யறதுதான், அப்புறம் இன்னொரு நாள், அதுக்கப்புறமும் இன்னொரு நாள்னு பல நாள் வழக்கத்துக்கு அஸ்திவாரமாயிடும். அடக்கத்தை விட்டு ஒரு காரியம் பண்ண ஆரம்பிச்சா, அதுவே மேலே மேலே தப்புலே இழுத்துண்டு போகும். சாதுவாகப் பூனை மாதிரி நடக்கற பையன் ஒருத்தனுக்கு பூட்ஸைப் பார்த்து ஆசை வரது. வாங்கிப் போட்டுக்கறான். உடனேயே டிம், டிம்னு நடக்கத் தோணறது. எங்கேயாவது மாடி ஏறினா, வெள்ளைக்காரன் மாதிரி தாட்பூட்னு ஓசை பண்றான். அதுக்கப்புறம் தானாகவே சீட்டி அடிக்கவும் ஆரம்பிக்கிறான். இந்த சமயத்திலே கையிலே பேனா இருந்துட்டாப் போறும்—தன் கையெழுத்தே புரியாத மாதிரி பேப்பர்லே கிறுக்கறான். ஒண்ணுலேயிருந்து இன்னொண்ணுன்னு சங்கிலித் தொடராகத் தப்புக் காரியங்கள் வளரும். சாரதா திறந்தவெளி


லக்ஷ்மியின்
அழகு மிளிர அணியும்
சுகத்திற்கு....
அன்றாடம் உடுப்பதற்கும்,
எல்லா விசேஷ சந்தர்ப்பங்களுக்கும்
உகந்த துணி
கவர்ச்சியான அணி-
இலேசானது சுருங்காதது-
மேம்பட்டது.
வாயில்கள்
ஸ்ரீ
லக்ஷ்மி
மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்
உயர்ந்த துணிகளின்
உன்னத சின்னம்
VSK LM 296 TM

யிலே நாடகம் பார்க்கறதை நான் ஒரு நாளும் அநுமதிக்கறதுக்கு இல்லே'' என்று தீர்மானமாகச் சொன்னார்.

சாரதை எதிர்த்து ஒரு வார்த்தை பேசவில்லை.

உள்ளூற அந்தக் குழந்தைக்கு என்ன ஆசை இருந்திருக்குமோ என்று ராமகிருஷ்ணரின் வெண்ணெய் உள்ளம் கரையலாயிற்று. 'அந்தப் பெண் சக்தி வாய்ந்த ஓர் ஆசையைத் துறந்துவிட்டு, தங்கள் இருவர் புனிதத்தையும் காக்கிறாள். அவளுக்கு ஓர் அல்ப ஆசை இருந்தால் அதைத் தாம் முறித்துப் போடலாமா? சரி, அதற்காக ஸ்திரீ தர்மத்திலிருந்து அவள் ஓர் இம்மிகூட வழுவ அநுமதிக்கலாமா?'

அவளது ஸ்திரீ தர்மத்தையும் காத்து, தமது கருணை தர்மத்தையும் காத்துக் கொள்ள ராமகிருஷ்ணர் ஓர் அற்புதத் தீர்வு கண்டார்.

''சாரதா, வருத்தப்படாதேயம்மா! இப்பவே, இங்கேயே 'பாரிஜாத அபஹரணம்' நாடகம் நடக்கப் போறது'' என்று உற்சாகமாகக் கூவினார்.

ஆம், நாடகம் நடந்தது — அப்போதே, அங்கேயே!

ஒரே சர்வேசுவரிதானே இத்தனை பாத்திரங்களாகவும் ஆகி இந்த உலக மேடையில் நடிக்கிறாள்? அப்படியே ராமகிருஷ்ணர் ஒருவரே கிருஷ்ணராகவும், ருக்மிணியாகவும், சத்திய பாமையாகவும், நாரதராகவும், இந்திரனாகவும், மற்றவர்களாகவும் மாறி அற்புதமாக நடித்தார். முன் எப்போதோ ஒரே ஒரு முறை அவர் அந்த நாடகம் பார்த்ததுதான். ஆனாலும் ஒரு வசனம், ஒரு பாடல் விடாமல் அற்புதமாகப் பொழிந்து தள்ளினார்.

நாடகத்தில் வெளிப்படச் சொன்ன தர்மங்களோடு, உள்ளூறவும் மறைமுக உபதேசம் பலவற்றை உணர்த்தினார். திரை மறைவிலே நடக்கிற விஷயங்களையும் காட்டிச் சிரிக்கச் செய்து சிந்தனையைத் தூண்டினார்.

முதலில் நாடகசாலை 'ஆர்கெஸ்டிரா'வைப் போல் ''ஹே க்ருஷ்ண, ப்ரியா ஓடி வா'' என்று அமர்க்களமாகப் பாடினார். இதில் அதிசயம் 'ஆர்கெஸ்டிரா'க்காரர்களைப் போலவே அதில் பக்தியைப் பெய்து நிரப்பாமலே பாடினார், பக்திமயமான ராமகிருஷ்ணர். அந்தச் சமயத்தில் உள்ளே கிருஷ்ண வேஷம் போட்டுக் கொண்டவன், பாட்டைக் கவனியாமல் சுருட்டுப் பிடித்துக் கொண்டிருப்பதாகவும் பாவனை செய்து காட்டினார்.

ஆர்கெஸ்டிராவின் ஆர்ப்பாட்டப் பாட்டு ஓய்ந்தது. 'அசல்' நாடகம் ஆரம்பித்தது. மிகவும் மிருதுவாக, ''அச்யுதா, அனந்தா, கோவிந்தா'' என்று வீணைக் குரலில் நாரதராகப் பாடினார், ராமகிருஷ்ணர். நாரதருக்கு வீணை தனியாக வேண்டியிருந்ததா! ராமகிருஷ்ணரின் குரலே வீணையாக இழைந்தது.

மனம் குழைய, குரல் குழைய நாரதர் பாடியவுடன் கண்ணன் உள்ளேயிருந்து வந்துவிட்டான்.


'ஆர்ப்பாட்ட பக்தர்களிடம் அவன் வருவதில்லை; அடங்கிய பக்தரிடமே வருகிறான்' என்பதையும் அற்புதமாக உணர்த்திவிட்டார் ராமகிருஷ்ணர்.

இப்படியே பாரிஜாத அபகரண நாடகம் முழுவதும் நடந்து முடிந்தது. உபதேசங்களை, உரையாடல்களை, கீதங்களை மலர்க் குவியலாகச் சொரியும் பாரிஜாத மரமாக நின்றார் ராமகிருஷ்ணர்.

கண்ணன் அன்பால் கர்வம் கொண்ட சத்திய பாமையையும், விநயத்தினாலேயே ஐயனைத் தனதாக்கிக் கொண்ட ருக்மிணியையும் சித்திரித்தது அந்த நாடகம். பைரவி பிராம்மணிக்குத் தனது செருக்கையும், சாரதையின் பவ்வியத்தையுமே ராமகிருஷ்ணர் பிரகடனம் செய்ததாகத் தோன்றியது.

எல்லோரும் மகிழ்ச்சிமயமாக இருக்கும்போது, கிளிக் கூட்டத்தில் நுழைந்த பூனைபோல் பைரவி உறுமினாள்: ''வீட்டிலேயா இப்படிக் கூத்தடிப்பா! நாடகம் பார்க்கப் போனால் இந்தப் பெண்ணுடைய கௌரவம் போயிடும்னு வீட்டுக் கௌரவத்தையே பாழாக்கிக் கொட்டம் அடிச்சாச்சு. இதைப் பார்த்ததே பாவம். பூஜைக்குப் போறேன்...'' என்று எழுந்திருந்தாள். ராமகிருஷ்ணரின் கலைத் திறன் அவளையும் அத்தனை நாழிகை கட்டிப் போட்டிருந்ததென்னவோ வாஸ்தவம்!

ராமகிருஷ்ணரோ அவளிடமே குழந்தை மாதிரி வந்து நின்று கொண்டு ''கீரை ஜலத்தைப் பிழிஞ்சு வாணலிலே மன்னி போடறு. மண் வாசனை எப்படி மூக்கைப் பொளக்கறது பாருங்கோ! அந்தக் கீரையே 'சொய்'னு சத்தம் போட்டு 'என் வாசனையைப் பார்த்தேளா?'ன்னு எல்லாரையும் கூப்பிடறது, பாருங்கோ'' என்று சொல்லி ஆனந்தத் தாண்டவம் செய்தார்.



பைரவி மூகவாயைத் தோளில் இடித்துக் கொண்டாள். ''நன்னுக் குதி! உனக்குத்தான் மண் வாசனை, பெண் வாசனை எல்லாம் பிடிக்க ஆரம்பிச்சுடுத்தே'' என்ருள்.

காமாக்ஷியின் கடாக்ஷம் பெற்றவர்களுக்குச் சகலமும் சமமாகிவிடும் — காடும் வீடும் ஒன்ருக இருக்கும், சத்துருவும் மித்திரனும் ஒன்ருக இருப்பர், சிவந்த ஓடும் யுவதியின் சிவந்த உதடும் ஒன்ருக இருக்கும் என்று பாடினுர் மூககவி. அப்படிப்பட்ட சமதரிசனம் வாய்த்த மகானிடம் சொல்லத் தகாத வார்த்தை சொன்ருள் பிராம்மணி. அதற்குக் கூலி அப்போதே காத்திருந்தது! ஆம், அவளது கட்டி பழுத்துவிட்டது; அம்பிகை அதை அறுக்கப் போகிருள்!

''ஏம்மா, எப்பவும் கோவிச்சுக்கிறீங்க? உங்கமாதிரி பெரிய மனுஷங்க பொறுமையும் பிரியமும் காட்டலேன்னு, அப்புறம் எங்களைப் பற்றி என்ன சொல்ல?'' என்ருர் ஸ்ரீநிவாஸ சாங்காரி.

உடனே பைரவி, ''எனக்கா, கோபமா? இடையிலே கிடையாது. மண்ணைத் தின்கிற குழந்தையின் கையைத் தாயார் கட்டிப் போடற மாதிரி, தப்புப் பண்ணறவானைக் கண்டிக்கிறேன். அது தவிர என் மனசிலே லவலேசம் கோபமில்லே'' என்ருள். சாந்தமும், பொறுமையும் உருவான சாரதையின் எதிரே தான் சின்னவளாகிவிடக் கூடாதென்றே இப்படிக் கதைத்தாள்.

அவள் செய்கிற பூஜை முடிந்தது.

ராமகிருஷ்ணரின் குல தெய்வமான ரகுவீரனின் பூஜையும் முடிந்தது.

ராமகிருஷ்ணரே தமது அமிருதக் கையினுல் அனைவருக்கும் பிரசாதத்தைப் பரிமாறி அதைத் திருவமுதாக்கினுர். அனைவரும் அமர்ந்து உண்டனர். ஸ்ரீநிவாஸ சாங்காரி உண்டு முடிந்தவுடன், உணவு பரிமாறப்பட்ட இலையைத் தாமே சுருட்டி எடுத்தார். ராமகிருஷ்ணரின் குடும்பத்துப் பெண்மணி எவரும் தம் எச்சில் இலையை எடுக்கலாகாது என்று அப்படிச் செய்தார்.

அப்போது பைரவி சற்றுமுன் பெருமையடித்துக் கொண்ட வாத்ஸல்யத்தைப் பறைசாற்று முகமாக ''ஸ்ரீநிவாஸா, நீ எதுக்கு இலை எடுக்கணும்? எங்களுக்கு அந்த வித்தியாசமெல்லாம் இல்லே....'' என்ருள்.

ராமேசுவரனின் மனைவிக்குக் குளிர் கண்டது. 'இதென்ன தர்மசங்கடம்' என்று உள்ளூறத் தவித்தாள். அவள் ஸ்ரீநிவாஸனின் எச்சில் இலையை எடுத்துச் சுத்தம் செய்தால், அங்கு வந்திருந்த மற்ற பெண்டுகள் அவளை 'மொலு மொலு' என்று பிடித்துக் கொண்டு விடுவார்கள். அது மட்டுமல்ல, விஷயம் வெளியே போனுல், ஊரே அவளை எதிர்க்கும். ஏற்கனவே மைத்துனர் செய்கிற பல காரியங்கள் ஊராருக்குப் புரியவில்லை. இப்போது பிராம்மணி அம்மை வேறு புது வம்பை விலைக்கு வாங்குகிருள்!

வீட்டுக்குப் பெரியவள் செய்யாத காரியத்தைத் தான் எப்படிச் செய்வது என்று குழம்பிய சாரதை ராமகிருஷ்ணரின் முகத்தைப் பார்த்தாள்!

ராமகிருஷ்ணர் சமத்துவத்தின் ஸ்வரூபம். தமக்கு உயர்வு — தாழ்வு உணர்ச்சி அறவே போய்விட்டதா என்று நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக நம்மை அதிர வைக்கும் சோதனைகளைச் செய்து பார்த்தவர். தக்ஷிணேசுவரத்திலே பலரது விசர்ஜனங்களைக் கூசாமல் கழுவிச் சுத்தம் செய்தவர் அவர். அது மட்டுமன்று. படுமோசமான ஆடல் மகளிரின் இல்லத்து வாசற்படியிலே அவர்கள் மிதித்துச் செல்லும் புழுதியைத் தமது திரு முடியாலேயே துடைத்திருக்கிருர் — 'வேசியும் என் சர்வேசியே' என்று சொல்லிக்கொண்டு.

அப்படிப்பட்ட சமத்துவ ஸ்வரூபர் இப்போது சாரதைக்கும் மதனிக்கும் புரட்சி போதனை ஏதும் தரவில்லை. லௌகிகத்தை விட்டுவிட்ட யதியான தமக்கு வைத்துக் கொண்ட நியதிகளை இல்லத்தினர் மீது அவர் திணிக்கவில்லை. ஆசாரம் என்கிற ஆயிரம் காலத்துப் பயிரில் தலையிடவில்லை.

அன்றொருநாள் தூய சாரதை சமைத்தாலும் தான் அதை நிவேதிப்பதற்கில்லை என்று கூறிய பிராம்மணி இன்று உள்ளத்தில் சமத்துவம் இன்றி வெறும் பகட்டுப் பொய் அன்புக்காகச் செய்த காரியம், அவளுக்கு மட்டுமன்றி, ராமகிருஷ்ணரின் குடும்பத்தவருக்கும், ஸ்ரீநிவாஸ சாங்காரிக்குமே இக்கட்டான ஒரு நிலையை உண்டாக்கிவிட்டது.

''இல்லீங்கம்மா, என் இலையை நானே எடுக்கறதுதான் தர்மம்'' என்று எளிமையுடன் கூறிக்கொண்டு, இலையை எடுத்தார் இனிய ஸ்ரீநிவாஸர்.

''ஊம், நான் சொல்லி நடக்காம இருக்கிறதா? இவா எக்கேடு கெட்டுப் போகட்டும். நானே உங்க இலையை



அழகு!

துறவிகள் மெலிந்தால் அழகு: நான்குகால் விலங்குகள் கொழுத்தால் அழகு: மனிதர்கள் படித்தால் அழகு: பெண்கள் மணந்தால் அழகு.

-பர்மியப் பழமொழி

''கோடை அரசு''

எடுப்பேன்'' என்று அவரிடமிருந்து இலையைப் பிடுங்கக் கிளம்பினாள் பைரவி. ''நான்'' அவ்வளவு அழுத்தமாகத் துருத்திக் கொண்டு வந்தும், விநயமாக இருப்பதாக நடித்தாள்.

அவ்வளவுதான், அங்கு கூடியிருந்த பெண்டுகள் 'கசமுச' என்று பேச ஆரம்பித்து விட்டார்கள்.

வன்மம் பூண்ட ஹ்ருதயரின் இதயம் 'சமயம் கிடைத்தது' என்று ஆர்த்தெழுந்தது. கூச்சலிடலானார்: ''பைரவியம்மா, நீங்க அத்து மீறிப் போறேள்! உங்களை இத்தனை நாள் அதிதியாகக் கொண்டாடி ஆசார உபசாரம் பண்ணினதுக்கு நன்னாப் பழி வாங்கிட்டேள் — எங்க குடும்பத்தையே ஊரார் பகிஷ்காரம் பண்ணற நிலைக்குக் கொண்டு வந்துடுவேள் போலிருக்கு. உங்களுடைய பொய்ச் சமத்துவத்தைக் கொண்டு போய்க் குப்பையிலே போடுங்கோ. எங்க கதாயி மாமா, லோகத்திலே சர்வத்தையும் அம்பாளாப் பார்க்கிற மாமா எதிரே நாடகம் நடிக்காதேள். ஆமாம், சொல்லிட்டேன்! எங்க மாமாவுக்குப் பூணூல் போட்டபோது அவர் முதன் முதலிலே கருமார் குடும்பத்துத் தனியம்மாகிட்டத்தான் 'பவதி பிக்ஷாம் தேஹி'ன்னு பிட்சை வாங்கினார். அப்படிப்பட்டவருக்கு எதிரே வேஷம் போடாதேள். எங்களுக்கும் ஸ்ரீநிவாஸனுக்கும் மன வித்தியாசத்தைக் கற்பிக்காதேள். எங்களுக்காக ஸ்ரீநிவாஸ் உயிரைக் கொடுப்பார். அவருக்காக நாங்க உயிரைக் கொடுப்போம். ஆனா, அவாவாளுக்குன்னு வெச்சிருக்கிற தர்மத்தை நாங்க மீறத் தயாரா இல்லை. இப்போ அநாவசியமா அவருக்கு அவமானத்தை உண்டாக்கிட்டேள். அவர் மனசிலே பேதம் வர மாதிரி......''

பணிவுருவான ஸ்ரீநிவாஸ சாங்காரி இடைமறித்தார்: ''ஹ்ருதய்! அது மட்டும் ஒரு நாளும் நடக்காது, அப்பனே! இந்தக் குடும்பத்துகிட்டே என் விசுவாசம் ஒரு நாளும் குறையாது. இந்த வீட்டுக்காரர்—உன் பெரிய மாமா ராமேசுவர் இருக்காரே, அவரைப்போல உபகாரி எங்களுக்கு யார் உண்டு? அவருக்கு ஆஸ்தி பாஸ்தி எதுவும் இல்லாட்டாலும் எங்களுக்கு ஒரு கஷ்டம்னா, தன் குடும்பத்துக்குக்கூட வெச்சுக்காமல் வாரிக் கொடுக்கிற பிரபு. அந்த நன்றி மறக்க மாட்டோம்'' என்றார். பைரவியைப் பார்த்து, ''ஏ அம்மா, நாங்க பாட்டு வஞ்சனையில்லாம வாஞ்சையோடு இருந்துகிட்டு இருந்தோம். நீ என்ன ரோதனை எல்லாம் பண்ணறே'' என்று எரிந்து விழுந்தபடி எச்சிலைத் திரட்டி எடுக்கலானார்.

எச்சில் இலை நாடகத்தைப் பைரவி முடிப்பதாக இல்லை. ஸ்ரீநிவாஸருக்குக் குறுக்கே பாய்ந்தாள்.

ஹ்ருதயர் வெகு கண்டிப்புடன் சொன்னார்: ''பைரவியம்மா, போனாப் போறதுன்னு பொறுத்துப் பொறுத்துப் பார்த்தோம். இனி பொறுக்க முடியாது. நீங்க மட்டும் இப்போ லோக ரீதியை மீறி ஒரு காரியம் பண்ணினேள், அதுக்காக இந்தக் குடும்பம் பிரஷ்டமாக விடமாட்டேன், உங்களை இப்பவே இந்த வீட்டை விட்டு வெளியே அனுப்பிச்சுடுவேன்... ஆமாம்...''

''வீட்டை விட்டா, என்னையா?'' என்று வீறிட்டாள் பைரவி. பைரவக் கோலம் பூண்டாள். ''என்னை யாருன்னு நெனைச்சேள்? நான் யோகேசுவரி. என்னை வெளியே அனுப்ப யாராலேயும் முடியாது. அப்படி நெனைச்சா, அதோ அந்தப் பூஜை அறையிலே இருக்கிற சீதளா தேவிக்குப் பக்கத்திலே நானும் மனஸா தேவியாக மாறி உட்கார்ந்துண்டு சீறுவேனாக்கும்'' என்று கிறீச்சிட்டாள்.

மனஸா என்பது நாக தேவதை.

ஹ்ருதயர் கேலிச் சிரிப்புச் சிரித்தார். ''யோகேசுவரியம்மா, உங்களை ரொம்ப சரியா வர்ணிச்சுண்டுட்டேள், விஷப் பாம்புன்னு...''

எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

பைரவியால் அந்த அவமானத்தைத் தாங்க முடியவில்லை. அத்தனை கோபத்தையும் திரட்டி, ராமகிருஷ்ணரைப் பார்த்து, ''இடிச்ச புளியா உட்கார்ந்திருக்கயே! நான் உன் குரு இல்லே? குருநிந்தனை உனக்கு இத்தனை சந்தோஷமாயிருக்கா? உன்னோட நான் வருஷக் கணக்கிலே முட்டிண்டு போஇச்சதெல்லாம் இதுக்குத்தானா?...'' என்றாள்.

அவ்வளவு நேரமும் மௌனமாக இருந்த பகவான் ராமகிருஷ்ணர் வாய் திறந்தார். (தொடரும்)



தெய்வம் (நாடகம்)

ஏழைத் தபால்காரரின் பிள்ளை மிகப் பெரிய பணக்காரர் ஒருவரின் ஏக புத்திரியைக் காதலிக்கிறான். அவளும் இவனை மனமாரக் காதலிக்கிறாள். சாதாரணமாக இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால், அநேகமாக இம்மாதிரிக் காதல் விவகாரங்கள் நிறைவேறுவது சிரமம்; அப்படியே நிறைவேறினாலும் பலத்த எதிர்ப்பு, பலவிதமான இடையூறுகள் ஆகிய சங்கடங்களுக்குப் பிறகுதான் நிறைவேறும். இந்த நாடகத்தில், அவர்கள் காதல் வளர்ந்த வேகத்தை விடக் கல்யாணம் அதிவேகமாக நடந்து விடுகிறது.

தமது பெண் ஓர் ஏழை வாலிபனைக் காதலித்ததற்குக் குறுக்கே நிற்காமல் மணம் முடித்து வைத்த புதுமைத் தந்தை தர்மலிங்கம் வெளிக்குக் காட்டிக் கொள்ள முடியாத அந்தச் சோகத்துக்கே இரையாகிறார்.

செல்வத்தில் பிறந்து, செல்வத்தில் வளர்ந்த சாந்தி கொஞ்சங்கூட முகத்தைச் சுளிக்காமல் ஏழை வீட்டு மருமகளாகத் தபால்கார நாயுடு வீட்டில் அடியெடுத்து வைக்கிறாள். அதற்குப் பிறகு நாடகமும் சுறுசுறுப்பாக அடியெடுத்து வைக்கிறது.

இதற்குமேல் கதையை இங்கு விவரித்து விட்டால் அது நாடகம் பார்க்க இருப்பவர்களுக்கு நீதி செய்ததாகாது. ஆகவே, சுவாரசியமாகக் கதை விரிகிறது என்பதோடு நிறுத்திக் கொள்ளலாம்.

இந்த நாடகத்திலேயே உள்ளத்தைத் தொடும் விதத்தில் நடித்த ஒரே நடிகர் டைப்பிஸ்ட் கோபுதான். ஆர்ப்பாட்டம் எதுவும் இல்லாமல் அவரால் அலட்சியமாக நகைச்சுவையை அள்ளி வீச முடிகிறது. மூட்டை தூக்கும் பாத்திரமானாலும் அவரால் நாடகத்துக்கு மூட்டை மூட்டையாகப் புகழ் தேடித் தர முடிகிறதே! பட்டாபி மட்டும் இல்லையென்றால் நாடகமே இல்லை. 'தெய்வ'த்துக்கே ஒளியூட்டும் பாத்திரம் அது!

நாடகத்தை டைரக்ட் செய்த டி. எஸ். சேஷாத்திரி தம் பணியைச் சிறப்பாகச் செய்திருப்பதோடு தபால்கார நாயுடுவாக வந்து மிக இயல்பாக நடித்தார்.

சாதாரணமாக நாடகக் குழுவில் நடிகைகளின் எண்ணிக்கை அதிகமாகாமல் பார்த்துக் கொள்ளுவார்கள். அதன் காரணம், பொருளாதாரம்! நடிகைகள் அதிகமானால் நாடகத்துக்குச் செலவு அதிகமாகும் என்பது தான். அதனால்தான் நம் நாடகங்களில் பெரும்பாலும் தாயில்லாப் பெண்களும், தாயில்லாப் பிள்ளைகளும் தோன்றுகிறார்கள்! இந்த நாடகத்திலும், தாய்மார்களுக்கு இடம் இல்லை! தந்தையர்கள்தாம்.

பணக்காரப் பெண் சாந்தியாக வந்த குமாரி சரளா நிதானமாக நன்றாய் நடித்தார். குமாரி பி.ஆர். பிரேமா தபால்கார நாயுடுவின் மகள் லக்ஷ்மியாக நடித்து மேடைக்கு ஒளியூட்டினார். ஆனால் கதையில் அவருக்கு அதிக வேலையில்லை.

வக்கீல் குமாஸ்தாவின் பாத்திரம் நாடகத்தில் அதிகம் தொடர்பு கொண்டதல்ல என்றாலும் அதை ஏற்ற ஏ. ஆர். கண்ணனின் சிறந்த நடிப்பினால் முக்கியத்துவம் பெற்றுவிடுகிறது.



சமையற்காரனாக வரும் சைமன் ஒரு நல்ல நடிகர். மேடையில் அவர் வந்தபோதெல்லாம், கலகலப்பும் கூடவே வந்தது.

டிரைவர் கண்ணனைக் காதலிக்கும் லக்ஷ்மி இயற்கையின் விகாரவசப்பட்டுத் தாய்மை அடைந்துவிட்டதாகக் கூறுவது நாடகத்துக்கு எந்த விதத்திலும் வலுவூட்டுவதாக இல்லை; தவிர்த்திருக்கலாம்.

நாடகத்தின் சம்பாஷணைகள் மிகவும் சுவாரசியமாக இருக்கின்றன. அதனாலேயே நாடகத்தின் சுவை பெரிதும் கூடியிருக்கிறது. நாடகத்தைத் தீட்டியிருக்கும் எழுத்தாளர் பிலஹரி பாராட்டுக்குரியவர்.

நாடகத்துக்கு இடையில் ஆழ்வார் பாசுரங்களை அற்புதமாகப் பாடிய அன்பர் அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தார்.

சாந்திநிகேதன் குழுவினரின் ''தெய்வம்'' பார்த்து மகிழத்தக்க ஒரு நல்ல நாடகம்.

—காந்தன்

பொன்னியின் செல்வன்



அமரர் கல்கி

அத்தியாயம் எழுபத்தேழு

நெடுமரம் சாய்ந்தது!

ஆஸ்தான மண்டபத்துக்குள் அந்தப்புரப் பெண்கள் வருவதற்கென்று ஏற்பட்ட வாசல் வழியாக வந்தியத்தேவன் புகுந்தான். அதனால் அவன் முதலில் அங்கிருந்த பெண்மணிகளைப் பார்க்கும்படி நேர்ந்தது. அவர்களில் எல்லாருக்கும் பின்னால் ஒதுங்கி நின்ற பூங்குழலி ஏதோ சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தபோது, வந்தியத் தேவன் ஈரத் துணிகளுடன் அலங்கோலமாக உட்புகுந்ததைக் கண்டு திடுக்கிட்டாள். அவனைப் பார்த்தவுடனேதான் வந்தியத் தேவனும் மணிமேகலைக்கு நேர்ந்த விபத்தைப் பற்றிக் கூறினான். அது அவளுடைய காதில் விழுந்தது; அவள் அருகில் இருந்த இளையபிராட்டி குந்தவை, வானதி இவர்கள் காதிலும் விழுந்தது. அவர்கள் மூவரும் வந்தியத்தேவன் புகுந்த வாசல் வழியாக விரைந்து சென்றார்கள். தண்ணீர் சொட்டியிருந்த அடையாளத்தைக் கொண்டே அவன் வந்த வழியைக் கண்டுபிடித்துக் கொண்டு சென்றார்கள்.

வந்தியத்தேவனுடைய வார்த்தைகள் அந்த மண்டபத்திலிருந்த மற்றவர்களின் காதில் தெளிவாக விழவில்லை. ''காப்பாற்றுங்கள்!'' என்ற வார்த்தை மாத்திரம் சிலர் காதில் கேட்டது. கந்தமாறன் — பார்த்திபேந்திரன் இவர்கள் காதில் அந்த வார்த்தைகூட விழவில்லை. ஏதோ உருத் தெரியாத அலறல் சத்தம் மட்டுமே அவர்களுக்குக் கேட்டது.

முதலில் அவ்விருவரும், அப்படி அந்தப்புர வழியில் புகுந்து வந்த உருவத்தை இறந்துபோன வந்தியத்தேவனின் ஆவி வடிவமோ என்று நினைத்தார்கள். அகால மரண மடைந்தவர்களின் ஆவிகள் இந்த உலகை விட்டுப் போகாமல் இங்கேயே சுற்றி அலையும் என்ற நம்பிக்கை அக்காலத்தில் பலர் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. ''வடவாறு திரும்பினாலும் திரும்பும்!'' என்று முதன் மந்திரி அநிருத்தர் கூறி வாய் மூடுவதற்குள் வந்தியத்தேவன் சொட்ட நனைந்த ஈரத் துணிகளுடன் அங்கே வந்து தோன்றியதும், அவர்களுக்கு அத்தகைய பிரமை ஏற்படக் காரணமாயிருந்தது.

ஆனால் வந்தியத்தேவனைத் தொடர்ந்து வந்த சேவகர்கள் பரபரப்புடன் உள்ளே புகுந்து அவனைப் பற்றிக் கொண்டதும், மேற்கூறிய பிரமை நீங்கியது.

''சக்கரவர்த்தி! மன்னிக்க வேண்டும்! இந்தப் பைத்தியக்காரன் அரண்மனைப்

படித்துறைக் கதவு வழியாகப் புகுந்து ஓடிவந்தான். நாங்கள் தடுத்தும் கேட்கவில்லை!'' என்று அச்சேவகர்கள் சொல்லிவிட்டு, வந்தியத்தேவனைத் தங்களுடன் இழுத்துச் செல்ல முயன்றார்கள்.

அம்மம்மா! இந்த வந்தியத்தேவனுடைய உயிர்தான் எவ்வளவு கெட்டியானது? எப்பேர்ப்பட்ட ஆபத்திலிருந்தும் எப்படியோ தப்பித்து வந்துவிடுகிறானே? — இந்த வியப்பு பார்த்திபேந்திரன் உள்ளத்தில் எழுந்தது. அத்துடன் குரோதமும் கொழுந்துவிட்டெரிந்தது.

எங்கே போகிறோம் என்பது தெரியாமல் அவன் ஓடி வந்து இங்கே சிக்கிக் கொண்டிருக்கிறான்! இனி ஒரு முறை அவன் தப்பித்துச் செல்வதற்கு இடந் தரலாகாது. — இவ்வாறு ஒருகணத்தில் முடிவு செய்து கொண்ட பார்த்திபேந்திரன், சக்கரவர்த்தியின் சந்நிதானம் என்பதையும் மறந்து பாய்ந்து சென்று வந்தியத்தேவனுடைய தோள்களில் ஒன்றைப் பலமாகப் பற்றிக் கொண்டான்.

''இவன் பைத்தியக்காரன் அல்ல; கொலைகாரன்! ஆதித்த கரிகாலரைக் கொன்ற வஞ்சகத் துரோகி!'' என்று கூவிக் கொண்டே அவனைப் பிடித்து இழுக்க முயன்ற சேவகர்களை ஜாடையினால் அப்புறப்படுத்தினான்.

பார்த்திபேந்திரனைப் பின்தொடர்ந்து கந்தமாறனும் ஓடிச் சென்று வந்தியத்தேவனுடைய இன்னொரு தோளையும் இறுகப் பிடித்துக் கொண்டான்.

இருவருமாக அவனை இழுத்துக் கொண்டு வந்து சுந்தர சோழ சக்கரவர்த்தி அமர்ந்திருந்த தர்மபீடத்துக்கு எதிரில் நிறுத்தினார்கள்.

சக்கரவர்த்தி வந்தியத்தேவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, ''பால்வடியும் முகமுள்ள இந்தப் பிள்ளையா என் மகனைக் கொன்றதாகச் சொல்கிறீர்கள்? என்னால் நம்ப முடியவில்லையே? இவன்தானே ஆதித்த கரிகாலனிடமிருந்து எனக்கு ஓலை கொண்டு வந்தான்?'' என்றார்.



''ஆம், ஐயா! இவன்தான் ஓலை கொண்டு வந்தான்! இவன்தான் தஞ்சைக் கோட்டைக்கு வெளியே மூடு பல்லக்கில் வந்த நந்தினி தேவியைச் சந்தித்து இரகசியம் பேசினான். இவனேதான் இக்கோட்டையிலிருந்து முன்னொரு தடவை தப்பி ஓடினான். இப்போதும் பாதாளச் சிறையிலிருந்து தப்பித்து ஓடினான்!'' என்றார் சின்னப் பழுவேட்டரையர்.

''என் முதுகிலே குத்திக் காயப்படுத்திவிட்டுத் தப்பி ஓடியவன் இவன்தான்!'' என்று சொன்னான் கந்தமாறன்.

முதன் மந்திரி அநிருத்தர், ''ஏன், அப்பா! இவனைத்தானே நீ முதுகில் வேலெறிந்து கொன்றதாகச் சற்றுமுன் சொன்னாய்?'' என்று கேட்டார்.

''ஆம்; சொன்னேன்! தாங்கள் இக்கொலைகாரனுக்கு ஒத்தாசை செய்து இவனை உயிர்ப்பித்துக் கொண்டு வந்து சேர்ப்பிப்பீர்கள் என்று நான் கண்டேனா?'' என்றான் கந்தமாறன்.

பொன்னியின் செல்வர் இத்தனை நேரமும் செயலற்று நின்றார். வந்தியத்தேவன் மறுபடியும் தப்பி ஓடப் பார்த்து நதியில் குதித்திருக்கிறான் என்றும், நீச்சல் பயிற்சி போதிய அளவு பெறாதபடியால் திரும்பக் கரையேறி இப்படித் தெறிகெட்டு வந்து சபையில் புகுந்திருக்கிறான் என்றும் அவர் எண்ணிக் கொண்டார். இதனால் அவருக்கு வந்தியத்தேவன் மீது பிறந்த கோபம் தணிவதற்குச் சிறிது நேரம் ஆயிற்று.

கந்தமாறனுடைய கடைசி வார்த்தைகளைக் கேட்டதும், பொன்னியின் செல்வர் கம்பீரமாக நடந்து முன்னால் வந்து வந்தியத்தேவன் அருகில் நின்றார்.

''தந்தையே! இந்த வல்லத்து இளவரசர் என் உயிருக்குயிரான நண்பர். இலங்கையிலும் நடுக் கடலிலும் எனக்கு நேர்ந்த அபாயங்களில் என்னைக் காப்பாற்றியவர். இவர் உயிர் பிழைத்து வந்தது பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். இவர்மீது குற்றம் சுமத்துவது என் மீது குற்றம் சுமத்துவது போலாகும்!'' என்றார்.

அவருடைய குரலில் தொனித்த அதிகார தோரணை எல்லாரையும் சிறிது நேரம் மௌனமாக இருக்கச் செய்தது.

பின்னர் முதன் மந்திரி அநிருத்தர், ''பொன்னியின் செல்வ! சிறிது யோசித்துப் பாருங்கள்! இளம் சம்புவரையரின் வேலுக்கு இரையாகி மாண்டதாகச் சொல்லப்பட்டவர் எப்படியோ உயிரோடு வந்து குதித்திருக்கிறார். அவர் மீது குற்றம் என்னவோ ஏற்கனவே சாட்டி விட்டார்கள். ஆகையால் விசாரித்து உண்மையைத் தெளிவாக்கிவிடுவது நல்லதல்லவா?'' என்றார்.

பார்த்திபேந்திரன், ''ஆம், ஐயா! தாங்கள் நாளைச் சோழ சிங்காதனத்தில் ஏறப் போகிறவர்கள். எப்பேர்ப்பட்ட குற்றவாளியானாலும் தண்டிக்கவோ மன்னிக்கவோ தங்களுக்கு அதிகாரம் உண்டு. ஆனால் விசாரணையே வேண்டாம் என்று சொல்வது உசிதமா? வீண் சந்தேகங்களுக்கு இடம் தருமல்லவா?'' என்றான்.

''அத்துடன் நம் இளங்கோ இன்னொரு விஷயத்தையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இளவரசர் தாம் சிங்காதனம் ஏறுவதற்காக இந்த வந்தியத்தேவனை அனுப்பித் தம் தமையனைக் கொல்லச் சதி செய்ததாக ஒரு வதந்தி பரவி வருகிறது. அதற்கு இடந் தரக்கூடாது அல்லவா?'' என்றான் கந்தமாறன்.

அதைக்கேட்டு அங்கிருந்தோர் அனைவரும் பயங்கரமடைந்து நின்றார்கள். சம்புவரையர் மட்டும் முன் வந்து கந்தமாறனைக் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை அறைந்து, ''அடே மூடா! உன்னால் நமது பழைமையான வம்சமே நிர்மூலமாகிவிடும் போல் இருக்கிறதே! சமய சந்தர்ப்பம் தெரியாமல் உளறுவதில் உனக்கு நிகர் வேறு யாரும் இல்லை!'' என்று கோபமாகச் சொன்னார்.

கந்தமாறன் அவனுடைய தந்தையை வெறித்து நோக்கினான். அவனுடைய உதடுகள் துடித்தன. அடுத்த நிமிஷம் அவன் என்ன செய்திருப்பானோ, என்ன சொல்லியிருப்பானோ, தெரியாது! நல்லவேளையாக அச்சமயத்தில் பெரிய பழுவேட்டரையர் ஓர் அடி முன்வந்து சம்புவரையரைப் பிடித்துக் கொண்டார். தொண்டையை முன்போல் கனைத்துக் கொண்டு, ''சம்புவரையரே! உமது மகன் செய்த மூடத்தனமான காரியங்களுக்கெல்லாம் பிராயச்சித்தம் செய்து விட்டான்! சோழ சாம்ராஜ்யத்துக்கு ஒரு பெருந் தொண்டு செய்திருக்கிறான். அதைத் தெரிந்து கொள்ளும்போது தாங்களே அவனைப் பெற்றது குறித்துப் பெருமை அடைவீர்கள். கொஞ்சம் பொறுங்கள்! அவன்மீது சீற்றம் கொள்ள வேண்டாம்!'' என்று சொல்லிக் கொண்டே சம்புவரையரைப் பிடித்து இழுத்துச் சிறிது அப்பால் கொண்டு போய் நிறுத்தினார். பின்னர் இளஞ் சம்புவரையனைப் பார்த்து, ''நீ இந்த வந்தியத்தேவன் மீது வேல் எறிந்து கொன்றதாகச் சொன்னாய் அல்லவா? இவன்தான் அப்

போது குதிரை மேல் நதியைக் கடந்த வன் என்று சொல்ல முடியுமா?'' என்று கேட்டார்.

முதன் மந்திரி, ''ஐயா! இது பற்றி என் சீடன் ஒரு வார்த்தை சொல்ல அனுமதிக்க வேண்டும்!'' என்றார்.

ஆழ்வார்க்கடியான் முன்னால் வந்து, ''பிரபுக்களே! என் குற்றத்தை நான் ஒப்புக் கொள்கிறேன். இந்த வல்லத்து இளவரசர் குதிரை மேலேறி ஓடவே இல்லை. இவர் நமது உண்மை மதுராந்தகத் தேவரைக் கொலைகாரனிடமிருந்து காப்பாற்றிவிட்டுக் காயம் பட்டு விழுந்தார். இவரை நானே மூடு பல்லக்கில் ஏற்றிக் கோட்டைக்குள் கொண்டு வந்து சேர்த்தேன். நாலு நாட்களாக இங்கேதான் இவர் இருந்து வருகிறார். ஆகையால் இளஞ் சம்புவரையர் இவர் முதுகில் வேலெறிந்திருக்க முடியாது!'' என்றான்.

பெரிய பழுவேட்டரையர், ''நானும் அப்படித்தான் ஊகித்தேன். சம்புவரையரே! உமது மகனுடைய தவறுகளை யெல்லாம் மன்னித்து விடுங்கள்! சோழ சாம்ராஜ்யத்துக்கு அவன் மகத்தான சேவை செய்திருக்கிறான்! அவன் வேலெறிந்து கொன்றவன் வீரபாண்டியனுடைய மகனாகவே இருக்க வேண்டும். அன்று மாலை முதல் பழைய மதுராந்தகனைக் காணவில்லை அல்லவா? ஓடிப் போக முயன்றவன் அவனாகவே இருக்க வேண்டும்; கடவுள் எத்தனை பெரிய விபத்திலிருந்து இந்த ராஜ்யத்தைக் காப்பாற்றினார்!'' என்று கூறி நிறுத்தினார்.

இந்த வார்த்தைகளினால் ஏற்பட்ட வியப்பும் திகைப்பும் தீர்வதற்குள் அந்த முதுபெருங் கிழவர் மேலும் கூறினார்:

''சக்கரவர்த்தி! அடியேனுடைய கடைசி வார்த்தைகளைச் சிறிது செவிகொடுத்துக் கேளுங்கள்! தூமகேது தன்னுடைய தீயகாரியத்தைச் செய்துவிட்டு மறைந்துவிட்டது. தங்கள் தீரப் புதல்வர் ஆதித்த கரிகாலரும் மறைந்துவிட்டார். ஆனாலும் தங்கள் குலத்து முன்னோர்களும் என் குலத்து முன்னோர்களும் இரத்தம் சிந்தி உயிரைக் கொடுத்து ஸ்தாபித்த சோழ சாம்ராஜ்யத்துக்கு நல்ல காலம் இருக்கிறது; இன்னும் நெடுநாள் இந்தச் சாம்ராஜ்யம் நிலைத்திருக்கப் போகிறது; விரிந்து பரவி மகோந்நத நிலையை அடையப் போகிறது. ஆகையினாலேயே, கதைகளில்கூடக் கேட்டறியாத பெரிய விபத்திலிருந்து இந்தச் சோழ குலமும் சாம்ராஜ்யமும் தப்பியது. அவ்விதம் தப்புவதற்கு முக்கிய காரணமாயிருந்தவன், இந்த வாணர்குல வீரன் வந்தியத்தேவன் தான்! இவன் மூலமாகவே மோகத் திரையினால் மூடப்பட்டிருந்த என் கண்கள் திறந்தன. சம்புவரையர் மாளிகையில் நாங்கள் நள்ளிரவுக்கூட்டம் நடத்திய அன்று இவன் தற்செயலாக அங்கு வந்து சேர்ந்தான். அன்றைய தினம் இந்தச் சிறு பையனுக்குத் தெரியக் கூடாது என்று மூடி மறைத்து ஒரு காரியத்தை நாம் செய்ய வேண்டியிருக்கிறதே என்ற அவமான உணர்ச்சி எனக்கு உண்டாயிற்று. பிறகு இவன் தஞ்சைக் கோட்டைக்கு வெளியே நந்தினியைச் சந்தித்துப் பேசியதாக என் சகோதரன் கூறினான். நந்தினியின் உதவியினாலேயே இவன் கோட்டையை விட்டுத் தப்பிச் சென்றதாகவும் கூறினான். அதிலிருந்து என் உள்ளத்தில் சந்தேகத்தின் மூலை தோன்றி வளர்ந்து வந்தது. என்னைச் சுற்றிலும் நடப்பவற்றையும் அவற்றின் காரணங்களையும் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினேன். அடிக்கடி மாயை இருள் வந்து என் அறிவை மூடினாலும் மீண்டும் மீண்டும் உண்மை ஒளியின் கிரணங்கள் உட்புகுந்து இருளைப் போக்க முயன்றன. கடைசியில், துர்க்கா பரமேசுவரியின் கிருபையினால் மதுரை ஆபத்துதவிகளின் சதியாலோசனையைப் பற்றி அறிந்தேன். நானே மறைந்திருந்து அவர்களுடைய பேச்சுக்களைக் கேட்டிராவிட்டால், நம்பியே இருக்கமாட்டேன். அதற்குப் பிறகும், தங்கள் செல்வக் குமாரி இளையபிராட்டி என் உள்ளத்தை வேறு விதத்தில் குழப்பிவிட்டார். நந்தினி அவருடைய சகோதரி என்றும், அவளுக்கு நான் தீங்கு இழைக்கக் கூடாது என்றும் கூறினார். அவரும் ஒரு வேளை ஏமாந்திருக்க முடியுமோ என்று ஐயமுற்றேன். எனினும், மாறுவேடம் பூண்டு கடம்பூர் சென்று உண்மையை அறிய விரும்பினேன். காளாமுகச் சைவ வேடம் தரித்தேன். புலித் தோல் ஆடையும் மண்டை ஓட்டு மாலையும் அணிந்து சென்றேன். பிரபு! காளாமுகச் சைவர்கள் என்னை அவர்களுடைய தலைவனாக்கிக் கொண்டிருந்தார்கள். என் அவமானத்தைக் கேளுங்கள். இந்தச் சோழ சாம்ராஜ்யத்துக்கு நானே சக்கரவர்த்தியாக வேண்டுமென்ற துரோகமான துராசையின் விதையை என் மனத்தில் நந்தினி விதைத்தாள். காளாமுகக் கூட்டத்தார் அந்தத் துராசைக்குத் தூபம் போட்டு வந்தார்கள். மதுராந்தகருக்குப் பட்டம் கட்டுவது போல் கட்டி விட்டுப் பிறகு அவரையும் துரத்திவிட்டு நானே சக்கரவர்த்தியாகிவிட வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். அந்தக் காளாமுகர்களிலே ஒருவனான இடும்பன்

காரி சம்புவரையர் அரண்மனையில் சேவகனா யிருந்தான். மதுரை ஆபத்து உதவிகளுக்கும் அவன் ஒற்றனாக உதவி வந்தான். அவனைப் பயமுறுத்தி, அச்சமயம் கடம்பூர் அரண்மனையின் வேட்டை அறையில் மதுரை ஆபத்துதவிகள் இருப்பதை அறிந்தேன். ஆதித்தகரிகாலர் நந்தினியின் அறைக்குச் சென்றிருப்பதையும், மணிமேகலையும் வந்தியத்தேவனும் அங்கேயே ஒளிந்து கொண்டிருப்பதையும் அறிந்தேன். நந்தினிக்கும் கரிகாலருக்கும் நடக்கும் சம்பாஷணையை ஒட்டுக் கேட்டு அவர்களுடைய இரகசியத்தை அறியும் ஆசை என் உறுதியைக் குலைத்துவிட்டது. நந்தினியைப் பற்றிய உண்மையையும் அறிந்து கொள்ளலாம் என்ற ஆசை எழுந்தது. நந்தினியின் அறைக்குப் போக யாழ்க்களஞ்சியத்தின் மூலம் ஓர் இரகசிய வழி இருக்கிறதென்பதை அறிந்து அங்கே போய்ச் சேர்ந்தேன். நல்ல சமயத்திலேதான் போய்ச் சேர்ந்தேன். நந்தினியைப் பற்றிய உண்மையை அவள் வாயாலேயே சொல்லக் கேட்டு அறிந்தேன். ஆதித்த கரிகாலர் நடத்தையில் களங்கமற்றவர் என்றும் தெரிந்து கொண்டேன். நந்தினியும் அவர்களைச் சேர்ந்தவர்களும் வீர பாண்டியனுடைய சாவைப் பழி வாங்குவதற்கு எவ்வளவு பயங்கரமான திட்டமிட்டிருக்கிறார்கள் என்பதையும் அறிந்து கொண்டேன். அந்தச் சதி வெற்றி பெறாமல் தடுக்க முயன்றேன். ஆனால் விதியை என்னால் வெல்ல முடியவில்லை. கரிகாலர் என் கண் முன்னாலேயே உயிரற்றுக் கீழே விழுந்ததைப் பார்க்கும் துர்ப்பாக்கியம் பெற்றேன்.....''

இவ்விதம் கூறிவிட்டுப் பெரிய பழுவேட்டரையர் தம் முகத்தைக் கையால் மூடிக்கொண்டு விம்மினார். அந்த விம்மலின் ஒலி, புயல் அடிக்கும் போது அலை கடலில் எழும் பேரோசையை ஒத்திருந்தது. யாரும் அச்சமயம் வாய் திறந்து பேசத் துணியவில்லை. அனைவருடைய உள்ளங்களும் அந்த வீரப் பெருங் கிழவரின் மாபெரும் துயரத்தைக் கண்டு இளகிப் போயிருந்தன.

பெரிய பழுவேட்டரையர் மேலும் மேலும் பொங்கி வந்த விம்மலைத் தமது வைரம் பாய்ந்த இரும்பு நெஞ்சின் உதவியால் அடக்கிக் கொண்டார். முகத்திலிருந்து கையை எடுத்துவிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தார்.

''விதிவசத்தினால் ஆதித்த கரிகாலர் இறந்து விட்டார். ஆனால் துர்க்கா பரமேசுவரியின் கருணையினால், அதே சமயத்தில் பேராபத்துக்குள்ளான பொன்னியின் செல்வர், விதியையும் மதியினால் வென்று உயிர் தப்பினார். பிரபு! சக்கரவர்த்தி! பிரம்மராயரே! என் அருமைத் தோழர்களான சிற்றரசர்களே! சோழ சிங்காதனத்தில் அருள்மொழி வர்மரை ஏற்றி வைத்து முடிசூட்டுங்கள்! அவர் மூலமாக இந்தச் சாம்ராஜ்யம் மகோந்நதத்தை அடையப் போகிறது!'' என்றார்.

முதன் மந்திரி அநிருத்தர், ''ஐயா! தங்கள் விருப்பம் நிறைவேறத்தான் போகிறது. பொன்னியின் செல்வர்தான் அதற்குத் தடையாயிருப்பார் என்று பயந்தோம். சோழ நாட்டின் அதிர்ஷ்டத்தினால் அவரே முடிசூட்டிக் கொள்ள இசைந்து விட்டார்! ஆனால், ஆதித்த கரிகாலர் எப்படி இறந்தார் என்று தாங்கள் கூறவில்லையே?'' என்றார்.

''அதைப் பற்றி ஏன் கேட்கிறீர்கள்? கொன்ற கை யார் கையாயிருந்தால் என்ன? உண்மையில் அவருடைய மரணம் விதியினால் நேர்ந்தது!'' என்றார் அந்த வீரக் கிழவர் நடுங்கிய குரலில்.

''அது தெரியாவிட்டால், இதோ குற்றம் சுமத்தப்பட்டு நிற்கும் வாலிபன் மீது ஏற்பட்டிருக்கும் சந்தேகம் நீங்காது. கரிகாலரின் மரணத்துக்காக இவனைத் தண்டிக்கும்படி நேரிடும்!'' என்றார் முதன் மந்திரி அநிருத்தர்.

''ஆகா! இவன் மீது குற்றம் சுமத்துவதா? யார் சுமத்துகிறார்கள்?''

''கந்தமாறனும் பார்த்திபேந்திரனும் சுமத்துகிறார்கள்!''

''ஆகா! முழு மூடர்கள்! கந்தமாறா! பார்த்திபேந்திரா! நீங்கள் இந்த வாலிபன்மீது குற்றம் சுமத்தக் காரணம் என்ன? எதைக் கொண்டு இவன் ஆதித்த கரிகாலரைக் கொன்றதாகச் சொல்லுகிறீர்கள்?''

இதற்கும் அநிருத்தரே பதில் கூறினார்: ''இவன் அச்சமயம் நந்தினி தேவியின் அந்தப்புரத்தில் ஒளிந்து கொண்டிருந்திருக்கிறான். மணிமேகலையும் அங்கே இருந்திருக்கிறாள். மணிமேகலை தான் கொன்றதாகச் சொல்லுகிறாள். அவ்விதம் இருக்க முடியாது. அவள் காட்டிய கத்தியில் இரத்தக் கறையே இல்லை. வந்தியத்தேவனைக் காப்பாற்றுவதற்காகவே அவள் அவ்விதம் சொல்லியிருக்க வேண்டும் அல்லவா? வந்தியத் தேவன் மறைவிடத்திலிருந்து கரிகாலரைக் கொன்றதை அவள் பார்த்திருக்கலாம் அல்லவா?''

''மணிமேகலை கொல்லவில்லை என்றால், வந்தியத்தேவன் மட்டும் எப்படிக் கொன்றிருப்பான்? எந்த ஆயுதத்தைக் கொண்டு?''


அமரர்
கல்கி
எழுதிய
அலை ஓசை
கல்கி
ஜனவரி 16
பொங்கல் மலரில் ஆரம்பமாகிறது

''இந்த ஆயுதத்தைக் கொண்டு! இரத்தம் தோய்ந்து காய்ந்திருக்கும் இந்தக் கூரிய திருகுக் கத்தியைக் கொண்டு!'' என்று கூறிப் பார்த்திபேந்திரன் நாம் முன்னமே பார்த்திருக்கும் திருகுக் கத்தியைக் காட்டினான்.

வந்தியத்தேவன் கரிகாலருடைய உடலைத் தீப்பிடித்த மாளிகையிலிருந்து எடுத்து வந்து போட்டுவிட்டுத் தானும் மூர்ச்சையடைந்து விழுந்த போது, அவனிடமிருந்த திருகுக் கத்தியைப் பார்த்திபேந்திரன் எடுத்துப் பத்திரமாக வைத்திருந்தான். அதை இப்போது எடுத்துக் காட்டினான்.

பெரிய பழுவேட்டரையர் அவனை நோக்கி, ''எங்கே, இப்படி அந்தக் கத்தியைக் கொடு!'' என்று சொல்லி அதை வாங்கிக் கொண்டார்.

அதை நன்றாக உற்றுப் பார்த்து விட்டு, ''ஆகா! இது இடும்பன்காரியின் கத்திதான்!'' என்று முணுமுணுத்தார்.

''கந்தமாறு! பார்த்திபேந்திரா! நீங்களும் நானும் இந்த வந்தியத்தேவனை மூன்று தரம் வலம் வந்து கும்பிட வேண்டும்! நந்தினியின் மோக வலையில் இந்தக் கிழவனைப் போலவே நீங்களும் விழுந்திருந்தீர்கள். ஆனால் இவன் ஒருவன்தான் அந்த மாய வலையில் சிக்கவில்லை. இவன் இந்தக் கத்தியை எறியவும் இல்லை; ஆதித்த கரிகாலரைக் கொல்லவும் இல்லை!''

''எதனால் அவ்வளவு நிச்சயமாகச் சொல்லுகிறீர்கள்?'' என்று முதன் மந்திரி அநிருத்தர் கேட்டார்.

''ஆம்; நிச்சயமாகத்தான் சொல்லுகிறேன். இந்தக் கத்தியை எறிந்து கரிகாலரைக் கொன்றவன் எவன் என்பது எனக்கு நன்றாய்த் தெரியும்!''

''யார்? யார்?''

''ஆம், ஆம்! அதைச் சொல்லிவிட வேண்டியதுதான். சொல்லாவிட்டால் உங்கள் சந்தேகம் தீராது. எல்லாரும் கேளுங்கள். இந்த வாலிபன் யாழ்க் களஞ்சியத்தில் ஒளிந்து கொண்டிருந்தான். நான் அதன் வழியாக இறங்கி வந்தேன். இவன் என்னைப் பார்த்துச் சத்தமிடக் கூடாது என்பதற்காகப் பின்னாலிருந்து இவன் கழுத்தைப் பிடித்து நெருக்கினேன். இவன் விழி பிதுங்கி, உணர்விழந்து கீழே விழுந்து விட்டான். ஆதித்த கரிகாலரைக் கொன்றது யார் என்பது இவனுக்கு அச்சமயம் தெரிந்துகூட இருக்க முடியாது.''

''யார்! யார்! கொன்றது யார்?''

''இந்தத் திருகுக் கத்தியை நான்தான் இடும்பன்காரியிடமிருந்து வாங்கிக் கொண்டு வந்தேன். இதை வீசி எறிந்தவன் நானேதான்! இந்த என்னுடைய வலது கரந்தான்! சோழ சக்கரவர்த்திகளுக்கு முடிசூட்டிய பரம்பரையில் வந்த இந்தக் கரம்தான் கத்தியை எறிந்தது. ஆனால் இளவரசர் கரிகாலர் மீது எறியவில்லை. நந்தினியின் பேரில் எறிந்தேன். என்னை மோக வலையில் ஆழ்த்தித் துரோகப் படுகுழியில் வீழ்த்திய அந்த மாயப் பிசாசைக் கொன்றுவிட எண்ணியிருந்தேன். அது குறி தவறிக் கரிகாலர் மீது விழுந்தது!''

''ஐயையோ!'' ''ஆஹாஹா!'' என்ற குரல்கள் பல அச்சபையில் எழுந்தன.

''நூறு ஆண்டு காலமாகப் பழுவூர்க் குலம் சோழ குலத்துக்குச் செய்திருக்கும் தொண்டுகளுக்கெல்லாம் களங்கம் உண்டு பண்ணி விட்டேன். அந்தக் களங்கத்தை எப்படி நீக்கப் போகிறேனோ, தெரியவில்லை!''

''அண்ணா! இதோ அந்தக் களங்கத்தை நான் போக்குகிறேன்!'' என்று சின்னப் பழுவேட்டரையர் கர்ஜித்துவிட்டுத் தமது கத்தியை உருவிக் கொண்டு அண்ணன் அருகில் விரைந்து வந்தார்.

''சோழ குலத்துக்குத் துரோகம் செய்கிறவர்கள் யாராயிருந்தாலும் அவர்களைப் பழி வாங்குவதாக நீயும் நானும் சபதம் ஏற்றிருக்கிறோம். அந்தச் சபதத்தை இப்போது நானே நிறைவேற்றுவேன். உன்னை இந்தக் கணமே கொன்று நம் குலத்துக்கு நேர்ந்த பழியைத் துடைப்பேன்!'' என்று சின்னப் பழுவேட்டரையர் கத்தியை ஓங்கினார்.

''வேண்டாம்! வேண்டாம்! இங்கே இரத்தம் சிந்த வேண்டாம்!'' என்றார் சுந்தர சோழச் சக்கரவர்த்தி.


இளவரசர் அருள்மொழிவர்மரும் முதன் மந்திரி அநிருத்தரும் பாய்ந்து சென்று சின்னப் பழுவேட்டரையரின் கைகளைப் பிடித்துக் கொண்டார்கள்.


அச்சமயத்தில் பெரிய பழுவேட்டரையர் கூறினார்: ''தம்பி! நம் குலத்துக்கு என்னால் நேர்ந்த பழியைத் துடைக்கும் வேலையை உனக்கு வைக்க மாட்டேன். அத்துடன் 'தமையனைக் கொன்ற தம்பி' என்ற பழியை உனக்கு ஏற்படுத்த மாட்டேன். இதோ துர்க்கா பரமேசுவரிக்கு என் சபதத்தை நிறைவேற்றுவேன்!'' என்று கூறிக் கொண்டே தம் கையிலிருந்த சிறிய திருகுக் கத்தியைத் தமது மார்பை நோக்கி ஓங்கினார்.

முன்னொரு தடவை அவர் ஓங்கிய பெரிய வாளை மறுபடியும் உறையில் போட்டிருந்தபடியால், அவர் தமது பழைய உத்தேசத்தை விட்டுவிட்டதாக மற்றவர்கள் எண்ணிக் கொண்டிருந்தார்கள். பார்த்திபேந்திரனிடமிருந்து வாங்கிக் கொண்டிருந்த திருகுக்











பம்பாய் பாரதீய மியூஸிக் அண்ட் ஆர்ட்ஸ் ஸொஸைட்டியின் சங்கீத நாட்டிய நாடக விழா ஷண்முகானந்த ஹாலில் விமரிசையாக நடைபெற்றது. இன்னிசைக் கச்சேரி நிகழ்த்திய ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மிக்குத் திருவனந்தபுரம் மகாராஜா மலர் மாலை வழங்குகிறார். தசாவதார நாட்டிய நாடகத்தில் விஷ்ணுவாகத் தோன்றிய ஸ்ரீமதி ராகினியையும் நாட்டிய விருந்தளித்த ஸ்ரீமதி யாமினி கிருஷ்ணமூர்த்தி, ஸ்ரீமதி பாலசரஸ்வதி ஆகியோரையும் படங்களில் காணலாம். ஸ்ரீமதி கமலாவின் நாட்டிய நிகழ்ச்சியும் இவ்விழாவில் இருந்தது. கீழே, 'சோ'வின் ஆங்கில நாடகமான 'டீ ஹவுஸ் ஆப் தி ஆகஸ்ட் மூன்'ல் ஒரு காட்சி.

கத்தியை அவர் உபயோகிப்பார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

"ஐயோ! வேண்டாம்!" என்று அருள்மொழிவர்மர் கூவிக் கொண்டு அவர் அருகில் பாய்ந்து வருவதற்குள் பெரிய பழுவேட்டரையர் தம் உத்தேசத்தை நிறைவேற்றி விட்டார்.

நெடுங்காலம் வேர் விட்டு நெடிது வளர்ந்திருந்த தேவதாரு மரம் வேருடன் பெயர்ந்து கப்பும் கிளையுமாகக் கீழே விழுவதுபோலத் தரையில் சாய்ந்தார்.

"ஹா ஹா!" "அடடா!" "அந்தோ!" என்பவை போன்ற குரல்கள் அச்சபையில் ஒலிக்கத் தொடங்கின.

விழுந்த பெரிய பழுவேட்டரையரை நோக்கிச் சிலர் ஓடி வந்தார்கள்.

அதே சமயத்தில் கண்களை மூடிக் கொண்டு சிங்காதனத்தில் சாய்ந்த சுந்தரசோழ சக்கரவர்த்தியை நோக்கி இன்னும் சிலர் ஓடினார்கள்.

மந்திராலோசனை சபை கலைந்தது.

* * *

அன்றிரவு பெரிய பழுவேட்டரையர் மரணத்துடன் போராடிக் கொண்டிருந்த போது பலர் வந்து அவரைப் பார்த்து விட்டுச் சென்றார்கள்.

சக்கரவர்த்தியும், அருள்மொழிவர்மரும், அநிருத்தரும், இளையபிராட்டி குந்தவையும்கூட வந்திருந்தார்கள்.

சோழ குலத்துக்கும் சாம்ராஜ்யத்துக்கும் பெரிய பழுவேட்டரையர் செய்திருக்கும் சேவைகளைப் பற்றிச் சக்கரவர்த்தியும் மற்றவர்களும் பாராட்டிப் பேசினார்கள். அவர் இளம் பிராயத்தில் எத்தனையோ போர்க்களங்களில் செய்த வீரச் செயல்களைப் பற்றிக் கூறினார்கள். தக்கோலத்தில் தோல்வியடைந்து சிதறி ஓடிய சோழ சைன்யத்தை அவர் திரட்டி அமைத்துத் தோல்வியை வெற்றியாக மாற்றிய செயலை வியந்து பாராட்டினார்கள். சோழ நாட்டின் தனாதிகாரியாக இருந்து திறமையாக நிர்வாகம் நடத்தியதைப் புகழ்ந்தார்கள்.

சென்ற மூன்று வருஷத்துச் சம்பவங்களைப் பற்றி ஒரு வார்த்தையும் பேசாமலே விடைபெற்றுப் புறப்பட்டார்கள்.

பின்னர் அவர்கள் நால்வரும் பெரிய பழுவேட்டரையர் படுத்திருந்த அறைக்குள்ளேயே அவர் பார்க்கமுடியாத இடங்களில் மறைந்து நின்று கொண்டார்கள்.

அச்சமயம் சின்னப் பழுவேட்டரையர் ஆழ்வார்க்கடியானை அழைத்துக் கொண்டு வந்தார். பெரிய பழுவேட்டரையருக்கு எதிரில் கொண்டு வந்து

அவனை உட்கார வைத்துவிட்டுத் தாமும் அருகில் அமர்ந்தார்.

பார்வை விரைவாக மங்கி வந்த கண்களினால் பெரிய பழுவேட்டரையர் ஆழ்வார்க்கடியானைப் பார்த்துவிட்டு, ''ஆகா! இந்த வைஷ்ணவன் இங்கு எதற்காக வந்தான்? நான் வைகுண்டத்துக்குப் போக விரும்பவில்லை, தம்பி! சிவபதம் அடைய விரும்புகிறேன்!'' என்றார்.

''ஐயா! நாளை உதயத்தில் வைகுண்ட ஏகாதசி புண்ணிய நாள்! தாங்கள் கைலாசத்துக்குப் போக விரும்பினாலும் வைகுண்டத்தின் வழியாகவே போக வேண்டும்!'' என்றான் திருமலை.

''வேண்டாம்! வேண்டாம்! நீ உன் மகாவிஷ்ணுவிடம் திரும்பிச்சென்று...''

''ஐயா! நான் மகாவிஷ்ணுவின் தூதனாக இப்போது வரவில்லை. என் சகோதரியிடமிருந்து செய்தி கொண்டு வந்தேன்!''

''அது யார் உன் சகோதரி?''

''என்னுடன் பல நாட்கள் வளர்ந்த சகோதரி—நந்தினியைச் சொல்கிறேன். ஐயா! நந்தினி தங்களுக்கு அவளுடைய நன்றியைத் தெரியப்படுத்தும்படி என்னை அனுப்பினாள். கரிகாலரைக் கொன்ற பழி அவள் பேரில் விழாதிருக்கும்பொருட்டுத் தாங்கள் அதை ஏற்றுக் கொண்டதற்காக நன்றி தெரிவிக்கச் சொன்னாள். எத்தனை ஜன்மம் எடுத்தாலும் தங்கள் அன்பை மறக்க முடியாது என்றும் தெரிவிக்கும்படி சொன்னாள்!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''ஆகா! அவள் இன்னும் அப்படி நினைக்கிறாளா? நினைத்துக் கொண்டு சந்தோஷப்படட்டும். எவ்வளவுதான் அவள் வஞ்சகம் செய்து எனக்குத் தீங்கு புரிந்திருந்தாலும் அவளை என்னால் மறக்க முடியவில்லை. அவள் பேரில் கோபித்துக் கொள்ளவும் முடியவில்லை. தன் உயிரைக் கொடுத்துச் சக்கரவர்த்தியைக் காப்பாற்றிய உத்தமியின் புதல்வி அல்லவா அவள்? உண்மையாகவே அடுத்த பிறவிகளிலும் அவள் என்னைத் தேடிக் கொண்டு வந்துவிடுவாளோ, என்னமோ?'' என்றார் பெரிய பழுவேட்டரையர்.

ஏற்கனவே மரணத்தின் சாயை படர்ந்திருந்த அவருடைய முகத்தில் இப்போது இலேசான புன்னகை தோன்றியது.

''வைஷ்ணவனே! யாரிடமாவது ஒருவரிடம் என் உண்மையைச் சொல்ல வேண்டும். உன்னிடமே சொல்கிறேன். நான் எறிந்த கத்தி இளவரசர் பேரில் விழவில்லை. அதற்கு முன்பே அவர் விழுந்துவிட்டார். நானே இளவரசரைக் கொன்றதாக ஒப்புக் கொண்டதற்குக் காரணம் நந்தினியின் பேரில் பழி விழாமல் தடுப்பதற்காக மட்டுமல்ல; அதைவிட நூறு மடங்கு முக்கியமான காரணம் உண்டு! அருகில் வா! சொல்லுகிறேன்! உன் சிநேகிதன் வந்தியத்தேவன் இருக்கிறானே, அவன் அருமையான பிள்ளை! அவனுக்குச் சோழ குலம் ரொம்பக் கடமைப்பட்டிருக்கிறது. இளையபிராட்டியின் உள்ளத்தை அவன் கவர்ந்து விட்டான். இளையபிராட்டியிடம் நான் அநாவசியமாகக் குரோதம் பாராட்டினேன். அதற்கெல்லாம் பரிகாரமாகக் குற்றத்தை நான் ஒப்புக் கொண்டேன். நான் அப்படிப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டு என்னையும் பலி கொடுத்திராவிட்டால், வந்தியத்தேவன் பேரில் யாராவது களங்கம் கற்பித்துக் கொண்டேயிருப்பார்கள். இனி ஒருவரும் அவ்வாறு பேசத் துணியமாட்டார்கள். வைஷ்ணவனே! என்றாவது ஒரு நாள் இளையபிராட்டியிடம் இதை நான் கூறியதாகச் சொல்லு! நந்தினியின் பேச்சைக் கேட்டு அவரை நான் துவேஷித்ததற்காக என்னைத் தயைகூர்ந்து மன்னிக்கும்படி சொல்லு!''

நெடு நேரம் பேசியதால் அந்தத் தீரக் கிழவருக்கு மூச்சு வாங்கத் தொடங்கியது. அவர் கூறியதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஆழ்வார்க்கடியானின் உள்ளமே உருகிவிட்டது என்றால், பின்னால் மறைவிடத்தில் நின்று கேட்டுக் கொண்டிருந்த குந்தவை தேவியின் கண்களிலிருந்து கண்ணீர் கலகலவென்று பொழிந்ததில் வியப்பில்லை அல்லவா?

''வைஷ்ணவனே! இன்னும் ஒரு விஷயம் முதன் மந்திரி பிரம்மராயரிடம் சொல்லு! இலங்கையிலிருந்து பாண்டியன் கிரீடத்தையும் இந்திர ஹாரத்தையும் எப்படியாவது கொண்டு வர வேண்டும். அதற்குத் தகுந்தவன் வல்லத்து இளவரசன்தான்! அவனும் நீயும் போய்க் கொண்டு வாருங்கள். பிறகு மதுரைக்குச் சென்று அங்கே ஒரு தடவை பொன்னியின் செல்வருக்கு மகுடாபிஷேகம் நடத்த வேண்டும். தெரிகிறதா? அருள்மொழியிடம் எனக்காக ஒன்று வேண்டிக் கொள்! என்பேரில் ஏற்படும் பழியை என் சகோதரன் மீது சுமத்த வேண்டாம்! அவனைப்போல் சோழ குலத்துக்கு உற்ற துணைவன் வேறு யாரும் இல்லை என்று சொல்லு! தேவி! துர்க்கா பரமேசுவரி! என் சபதத்தை நிறைவேற்றி விட்டேன்! இதோ வருகிறேன்! சோழ குலத்தைக் காப்பாற்று!''

வர வர மெலிந்து கொண்டு வந்த பெரிய பழுவேட்டரையரின் குரல் அடியோடு மங்கி நின்றது. அந்தத் தீரப் பெருங் கிழவரின் உயிர்ச் சுடரும் அணைந்தது.

(தொடரும்)

இன்றுள்ள ஒரே வாக்கேயக்காரர்

ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த ஒரு சம்பவம். திருமயிலை கபாலீசுவரரின் பிரம்மோத்ஸவத்தின் ஒன்பதாவது திருநாள். அன்று இரவு முழு மதி வான வீதியில் கிளம்புவதற்குச் சரியாய் பிக்ஷாடன மூர்த்தி தமது பரிவாரங்கள் ஒன்றுமின்றித் தனிப் புறப்பாடு செய்வார். கையில் கபாலம் ஏந்தி, சடைமுடியுடன் பரமனே அன்புப் பிச்சை வேண்டித் தெரு வழியே வரும் கோலம் அது.

மயிலாப்பூர் மாட வீதிகளுக்கெனத் தனியோர் அழகு பொருந்திய காலம் அது. வீடுகளில் கடைகளாக முழுவதும் நிரம்பாத காலம். தெருவில் வீட்டுக்கு வீடு வாசலில் கற்பூர ஹாரத்தி எடுக்கப் பெண்கள் நிற்பார்கள். மக்கள் போட்டியிட்டு சுவாமி வருவதை எதிர்கொண்டழைப்பது வழக்கம். பிச்சாண்டி மேற்கு மாட வீதியின் நடுவே உள்ள அரச மரத்தடிக்கெதிரே வந்து நின்றபின், அம்பாள் கோயிலை விட்டு வாத்தியங்கள் அதிகம் இல்லாமல் எதிரே வந்து மூன்று தடவை பிக்ஷாடனரை வலம் வந்து நின்று, கோயிலுக்கு அவருடன் கிளம்பிச் செல்லுவது சம்பிரதாயம். ஐதிகம் என்னவெனில், சிவனார் தமது இல்லத்தை விட்டு விரக்தராய் வெளிக் கிளம்பிப் பிச்சை எடுத்து உண்டு வாழ முயல்கிறார்; அம்பாள் அவருடைய துறவு வேகத்தைத் தணித்து, அவரை வேண்டித் தன்னுடன் மறுபடியும் கோயிலுக்கே அழைத்துச் செல்லுகிறாள் என்பதாம்.

உத்ஸவமூர்த்திக்குப் பின்னே வேத பாராயணமும் பஜனை கோஷ்டிகளும் தொடருவது சகஜமான காட்சி. அன்று நிகழ்ந்த பஜனையில் மேலே எழும்பிய குரல் சுருதியுடன் இணைந்து பின்வரும் பாட்டைப் பாடியது செவிகளில் விழுந்தது.

கடைக் கண் நோக்கி காவாததும் ஏனோ
கருணாகரனே, ஹரனே!

என்ற பல்லவிக்கு அடுத்த,

அடைக்கல மென்று அடியேன் உன்னை நம்பி
அலறுவதுன் செவி புகவில்லையோ -- அடிமை

என்ற அநுபல்லவியும் தெளிவாய்க் கூட்டத்தைத் தாண்டி வெளியிலும் கேட்கும்படியான அளவில் குரல் கம்பீரமாய் அமைந்திருந்தது. ராக பாவமும் சாகித்தியமும் சேர்ந்து நிஜமாகவே ஓர் அற்ப ஜீவன் தன்னைப் படைத்த பரம்பொருளை அடைய வேண்டுவது போன்ற ஏக்கம் கலந்த குரலாகவே அச்சமயம் தோன்றியது. தாங்க இயலாத விசுவ வேதனைதானோ என்றே ஒரு கணம் எல்லாருடைய இதயங்களிலும் தனியொரு சோகம் குடிகொண்டது. கேட்டவர்கள் பாடுகின்றவரையும் மறந்து அருகே பந்தலின் கீழ் நிற்கும் கருணாகரனையே நினைக்கச் செய்துவிட்டது, அந்தப் பாட்டு. உள்ளம் உருகி நின்றவர்களின் மத்தியில் மிகவும் சிறிய தோற்றம் படைத்த பாடகர் கண்களை இறுக மூடிக் கொண்டும், பிரயாசையுடன் குரலை எழுப்பிக் கொண்டும் இருந்தது கிட்ட நெருங்கியதும் தெரிந்தது. தொண்டையிலிருந்து வரும் சப்தம் தாரையாய்க் கிளம்பாவிட்டாலும், உணர்ச்சியைத் தட்டி எழுப்பும் வகையில் நாதப் பெருக்காய் எங்கும் பரவியது. இனிமையான குரல் இல்லைதான். இருப்பினும் பூர்ண சங்கீதம் அதில் நிரம்பி வழிந்தது. குரல் அழகாக அமைந்திருப்பினும், ஜீவனை உலுக்கும் அத்தனை முழுமை அதற்கு இருந்திருக்குமோ என்றே வியக்கத் தோன்றியது. பாடியது பாபநாசம் சிவன் அவர்கள்.

தமிழ் இசை இயக்கம் தோன்றிப் பெரிதாய் வளர்ந்து, சங்கீத உலகில் தனியரசு செலுத்தாத பொழுது, ஒருவிதத் தூண்டுதலுமில்லாமல் தாமாகவே தமிழில் பாடியும், சொந்த சாகித்தியங்களை உருவாக்கியும் இணைத்த பெருமை வேறு யாருக்கும் கிட்டியதில்லை. ''எனக்குச் சங்கீதக் கச்சேரி செய்வதில் ஆர்வம் குறைவுதான்; பஜனை செய்வது ஒன்றே என்னைத் தெய்வ பக்தியில் லயிக்கச் செய்கிறது. பஜனைதோறும் நான் தமிழில் பாடுகையில் சுற்றியுள்ள முகங்களில் காணும் மலர்ச்சியும், பக்திப் பெருக்கும், என்னை நெகிழ வைக்கின்றன. ஆகையால் தமிழ்ப் பாட்டைப் புனைவதில் என்று மில்லாத இன்பம் பெறுகிறேன்'' என்பார் மிகவும் அடக்கமாய்.

வாழ்க்கையில் வறுமைப் பிணியினின்று அவரை மீட்டது இசைச் செல்வம் என்றால் மிகையாகாது. திருவனந்தபுரத்துக்குச் சிறு பிராயத்தில் தாயாருடன் உணவுப் பஞ்சத்தைத் தவிர்த்துக் கொள்ளவே சென்றார். அவ்விடம் ஸம்ஸ்கிருதப் பாடசாலை ஒன்றில் 'வியாகர்ணம்' பயின்று, ''உபாத்தியாய'' என்ற பரீட்சையிலும் தேர்வு அடைந்தார். ஆனால் கல்வி பயிலுவதைவிடவும் இசையே அவரைச் சீக்கிரம் தன்வசப்படுத்திவிட்டது. அங்குள்ள பெரிய வித்துவானான நீலகண்ட சிவன் போன்றவர்களின் இசையமுதை உண்டு தெளிந்து, சீக்கிரமே இசைப் பயிற்சியையும் முறையாக நூரணி மகாதேவ பாகவதர், சாம்ப பாகவதர் போன்றவர்களிடம் பெற்றார். பிற்பாடு தஞ்சையை அடைந்து அக்காலத்தில் கர்நாடக சங்கீத உலகில் பளிச்சிட்ட கோனேரிராஜபுரம் வைத்தியநாதரிடம் குருகுலவாசம் செய்து, மேலும் சங்கீ

மயிலை கபாலீச்சுரர் சன்னதி எதிரே சிவன் (வலது கோடி) பஜனை.



தத்தை வளர்த்துக் கொண்டார். கர்நாடக சங்கீதத்தை லட்சணங்களுடன் பயின்றதற்காக, தமது முழு ஆசையையும் கவர்ந்த தேவாரம், திருவாசகம், அருட்பா முதலியவற்றைப் பாடாதிருந்ததே இல்லை. சிவன் பஜனை என்றால், கூட்டம் தெருவெல்லாம் அடங்கி நின்று கேட்பது என்றுமே நிகழும் ஓர் அனுபவமாகியது. தேவாரத்தைப் பாடிப் பாடி அதன் இனிமையில் துழாவித் துழாவி நீந்தி வந்தவர். அக்காரணமே இன்றும் அவருடைய சாகித்தியங்களின் தமிழ் நயம் தனித்தே சுவையூட்டுவதாக இருக்கின்றது. எளிமையின் சிகரம் எனலாம் அவருடைய சாகித்திய பாஷையை.

'என்று தணியும் இந்த தாகம்' என்றே தொடங்கியவர், தமிழ்க் கீர்த்தனங்களைக் கணக்கிலடங்காதுதான் செய்து வருகிறார். வாக்கும் கேயமும் மணந்து மாலையிட்ட பந்தல் அவருடைய சாகித்திய ஸ்வரச் சேர்க்கைகளே. ஸ்வரங்களின் கோவைகளை சாகித்தியத்தின் சொல்லழகுடன் இணைப்பது சுலபமல்ல என்பதைப் பிறர் செய்துள்ள சாகித்தியங்களை இவருடையதுடன் ஒப்பிட்டுப் பார்த்து அறிந்து கொள்ளலாம். சொல்லும் இசையும் சேர்ந்து ஏககாலத்தில் பிறப்பதுதான் ஒரு வாக்கேயக்காரனுடைய உண்மைத் திறனைக் காட்டுவது. சொல் ஒருவரிடமும், வர்ண மெட்டு மற்றவரிடமும் உருவாகிப் பிணைந்த சங்கீதம் எப்படியும் தரக் குறைவுடன் தோன்றுவதில் வியப்பில்லை. வாக்கேயக்காரருக்கான சக்தி தனி வரம் பெற்றுத்தான் உருவாக வேண்டும்.

''என்னுடைய கீர்த்தனங்களைப் பிறருக்குச் சொல்லி வைக்க எனக்கு மிகுந்த ஆசைதான். நான் எத்தனையோ இதர வகைகளான வர்ணங்கள், தில்லானாக்கள் செய்திருக்கிறேன். நேரில் என்னிடம் சிட்சை பெறுவார்களானால் அதைவிட எனக்கு வேறு பேறு வேண்டியதில்லை'' என்பார் அடிக்கடி. கச்சேரி செய்யும் வித்துவான்கள் அவ்வப்பொழுது அவரிடம் பாட்டுக்களை அறிந்து ஒழுங்கு செய்து கொண்டு போகிறார்களே அல்லாது, முறையாகப் பத்துப் பேர்களாவது அவரிடம் சிட்சையைப் பெறாததைப் பெரும் குறையாகவே அவர் கருதுகிறார்.

தமக்குச் சொந்த சாகித்தியம் படைப்பில் அநுபவமும், தேர்ச்சியும் இருப்பதை எண்ணித் தற்பெருமையோ அல்லது பிறரிடம் அலட்சிய மனப்பான்மையோ துளியும் அவரிடம் கிடையாது.

இச்சந்தர்ப்பத்தில் ஒரு பழைய சம்பவம் என் நினைவுக்கு வருகிறது. 'பரோபகார சிந்தாமணி' என்ற விருதை காஞ்சி பெரியவாளிடமிருந்து பெற்ற ஒரு பெரியார் மயிலாப்பூரில் அக்காலங்களில் வாழ்ந்தார். அவருடைய இயற் பெயர், ஏ. கிருஷ்ணசுவாமி ஐயர். வாழ்க்கையில் பற்பல நன்மைகளைப் பிறருக்குக் கேட்காமலே தாமே செய்து வந்தவர் அவர். அவருக்குத் தேவாரம், திருவாசகம், அருட்பா, தாயுமானவர் பாட்டுக்கள் இவைகளிலெல்லாம் அலாதிப் பற்றுதல் உண்டு. சிவன் பாட்டிலும் மிக்க ஈடுபாடு அவருக்கு இருந்ததால், மயிலைக் கோயில் பஜனைகளில் எல்லாம் சிவனை அநேகமாக வரவழைக்க ஏற்பாடு செய்வார். சிவனுக்கும் அவரிடம் மிகுந்த மரியாதை உண்டு. ஒரு நாள் நான் சிவன் அவர்களின் தமிழ் சாகித்தியங்களைப் பாராட்டிப் பேசியதும், உடனே அப்பெரியவர் சிறிது கடுமை தொனிக்கும் குரலில், ''எத்தனையோ உயர்ந்த தேவாரத் திருவாசகப் பாட்டுக்களைப் பாடுகிறவனுக்கு, சொந்த சாகித்தியம் செய்யாமல் இருக்க முடியவில்லையா?'' என்று அழுத்துக் கொண்டார். இதைப் பிற்பாடு சிவனிடம் நான் சொன்னதும், பதிலுக்கு அவர் தமக்கு இயல்பாக உள்ள அடக்க ஒடுக்கத்துடன், தேகத்தையும் குறுக்கிக் கொண்டு, ''என்னைக் குறை கூறுவதற்கு நான் அப்படி என்ன பெரியவனாகி விட்டேனா?'' என்றார்.

விநயம் சுபாவமாய் ஒருவரிடம் நிலைத்திருந்தால் அல்லவோ இம்மாதிரியான பதிலை எதிர்பார்க்கலாம்! இரண்டொரு சாகித்தியங்களைச் செய்தபின், அவைகளைப் பற்றித் தாங்களே தமுக்கடித்து, பிறரையும் வதைத்துப் பாடச் சொல்லித் தங்கள் இசைப் பணியை அபாரமாகத் தாங்களே மேம்படுத்த முயலுகிறார்களே! உலகம் போய்க் கொண்டிருக்கும் ரீதியில் நாம் இவ்வித படாடோபங்களையே எங்கும் காண முற்படுகிறோம். ஆனால் பல காலமாய் ஒன்றை ஒன்று வென்ற சாகித்தியங்களைச் செய்தும், அவைகளைப் பல வித்துவான்கள் சுவையுடன் கையாண்டு வருவதைக் கண்டும், துளியும் தமது அடக்கத்தை மாற்றுவதற்கு மனத்தினால் எண்ணிக்கூடப் பார்க்காத வேறொருவரை நம்மால் இக்காலத்தில் கண்டு பிடிக்க இயலாது.

தமது வாழ்நாட்களிலேயே தாமே தம் சாகித்தியங்களை இசைத்தும், பிறர் அவைகளைப் பாடி மெருகேற்றியும் வருவதை நேரில் பார்த்தும், தாம் கச்சேரி என்று செய்ய முன் வந்தால், தியாக அய்யரின் கிருதிகளையும் தவறாமல் இடையிடையே பாடியவண்ணம் இருப்பதைக் காண நமக்கே சில சமயம் எதனால் இவர் இவ்விதம் முனைகிறார் என்று சந்தேகம் தோன்றும். சாதாரணமாய்ப் பாட்டு செய்கிறவர்கள் மகானை அய்யர்வாளின் சிந்தனைகளுக்கிடையே, சொந்த சாகித்தியத்தை நினைவுபடுத்தத் தயங்குவார்கள். ஏற்றத் தாழ்வுகள் ரசிகர்கள் உள்ளங்களில் பளிச்சிடும் அல்லவா? ஆனால் அம்மாதிரி அச்சம் சிவனுக்கு இருக்கிறதாகவே தெரிவதில்லை. சிவன் தமது பாட்டுப் பயிற்சியினிடையே அய்யர்வாளின் கீர்த்தனங்களைச் சுவைத்துப் பாடாமலிருப்பதே யில்லை. ஒரே ஒரு காரணத்தைத்தான் இவ்வித துணிந்த செயலுக்கு ஊகித்துச் சொல்லலாம். எந்தப் பிரபல சாகித்தியகர்த்தாவினுடையதையும் நகல்படுத்தியோ அல்லது ஞாபகப்படுத்தியோ அவருடைய படைப்புக்கள் பிறக்காததே இவ்வித கவலையற்ற போக்குக்கு மூல காரணமாயிருக்க வேண்டும்.

வாக்கேயக்காரருக்கு இன்றியமையாத லட்சணங்கள் சுயத்தன்மையும் தமது உள்ளத்தைத் தவிர வேறொன்றையும் தமது படைப்பில் வடிக்காதிருத்தலும். பாபநாசம் சிவன் அவர்கள் இவ்விதத்தில் தனிச் சிறப்புப் பெற்றவர்.

— கி. சந்திரசேகரன்

பகல் முழுதும்
கடினமான வேலைக்குப் பிறகு...



புத்துயிரளிக்கும்
நெஸ்கா:.பே ஒரு கப்
அருந்துங்கள்
—5 செகண்டில் தயார்!



முற்றிலும் சுத்தமான காப்பி—தென்னிந்திய
காப்பி விதைகளிலிருந்து தயாரிக்கப்பட்டது

நெஸ்கா:.பே

உணர்ச்சி ஊட்டும் நெஸ்கா:.பே
ஊக்கமளித்திடும் நெஸ்கா:.பே!

ஒரு நெஸ்லே தயாரிப்பு


NCE 6369

மூன்று மந்திரவாதிகள்

மூன்றாம் பாகம் — மாயாஜாலக்குதிரை

கதை: வாண்டுமாமா
சித்திரம்: ராமு




ஆம், அந்தத் துர்ப்பாக்கிய சாலி தான் என் தந்தை.
உங்கள் தந்தையைப் பற்றி, அவரது துயரமான மரணத்தைப் பற்றி என் தந்தை சொல்லக் கேட்டிருக்கிறேன்.
உங்கள் தந்தையாரின் பெயர்?
என்னைப் பற்றி நான் இன்னும் ஒன்றுமே சொல்லவில்லையே உங்களுக்கு.
என் பெயர் கலாவதி. வெங்கி நாட்டின் வேந்தர் விசுவதுபரின் ஒரே மகள். இன்று நாட்டு மக்களின் நல் வாழ்வுக்காக அரியணையில் அமர்ந்திருக்கும் அபலை.
அப்படியானால் தங்கள் தந்தை..?
இப்போது இல்லை. காளாமுகன் என்ற கொடிய மந்திரவாதியின் கொட்டத்தை அடக்கி நாட்டைக் காக்கும் பணியிலே தம் உயிரையே பணயமாக்கி விட்டுப் போய் விட்டார்.
ஆனந்தனும் கலாவும் ஒருவரை மற்றவர் அறிந்து கொண்டதும் நட்பு ஏற்படுகிறது.
வேட்டைக்கு வந்த இடத்தில் ஒரு வீரரைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டதே. வாருங்கள் அரண்மனைக்கு.
அரசியாரின் விருந்தாளியாகும் பாக்கியம் எனக்கு...
கலாவின் விருந்தாளியாகப் போன ஆனந்தன் அவள் காதலனானான்.
என்னை மட்டுமல்ல இந்த வேங்கி நாட்டின் ஆட்சியையும் நீங்கள் தான் ஏற்க வேண்டும், தெரிந்ததா?



கண்மணி, கலா! நானும் என் சகோதரர்களும் ஒரு சபதம் செய்திருக்கிறோம். இழந்த நாட்டை மீட்காமல் எந்த இன்ப வாழ்வையும் ஏற்பதில்லை என்று. அதுவரை எனக்காக நீ காத்திருக்க வேண்டும்.
தங்களைக் கணவராக அடைய எத்தனை காலமானாலும் காத்திருப்பேன். இந்த வேங்கி நாடும் அதன் அரசியும் உங்கள் ஆணை எதுவானாலும் அதை நிறைவேற்றி வைக்கக் காத்திருக்கிறார்கள்.
அன்பரே! எங்கள் குல வழக்கப்படி, கன்னிகள் தங்கள் கணவரைத் தேர்ந்தெடுத்ததும், குல தெய்வமான தேவதேவியை வழிபட்டுவரப் போவார்கள். இன்று அந்த முறையில் நான் தேவியிடம் போகிறேன், விடை கொடுங்கள்.
தேவியோடு நானும் வரக்கூடாதா?
கூடாது அன்பே! தேவியின் கானகக் கோயிலுக்குக் காளையர் வரக்கூடாது. கன்னியர் மட்டுமே வழிபடும் தேவியவள். நான் விரைவில் திரும்பி விடுவேன்.
இன்னொரு விஷயம். அரண்மனையின் வடக்குக் கோடியில் இரும்புக் கதவு போட்டு மூடியுள்ள அறைக்கு மட்டும் எக்காரணம் கொண்டும் போக வேண்டாம். அங்கு போக வேண்டிய அவசியமும் இருக்காது. நான் வரட்டுமா?
கலா குறிப்பிட்டுச் சொல்லாமல் இருந்திருந்தால் வம்பில்லை. ஆனால் அவள் குறிப்பிட்டுப் போனதும் அனந்தனுக்கு இருப்புக் கொள்ளவில்லை.
அப்படி அங்கு என்னதான் இருக்கும்? பார்த்து விடுவோமே.
தொடரும்

பெண்மை —
மனங்கவரும்,
மதிமயக்கும்.
துள்ளு
நடைபோடும்
ஒருகணம்,
துவண்டு தடுமாறும்
மறுகணம்.
பெண்மையின்
பல எண்ணங்களின்
குவியலே
'மெ:ப்ரின்'



மெஃப்ரின்


'மெ:ப்ரின்' லுங்கி அணிந்த மங்கையர் புதியதோர் கோலம் படைத்துள்ளனர்!

'மெ:ப்ரின்' பாலியெஸ்டர் இழைகலந்த உடுப்புத் துணிகள்—கேம்ப்ரிக்குகள், லான்கள், பாப்ளின்கள்; இளம் சாயல்களில், எடுப்பான வண்ணங்களில், பெருமிதப் பிரிண்டுகளில் 'மெ:ப்ரின்' 100% பாலியெஸ்டர் சேலைகள், பாலியெஸ்டர் இழைகலந்த காட்டன் சேலைகள்.

தவிர, அதி நவீனமான அருமைபெரும் அழகு வண்ணங்களிலும், பிரிண்டுகளிலும், 'டெரோலெல்' பாலியெஸ்டர் இழைகலந்த காட்டன் ஷர்ட்டிங்குகள்; இன்னெறி மிளிரும் வண்ணங்களிலே, வரிகளிலே, கட்டங்களிலே 'எஸ்டர்காட்' பாலியெஸ்டர் இழைகலந்த காட்டன் சூட்டிங்குகள்.

மபத்லால்
க்ரூப்

AIYARS-M.217 TM



சென்ட்ரல்

பி.வி.ஆர்

ரயிலில் பணம் கொடுக்காமல் செல்ல வேண்டுமானால் பாஸ் கிடைக்க வேண்டும். நாடகம், சினிமாவில் இருப்பது போல் ரயிலில் பிரயாணம் செய்ய காம்ப்ளிமெண்டரி டிக்கட் கிடையாது. இது இருந்தால் பலருக்கு எவ்வளவோ சௌகரியங்கள் உண்டு.

அத்தியாயம் 20

புதன் கிழமை.

காலை நாலரை.

முத்து திடீரென்று விழித்துக் கொண்டான். உடல் வியர்வையில் குளித்தது. நரசிம்மாச்சாரி, சகோதரியின் பெண் குமுதாவை ஒரு கையில் பிடித்துக் கரகரவென்று இழுத்துக் கொண்டு அவன் மீது பாய்ந்து வருகிறார். இன்னொரு கையில் நீண்ட கைத்தடி. முத்து சிருங்கராச்சாரித் தெருவில், மூன்றாவது மாடியில் ஆறடி நீளம் — நான்கு அடி அகல அறையில் ஓடி ஒளிந்து கொள்கிறான்.

இந்தக் கனவுதான் அவனை எழுப்பி விட்டது.

கனவுக்குக் காரணம் முந்தின நாள் அவன் சினிமாவுக்குப் போனதுதான். அம்மாவுக்கு ஆபத்து இல்லை என்று அவனுக்குத் தெரிந்ததும் மறு நாளே—கோயமுத்தூரி லிருந்து புறப்பட்டுச் சென்னைக்குத் திரும்பினான். செவ்வாய்க்கிழமை உதவி மானேஜர் அவனுக்கு ஒரு காம்ப்ளிமெண்டரி டிக்கட் கொடுத்தார். பணம் கொடுத்துச் சினிமாப் பார்த்துப் பழக்கமில்லாத முத்து அதை இரண்டு கைகளாலும் பெற்றுக் கொண்டான். மவுண்ட் ரோட்டில், 'சாந்தி' தியேட்டரில் 'எங்கிருந்தோ வந்தாள்'. சிவாஜி கணேசன் சித்தப் பிரமை பிடித்தவனாக நடிக்கும் படம். என்னதான் விளம்பரங்களையும் விமரிசனங்களையும் பார்த்துப் படம் பார்க்க வேண்டும் என்ற சபலம் அவனுள் இருந்த போதிலும், காசு கொடுத்துச் சினிமாப் பார்ப்பதில்லை என்ற வைராக்கியம் அவனுடைய சபலத்தைப் பூர்த்திசெய்யாமல் இருந்தது.

அவனுடைய அதிர்ஷ்டமோ அல்லது துரதிர்ஷ்டமோ டிக்கட் காசு கொடுக்காமல் கிடைத்தது. டிபனைச் சாப்பிட்டு விட்டு ஐந்தே முக்காலுக்கே தியேட்டர் முன்னால் நின்றான்.

ஆறு பத்துக்கு 'கோல்கேட்' பற்பசை விளம்பரத்தின் போது, அவனுக்கு மூன்றாவது ஸீட்டில் அவன் எப்போதோ கேட்ட ஒரு குரல் அவனை ஈர்த்தது. விளம்பரங்களின்போது எல்லா விளக்குகளும் அணைக்கப்பட்டிருக்கவில்லை. குரல் வந்த திசையில் திரும்பிப் பார்த்தான். அதே சமயம் குரலும் திரும்பிப் பார்த்தது.

தேன் கொட்டினாற்போல் முத்து துள்ளினான். குமுதா! அவனைப் புரிந்து கொண்டாள். கூட வந்த பன்னிரண்டு வயதுப் பையனையும் இழுத்துக்கொண்டு முத்துவுக்குப் பக்கத்தில் வந்து அவள் உட்கார்ந்தாள்.

''முத்து.''

''உம்.''

''சௌக்கியமா ?''

''சௌக்கியந்தான். நீ உன் பழைய இடத்துக்கே போ....''

''நீ எங்கே போயிட்டியோன்னு ரொம்ப நாளுக்கு ஒரே விசாரமாயிருந்தது. பட்டணத்திலேயேதான் இருக்கியா ?''

''ஆமாம்.... நீ தள்ளி உட்காரு.''

''நீ ஏன் பயந்துண்டு போனே?''

''அதோ பார்! டாக்குமெண்டரி ஆரம்பிச்சுடுத்து..... நான் இரண்டு ஸீட் தள்ளி உட்காருகிறேன்.....''

''நான் தொடர்ந்து வருவேன்.... என்னை உனக்குப் பிடிக்கலையா?''

''பிடிச்சிருக்கு.... இப்போ சினிமா பாரு.''

''மாமா நரசிம்மாச்சாரி நாக்பூருக்குப் பிள்ளைகிட்டே போயிட்டார். இப்போ நானும் பாட்டியும்தான். பாட்டிக்கு இப்போ கண்ணே தெரியறதில்லே.''

''டாக்டர்கிட்டே காட்டு....''

''என்னைப் பிடிச்சால் நீ இப்படி விரட்டுவியா ?''

''நீ அய்யங்கார்.... நான் ஐயர்....''

''இது 1971ம் வருஷம்... ரொம்பக் கர்நாடகமா இருக்கியே.... உனக்கு வியாதி பிடிச்ச அம்மா.... எனக்குச் சாகப் போற பாட்டி... நான் ஆசைப் படறதில் தப்பு இருக்கா....?''

''குமுதா! எனக்கு அழுகை வர்றது.''

''நீ இல்லாமல் எனக்கு எல்லாமே வெறிச்சன்னு இருக்கு. பீச்மெல்பா

எனக்கு ரொம்பப் பிடிக்கும். நான் தின்னதேயில்லே. வாங்கித் தரேன்னு அன்னிக்குச் சொன்னியே.... இன்னிக்கு வாங்கித் தர்றியா.....?''

''காசு கொண்டு வரலே....''

''எங்கிட்டே அஞ்சு ரூபாய் இருக்கு. மூணு வாங்கு. இவன் பக்கத்து வீட்டுப் பையன். துணைக்கு வந்திருக்கான்.''


''இண்டர்வல்லே, வெளியே போக முடிஞ்சால் போய் வாங்கித் தரேன்.''

''தாங்க்ஸ்.... இனிமேல் சினிமா பார்க்கறேன்.... நீ என் பக்கத்திலே உட்கார்ந்திருக்கிறது எனக்கு எவ்வளவு பெருமையா, சந்தோஷமா இருக்கு தெரியுமா....? உன் கிராப்பு முன்னைவிட இப்போ அழகா இருக்கு.''

சினிமா ஓடிக் கொண்டிருந்தது.

சிவாஜி கணேசனுக்குத் திடீரென்று பைத்தியம் பிடித்துவிட்டது. 'ஆ ஹா! ஹா....?' என்று ஒரே கத்தல்.

பயத்தில் குமுதா முத்துவின் கையைப் பற்றினாள். அந்தக் காட்சி முடிந்ததும் கையை எடுத்துக் கொண்டாள். முத்து பெருமூச்செறிந்தான். பயத்தினால்தான் அவள் தன் கையைப் பிடித்துக் கொண்டாள் என்ற திருப்தி உண்டாயிற்று. ஆனால் அதே சமயத்




லைப்பாய்
இருக்குமிடம்:அதுவே
ஆரோக்கியம்
இருக்குமிடம்
புத்துணர்ச்சி தருவதிலே ஈடிணையற்றது
லைப்பாய் ஸ்நானம், உற்சாகப் பெருக்கு,
உல்லாச ஊற்று, ஆரோக்கிய மிதப்பு,
நல்ல சோப்புக்குரிய நன்மைகள்
யாவும் பெறுவீர், மேலும் பெறுவீர்
லைப்பாய் துணையால்...
அழுக்கிலுள்ள கிருமிகளைக்
கழுவிக் களைவது
லைப்பாய்
LIFEBUOY
for health
LIFEBUOY

இல், அந்தக் கையின் ஸ்பரிசம் அவன் இதுவரையில் உணர்ந்து அறியாத உணர்ச்சிகளைக் கிளப்பி விட்டது. சிவாஜி மீண்டும் கத்தக் கூடாதா என்று வேண்டிக் கொண்டான்.

ஆனால் சிவாஜி கத்தும் வரையில் குமுதா காத்திருக்கவில்லை. ஒரு சிரிப்புக் காட்சி வந்தது. குமுதா குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள். கை தானாக முத்துவின் பக்கம் போக யத்தனிப்பது போல இருந்தது. முத்து தன்னையும் மீறி, தன்னை நோக்கி வந்து கொண்டிருக்கும் இடது கையை வலது கையால் வரவேற்றான். கோத்துக் கொண்ட கைகள் வெகு நேரம் விடுபடவே யில்லை. விடுபட்ட போது, தனது விரல்கள் அவளுடைய முழங் கையையும் இடுப்பையும் வருடுவதை உணர்ந்தான்.

இடைவேளையின்போது குமுதா பீச்மெல்பாவை மறந்தாள். முத்து தன்னையே மறந்த நிலையில் இருந்தான். ஆனால் அதே சமயத்தில் அவனுடைய இயல்பான கோழைத்தனமும் பயமும் தலைதூக்கின. நரசிம்மாச்சாரியின் கண்டிப்பும் கடுகடுமான முகத் தோற்றம் பயமுறுத்தியது. எழுந்திருந்து போய் விடலாமா என்று யோசித்தான்.

முழு வெளிச்சத்தில் அவளுடன் சேர்ந்து உட்காரப் பிடிக்கவில்லை. 'இதோ வருகிறேன்' என்று சொல்லி விட்டு எழுந்தான்.

இடைவேளைக்குப் பிறகு அவன் தியேட்டருக்குள் நுழையவில்லை. சென்ட்ரலை நோக்கி நடந்தான்.

இரவெல்லாம் குமுதாவை நினைத்து நினைத்துத் தூக்கம் பிடிக்காமல், வெயிட்டிங் ரூம் சோபாவில் முத்து புரண்டான். அவளை ஏமாற்றிவிட்டதான எண்ணம் உண்டாயிற்று. உண்மையில் அவனுக்குக் குமுதாவின் மீது அன்பு தோன்றி விட்டதாகத் தோன்றியது. குமுதா அவன் மீது எல்லை கடந்து அன்பு கொண்டிருக்கிறாள் என்று தெரிந்துவிட்டது. ஆனால் முத்து என்ன செய்வான்? அவன் ஒரு கோழை. பயந்தாங்கொள்ளி. குமுதாவை, திருட்டுத்தனமாக சினிமா இருட்டில் தொடுவதற்கு அவனுக்குத் தைரியம் இருக்கிறது. ஆனால் அவளைக் கல்யாணம் செய்து கொண்டு, உலகத்தில் தலை நிமிர்ந்து நடக்கத் தெம்பு இல்லை. ஐயர் — ஐயங்கார் என்று சால்ஜாப்பு சொல்லி அவளை ஏமாற்றி, தன்னையும் ஏமாற்றிக் கொள்ளுகிறான்.

அவன் ஒரு கோழை.

பெரிய கோழை. பெரிய பெரிய கோழை.

குமுதாவின் ஆசையை 'மேலும் மூட்டிவிட்டு, தன் செய்கையால் அவளுடைய மனத்தில் நம்பிக்கையையும் உண்டாக்கிவிட்டு, பின்வாங்குகிறான். அவன் ரயில்வேயை ஏமாற்றி வெயிட்டிங் ரூமில் தங்கிக் கொண்டிருப்பது போல, குமுதாவின் உள்ளத்தில் தன்னைத் தானே ஏற்றி உட்கார வைத்து விட்டு, ஓடி ஒளிகிறான். குமுதாவைக் கல்யாணம் செய்து கொண்டால் நாலு சொந்தக்காரர்கள் நாலு நாட்களுக்கு ஏதாவது பேசுவார்கள். ஆனால் அவளை மனம் அறிய ஏமாற்றினால்? தெய்வமே அவனைத் தண்டிக்கும்.

இரவு சோபாவில் புரளுகையில் திடீரென்று ஞானோதயம் பிறந்தது.

மறு நாள் அவளைச் சந்தித்து, தான் கல்யாணத்துக்குத் தயார் என்று சொல்லிவிட வேண்டும். மணியின் தயவால் ஏதாவது ஒரு கோயிலிலோ ரிஜிஸ்டிரார் ஆபீஸிலோ அவளை மனைவியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஞானோதயம் பிறந்தும் சிந்தனை நிற்கவில்லை. என்னென்னமோ எண்ணங்கள் தோன்றி அவனை வதைத்தன. பற்பலவிதமான விபரீதங்கள் அவனுடைய கற்பனையில் உதித்தன.

எப்படியோ தூங்கினான்.

சொப்பனங்கள் வந்தன. கல்யாணம் நடந்தது. மணி சாட்சிக் கையெழுத்துப் போட்டான். குமுதாவுக்குப் பீச்மெல்பா வாங்கிக் கொடுத்தான். கடைசியாக நரசிம்மாச்சாரி கைத்தடியுடன் அவனை அடிக்கப் பாய்ந்து வந்தார்.

அவனும் எழுந்தான்.

* * *

பல்லைத் தேய்த்து முகத்தைக் கழுவின முத்துவுக்குப் பொழுது போகவில்லை. சூடாகக் காப்பி சாப்பிட வேண்டும் போல இருந்தது. வால்டாக்ஸ் ரோட்டில், ஒரு சின்னஞ் சிறு ஹோட்டலில் ஐந்து மணிக்கே காப்பி கிடைக்கும். அங்கே சென்றான். போனதும் காப்பி கிடைத்தது. குடித்தான். மீண்டும் சென்ட்ரலுக்குத் திரும்பினான். சரியாக ஐந்தேகால்.

பம்பாய் மெயில் மூன்றாவது பிளாட்பாரத்தில் சில நிமிடங்களில் வந்து சேரும் என்று ஒலிபெருக்கி அலறியது.

முத்து என்னென்னவோ எண்ணங்களில் நடந்தான். குமுதாவை ஒரேயடியாக மறந்து விடலாமா என்று தன்னையே கேட்டுக் கொண்டான். அடுத்த கணம் எப்படி மறப்பது என்று யோசனை செய்ய ஆரம்பித்தான். ரயில்களைப் பற்றி நினைக்கலானான். பிருந்தாவனுக்கு அடுத்தபடியாக வேகமாகப்

போவது வெஸ்ட்கோஸ்ட் எக்ஸ்பிரஸா, கிராண்ட் டிரங்க் எக்ப்ரஸா? அல்லது ஹௌரா மெயிலா? டீஸல் என்ஜினுக்குத் தண்ணீர் வேண்டாம். அது நீராவியில் போவதில்லை. டீஸல் ஆயிலில்தான் போகிறது. நாளைக்கு மண்ணெண்ணெயில்கூடப் போக ஆரம்பிக்குமோ? அப்படிப் போக ஆரம்பித்தால், மண்ணெண்ணெய்க்கு ரேஷன் வரும். பாதிப் பேர் கரி அடுப்பில் சமைப்பார்கள். அதனால் கரி விலை அதிகமாகும். அதனால் சமையல் நிற்காது. விறகு இருக்கிறது. என்ன இருந்தாலும் அடுப்பில் விறகைக் காட்டி, பற்ற வைத்து, ஊதி ஊதிச் சமைப்பது நல்லதுதான். அம்மா முன்னெல்லாம் விறகு அடுப்பில்தான் சமைப்பாள். அவன் கூடச் சுள்ளிகளைப் பொறுக்கிக் கொடுத்திருக்கிறான். ஒரு தடவை பொறுக்கிக் கொண்டிருக்கையில் ஒரு பைத்தியம் சிரித்துக் கொண்டே அவன் அருகில் வந்து, ஒரு கம்பால் திடீரென்று அவன் முதுகில் அடித்தது.

பைத்தியம்... சிவாஜி பைத்தியமாகப் பிரமாதமாக நடித்திருக்கிறார். இடைவேளைக்கு அப்புறம் அவன் பார்த்திருந்தால், பைத்தியம் எப்போது, எப்படி, யாரால் தெளிந்தது என்று தெரிந்திருக்கும். அவன் கோழை. அதனால்தான் ஓடி வந்துவிட்டான். ஆனால் இப்போது தென்பு இருக்கிறது. குமுதாவை மறக்க முடியாது. எப்படி மறக்க முடியும்? எதற்காக மறக்கணும்? செக்கச் சிவக்க எத்தனையோ அய்யங்கார் பெண்களைப் போல் கொழுகொழுவென்றிருக்கிறாள். அவனுக்கும் ஒரு குறைச்சல் இல்லை. நல்ல ஜோடி என்று ரிஜிஸ்திராரே சொல்லி வாழ்த்துவார்.

ஆனால் ஒரு சங்கடம் இருக்கிறது. குடும்பத்தை வெயிட்டிங் ரூமில் நடத்த முடியாது. ஏகப்பட்ட பேர் வந்து போவார்கள். மணியைக் கொண்டே ஒரு சிறு வீட்டைப் பார்க்கச் சொல்ல வேண்டியதுதான்.

மணி நல்லவன். சமயத்துக்கு உபகாரம் செய்கிறான். அவனிடம் எப்படித் திடீர் திடீர் என்று பணம் புரளுகிறது? இதுவரையில் அவன், தான் எந்தக் கம்பெனியில் என்ன வேலை செய்கிறான் என்பதைச் சொன்னதில்லை. என்ன சம்பளம் இருக்கும்? மூந்நூறு, நானூறு? இல்லை, ஐந்நூறு அறுநூறு கூட இருக்குமோ? எவ்வளவு இருந்தால் என்ன? அவன் நல்லவன்.

திடீரென்று சத்தம் கேட்டது. இதுவரையில் ; எதையுமே கவனியாமல், தன் சிந்தனையிலேயே லயித்துப்போன முத்து திடுக்கிட்டுப் பார்த்தான். பம்பாய் மெயில் வந்து சேர்ந்து விட்டது. வரவேற்க வந்தவர்களும் போர்ட்டர்களும் தாறுமாறாக ஓடிக் கொண்டிருந்தார்கள். டிராலிகளின் 'க்ரீச்' 'க்ரீச்' என்ற சத்தம் நாராசமாக எழுந்தது. 'மெயில் வந்துவிட்டது' என்று மூன்று பாஷைகளில் ஒலிபெருக்கி ஒலமிட்டது.

முத்து நின்றான்.

அவன் நின்ற இடத்தில் முதல் வகுப்புப் பெட்டி நின்றது. யார் யாரோ இறங்கினார்கள்.

திடீரென்று முத்து ஆச்சரியத்துடன் கூர்ந்து பார்த்தான். ஒரு பெண் கைப் பெட்டியுடன் இறங்கினாள்.

ரேணுகா!

சுவாமிமலையில் அவனுடைய அப்பாவின் மாமா பேத்தி. கோடை விடுமுறைக்கு அப்பாவுடன் வருவாள். அவனுடைய சொந்தக்காரி. இந்த ரேணுகாவைப் பார்த்துப் பத்து வருடங்களாகி விட்டன. அந்தக் காலத்தில் கொஞ்சம் பூசினாற்போலிருந்த ரேணுகா எப்படி இப்படி ஒல்லியாகப் போய்விட்டாள்! உயரத்தில் பருமன் தெரியவில்லையோ? எவ்வளவு அழகாக, நாகரிகமாக இருக்கிறாள்?

கால் தானாக அவளை நோக்கிச் சென்றது.

அவள் அருகே இன்னொரு பெண் இருந்தாள். அவளை அவன் என்கொயரி கவுண்டரில் ஓரிரு தடவைகள் பார்த்திருக்கிறான்.

''அந்தப் பெட்டியை என்கிட்டே கொடு, ரேணு...'' முத்து பத்து வருடங்களுக்கு முன்னால் அப்படித்தான் அழைத்தான்.

ரேணுகாவின் சிரித்த முகம், திடீரென்று மாறியது. தன்னை யார் 'ரேணு' என்று அழைக்கிறார்கள் என்று பார்த்தாள்.

''நான்தான் ரேணு. என்னை மறந்து விட்டாயா?''

கூட இருந்த மங்களாவும் சற்று விலகி நின்ற கேதாரமும் வியப்புடன் பார்த்தார்கள்.

''நீ....நீ... ஸ்வாமிமலை முத்து தானே?'' ரேணுகா மகிழ்ச்சியில் பூரித்துப் போனாள். பெட்டியைக் கொடுத்தாள்.

''ரொம்பக் காலமாச்சு உன்னைப் பார்த்து... எப்படி இருக்கே? அம்மா சௌக்கியமா?''

''அம்மா செத்துப் போயாச்சு.''

''அடப் பாவமே!''

''டைப்பிஸ்டா இருக்கேன்.''

''ச்சு! ச்சு!'' ரேணுகா இன்னும் அம்மாவின் மரணத்தில் இருக்கிறான் என்று முத்து நினைத்துக் கொண்டான்

''மங்களா! இவர் என் ஒன்றுவிட்ட சகோதரன். ஸ்வாமிமலையில் கோடை விடுமுறையிலே இவன் வீட்டில் கும்மாளம் அடிப்போம்... மாமரத்தில் ஏறுவதில் இவன் நிபுணன்!''

''அப்பா சௌக்கியமா?''

''ஓ! சௌக்கியமா இருக்கார்.''

''எங்கே தங்கப் போறே?''

''இவள் என் வகுப்புத் தோழி; ஆருயிர்த் தோழி. மங்களா... இவள் வீட்டிலே தங்குவேன்.... இவள் அப்பா தான் இந்த ஸ்டேஷனுக்கு எஸ். எஸ். இங்கேயே குவார்ட்டர்ஸ் இருக்கு.... நீயும் வா...''

தான் எங்கே தங்கியிருக்கிறோம் என்பதை மங்களா இருக்கும்போது சொல்லக்கூடாது என்று முத்து தீர்மானம் செய்து கொண்டான். அவள் அப்பாவிடம் சொல்லுவாள். அப்பா எஸ். எஸ். வெயிட்டிங் ரூமை விட்டு அவனை 'எவிக்ட்' பண்ணி விடுவார்.

எல்லோரும் நடந்தார்கள். மாடிப் படியண்டை வந்ததும், ''ரொம்பத் தாங்க்ஸ் மிஸ்டர் கேதாரம். மறுபடியும் நாம் சந்திப்போம்!'' என்றாள் ரேணுகா.

''அவரும் என் வீட்டுக்கு வருகிறார்'' என்றாள் மங்களா.

''ஓ! அப்போ இரட்டிப்பு மகிழ்ச்சி'' என்றாள் ரேணுகா.

''மன்னிக்கணும் மிஸ் மங்களா...! நான் அப்புறமா வருகிறேன்'' என்றான் கேதாரம்.

மங்களா கேதாரத்தைப் பார்த்தாள். முந்தின நாள் மேரியுடன் சந்தித்தபிறகு அவளுடைய மனத்தில் அபிதம் வெறும் நினைவாக மாறிவிட்டாள். அதிலிருந்து அவளுடைய ஆர்வமும் நம்பிக்கையும்

இக்கட்டான நிலை இடுபட்டகதை!

□ தமிழகக் கால் பந்தாட்ட சங்கத்தில் 1946ல் நிர்வாகக் கமிட்டியின் அங்கத்தினராகிப் பிறகு காரியதரிசியாகவும், உபதலைவராகவும் தலைவராகவும் வெள்ளி விழாக் காலம் பணி புரிந்து வருபவர் என். விட்டல். சார்ட்டர்ட் பாங்கியில் அதிகாரியாகப் பணியாற்றும் அவரிடம் இக்கட்டான நிகழ்ச்சிகளைக் கேட்கிறோம்.

''ரஷ்யாவி லிருந்து முதன் முதலாகச் சென்னையில் விளையாடக் கால்பந்தாட்டக் கோஷ்டியினர் வந்திருந்தனர். மொழி பெயர்ப்பாளர் உதவியோடு அவ்வப்போது அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. இரவு பன்னிரண்டு மணி இருக்கும். பேச்சுவாக்கில் தமிழ் நாட்டின் அருமையான பானம் மோர் என்று சொல்லி விட்டோம். உடனே கால்பந்தாட்டக்காரர்கள் 'கொண்டு வா மோர்' என்றனர். இரவு பன்னிரண்டு மணிக்கு மோருக்கு எங்கே போவது? நான் மொழிபெயர்ப்பாளரைத் தனியாக அழைத்து, 'ஐயா! காலேயில் எவ்வளவு வேண்டுமானாலும் மோர் தருவித்துத் தருகிறேன். இப்பொழுது என் யோசனைக்குச் செவிசாய்க்க வேண்டும். ஆட்டக்காரர்களுக்கு ஏமாற்றமும் கோபமும் உண்டாகாதிருக்க மோர் மாதிரி ஒரு கிளாஸில் வரும். உங்க டாக்டரிடம் சொல்லி, அது சாப்பிட ஏற்றதல்ல என்று நிராகரித்துவிடச் சொல்ல வேண்டும்!' என்றேன். ருஷ்ய ஆட்டக்காரர்கள், வந்த இடத்தில் ஆரோக்கியம் கெட்டுவிடக் கூடாது என்பதால் டாக்டரின் அனுமதியின்றி எதையும் அருந்த மாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். டாக்டர் ஒத்துழைக்க முன்வந்தார். இரண்டு மூன்று டம்ளர்களில் வந்த சுண்ணாம்புத் தண்ணீரைப் பரிசோதிப்பது போல் பாவனை செய்த டாக்டர், 'இது குடிப்பதற்கு லாயக்கில்லே!' என்று ஆட்டக்காரர்களுக்குச் சொல்லி, அவர்களது ஏமாற்றத்துக்குத் தம்மையே காரணமாக்கிக் கொண்டு எங்களைக் காத்தார்.''



□ ''நேரு ஸ்டேடியத்தில் தேசிய கால்பந்துப் போட்டி நடந்துகொண்டிருந்தது. மகாராஷ்டிரத்துக்கும் தமிழகத்துக்கும் நடந்த போட்டியில் ஒரு கோல் விழுந்த போது 'ரெபரி' 'இல்லே' என்று மகாராஷ்டிரத்துக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்து விட்டார். அது தமிழக ரசிகர்களுக்குப் பலத்த கோபத்தையும், ஆத்திரத்தையும் தந்து விட்டது.

''ரெபரியின் தீர்ப்புக்குத் தலை வணங்குவதுதானே அழகு? ஆனால் 'இந்தக் கால்பந்தாட்டக் காரியதரிசி விட்டல் மகாராஷ்டிர தேசத்தைச் சேர்ந்தவர். அதனால் மகாராஷ்டிரம் பக்கம் ரெபரி பரிந்து பேசியதும் இவரும் தலையசைத்து விட்டார்' என்று தமிழக ரசிகர்களுக்குத் தப்பபிப்பிராயம் வளர்ந்து ரகளை ஏற்பட்டுவிடும் நிலை. தேசியப்போட்டி மறு நாள் குழப்பமில்லாமல் நடக்க வேண்டும் அல்லவா? 'தமிழர்கள் அனைவரும் அமைதியுடன் தேசிய கால்பந்தாட்டப் போட்டி சிறப்பாக நடக்க உதவ வேணும் -- விட்டல் முதலியார், காரியதரிசி' என்று கொட்டை எழுத்தில் துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு விநியோகித்துத் தப்பபிப்பிராயத்தைப் போக்கியதோடு, நான் தமிழன்தான் என்பதை நாசூக்காக வெளியிட்டுக் குழப்பம் ஏற்படாமல் இருக்க வழி செய்தேன்!'' என்கிறார் தமிழகக் கால்பந்தாட்டத் தலைவர் திரு விட்டல்.

- குண்டுமணி



புதிய 12 லிட்டர்



நீங்கள் எதிர்பார்த்திருந்த பிரஷர் குக்கர்

இடவசதி மிகவுள்ள 'பிரஸ்டிஜ்' எலிகெண்ட் பிரஷர் குக்கர் பெரிய குடும்பங்களுக்கு அல்லது காண்டீன்களுக்கு மிகவும் உகந்தது. 'பிரஸ்டிஜ்' எலிகெண்ட் பிரஷர் குக்கர் 5 தனி அடுக்குகள் உள்ளது — ஆகவே நீங்கள் 5 வித பதார்த்தங்களை ஒரே நேரத்தில் சமைக்கலாம்.

'பிரஸ்டிஜ்' எலிகெண்ட் பிரஷர் குக்கரை ஆஸ்பத்திரிகள், மருத்துவ விடுதிகள், ஆய்வுக் கூடங்களில் கருவிகளை சுத்தப்படுத்தும் பாத்திரமாக பயன்படுத்தலாம். அதன் கனமான வால்வு 15 பவுண்டு P.S.I. விகிதத்தில் தானாகவே இயங்குகிறது. ஸ்பிரிங்குகள், மறைகள் உள்ள சிக்கலான பாத்திரம் போலின்றி இது திறக்கவும் மூடவும் எளிதானது.


இதுவே பிரஸ்டிஜ் வகைகளில் மிகப் பெரியது. இந்த பிரஸ்டிஜ் குக்கருக்குள்ள தனிச் சிறப்புகள் — உறுதியானது; நீண்ட நேரம் உணவு சூடாக இருப்பதற்கேற்ற லேசான அலுமினிய உடற்பகுதி, கச்சிதமான அமைப்பு, பாதுகாப்புள்ள பிளக், சூட்டுக்கு ஈடு கொடுக்கும் கைப்பிடி அத்தனையும் பெற்றுள்ளது. நாடெங்கும் ஸ்பேர் உறுப்புகளும், பராமரிப்பு வசதிகளும் கிடைக்கின்றன. பிரஸ்டிஜ் மட்டுமே ஒவ்வொரு குடும்பத்திற்கும் தகுந்த அளவில் கிடைக்கிறது.


புதிய ப்ரீத் ஹோட்டலியர் ஸ்டீம்-இட்

உங்கள் 'பிரஸ்டிஜ்' எலிகெண்ட் பிரஷர் குக்கரில் 'ப்ரீத்' ஸ்டீம்-இட் மூலம் 7 நிமிடங்களில் நீங்கள் இனி 32 இட்லிகள் தயாரிக்கலாம்.

Prestige

பிரஸ்டிஜ் எலிகென்ட்





இலவசம்!

அறிமுகச் சலுகை

'பிரஸ்டிஜ்' எலிகென்ட் உள்ளே ரூ. 16 பெறுமானமுள்ள ஒரு இலவச ப்ரீத் ஸ்டீம்-இட் (சிறியது) உள்ளது.

முந்துங்கள்

முதல் விற்பனையில் மட்டுமே இச்சலுகை



பிரஸ்டிஜ்-ப்ரீத் மட்டுமே வசதியான வாழ்விற்கு ஏற்றவை

டிடி. (பிரைவேட்) லிமிடெட்
பெங்களூர்-16

TTP-6656

அபரிமிதமாக வளர்ந்து விட்டன. அவனைப் பற்றி அவள் நினைத்துக் கொண்டிருப்பது போல, அவளைப் பற்றி அவனும் நினைத்துக் கொண்டுதான் இருக்கிறான் என்பதை அவள் தானாகவும், அப்பா மூலமும் புரிந்து கொண்டாள். அதற்காக அவள் மனமார, தெய்வத்தை வாழ்த்தினாள்.

இப்போது மங்களா சிந்தனையினூடே கேதாரத்தைப் பார்த்தபோது, அவன் தன் கண்களாலேயே பதில் சொன்னான்.

கேதாரம் மீடியரிங் ரூமை நோக்கிச் செல்ல, மற்ற மூவரும் எஸ். எஸ்.ஸின் வீட்டை நோக்கி நடந்தார்கள்.

''முத்து! உனக்குக் கல்யாணம் ஆயிடுத்தா?''

''ஆயிடும்போல இருக்கு...உனக்கு?''

''இப்போதைக்கு ஆகாது... பெண் பார்த்தாச்சா?''

''நானே பார்த்துக் கொண்டு விட்டேன்... ஆனால் என்ன செய்யறதுன்னு புரியலே. கொஞ்சம் பயமா இருக்கு.''

''காதல் கல்யாணமா?''

''கல்யாணம். ஆனால் காதல் இருக்கான்னு எனக்கே புரியவில்லை. பெண் என்னவோ என்னைக் காதல் பண்ணறமாதிரித்தான் தெரியறது.''

மங்களா கலகலவென்று சிரித்தாள்.

முத்துவுக்கு அவள் மீது கோபம் வந்தது.

''முத்து ரொம்ப வெகுளி, மங்களா.. அவன் மனசிலே எதுவும் நிற்காது. வெளிப்படையாக எதையும் சொல்லி விடுவான். முத்து, உன் மனசிலே ஏன் சந்தேகம்?''

''எனக்கு அவளைப் பிடிச்சு இருக்கு. பிடிச்சிருக்கு என்ற எண்ணமே நேற்று ராத்திரிதான் பிறந்தது... சினிமாவிலே நட்ட நடுவிலே அவளை ஏமாத்திவிட்டு ஓடி வந்து விட்டேன்... ஆனால் ராத்திரி நிதானமாக யோசிச்சபோது நான் பண்ணினது தப்புன்னு தெரிஞ்சது...''

''ஏன் அப்படி ஓடி வந்தே?''

''பயம்... நாலு பேர் ஏதாவது பேசுவார்களோ என்று கலக்கம்.''

''உனக்குப் பிடிச்சா, உன்னை அவளுக்குப் பிடிச்சா ஜாம் ஜாம்னு பண்ணிக்கொள்ள வேண்டியதுதான். யோசனையே பண்ணாதே...''

''குமுதா அய்யங்கார்ப் பெண்.''

''பேரே அழகா இருக்கு!'' என்றாள் மங்களா.

''அய்யங்காராவது, ராவ்ஜியாவது? ஜாதி மதம் எல்லாம் பார்த்துத்தான் கல்யாணம் பண்ண வேணுமா?'' நீ இந்தக் காலத்துப் பிள்ளை. அய்யர் — அய்யங்காரெல்லாம் பார்க்கலாமா?'' ரேணுகா பேசிக்கொண்டே போனாள்.

''உன் பேச்சே எனக்குப் பெரிய பலமாப் போயிடுத்து. கொஞ்ச நாள் இருப்பாய் இல்லையா?''

''சனிக்கிழமை ராத்திரி கல்கத்தாவுக்குப்போறேன். ஏன்? அதற்குள் தாலியைக் கட்டிவிடுகிறேன் என்கிறாயா?''

''அதற்குள் எப்படி முடியும்? அவளை அழைத்து வந்து உனக்குக் காட்டுகிறேன்'' என்றான் முத்து.

''மிஸ்டர் முத்து!'' என்று ஆரம்பித்த மங்களா ''நீங்கள் ரேணுவின் சகோதரர்... எங்களோடே ரொம்ப நெருங்கி வந்து விட்டீர்கள்... நாளைக்கு என் தங்கையின் பிறந்த நாள், சாயங்காலம் தேநீர் விருந்து... நீங்கள் அவசியம் வரவேண்டும்... என்ன...? தனியாக வரப்படாது. குமுதாவையும் அழைத்துக் கொண்டு வரவேண்டும். நானே நேரிடையாக அழைக்கிறேன்'' என்றாள்.

''பார்க்கிறேன்.''

''சரின்னு சொல்லு முத்து. மங்களாவுக்குக் காதல் கல்யாணம் என்றால் ரொம்பப் பிடிக்கும்...''

ரேணுகா சிரித்தாள்.

''உனக்கு எப்படியடி தெரியும்?'' தாழ்ந்த குரலில் கேட்டாள் மங்களா.

ரேணுகா முத்துவை விட்டினுள் அனுப்பிவிட்டு, ''உன்னையும் மிஸ்டர் கேதாரத்தையும் ஓரிரு தடவைகள் கவனித்தேன். உடனே புரிந்து கொண்டேன். அவர் ரொம்பச் சூடிகையான நல்ல அதிகாரி. நீயும் அவரைக் காதலிக்கிறாயா?'' என்று ரகசியமாகக் கேட்டாள்.

மங்களா சிரித்தாள். பிறகு திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவள் போல், ''எனக்குப் பயமாயிருக்கிறது. ரேணு... பல குளறுபடிகள் இருக்கின்றன!'' என்றாள்.

''நான் தீர்த்து வைக்கிறேன். கவலைப்படாதே!'' என்றாள் ரேணுகா. பிறகு, ''ஏண்டி, என் மனசிலே காதலே பிறக்க மாட்டேன் என்கிறது?'' என்று கேட்டாள்.

''உன் மனசைக் கவ்விப் பிடிக்கிற ஆள் இன்னும் உன் கண் முன்னால் வரவில்லை.''

''போன ஞாயிற்றுக்கிழமை காலங்கார்த்தாலே இந்தக் கேதாரம் வந்து, உன் மனசைக் கவ்விணுருக்கும்!''

''உஸ்...'' என்றாள் மங்களா.

(தொடரும்)

everest/117g/ACW

இருமலே, போ!



விரைவாகச்
செயல் புரிவது
இன்சுவையுள்ளது
சிக்கனமானது

க்ளைகோடின் இருமலிலிருந்து பூரண நிவாரணமளிக்கிறது 4 வழிகளில்

முளையில்—இருமல் கேந்திரத்தைக் கட்டுப் படுத்துகிறது.

தொண்டையில்—சளி அடைப்பை அகற்றி எரிச்சலைச் சமனப்படுத்துகிறது.

மார்பில்—இறுகிய தசைநார்களுக்கு இதமளித்து சுலபமாக சுவாசிக்க உதவுகிறது.

நுரையில்களில்—அடைத்துக் கொண்டிருக்கும் சளியையும், கோழையையும் தளர்த்துகிறது.



Alembic **க்ளைகோடின்**

டெர்ப் வசாகா

பூரண இருமல் கட்டுப்பாட்டுக்கு க்ளைகோடினுக்கு இணை எதுவுமில்லை!

இருமல்களுக்கு, இந்தியாவில் மிக அதிகமாக விற்பனையாகும் வீட்டு நிவாரணி

இரவு மணி பத்தடித்து, பதினொன்றடித்து, பன்னிரண்டு அடித்தும் கந்தசாமி தூங்கவில்லை. புரண்டு புரண்டு படுத்ததால் கயிற்றுக் கட்டிலின் கிரீச் கிரீச் சத்தம் இடைவிடாமல் வந்து கொண்டேயிருந்தது. பாதித் தூக்கத்தில் கண் விழித்த கண்ணம்மை, அரை மணி நேரம் பொறுத்துப் பார்த்தாள். கந்தசாமி திரும்பவும் புரண்டபோது கட்டில் பெரிதாகச் சத்தமிடவே எழுந்து விளக்கைப் போட்டாள். கந்தசாமி கொட்டுக் கொட்டென்று விழித்துக்கொண்டிருப்பது தெரிந்தது.

''என்னங்க இது, ராப்பூராத் தூங்காம...? தூக்கம் வரல்லியா? ஏன் வரல்லே?'' என்று கேட்டாள்.

''தூக்கம் வரல்லேன்னு யாரைக் கேட்கிறது? யாரைக் கேட்டா சொல்லுவாங்க?''

விளக்கு வெளிச்சத்தில் அந்த அறையில் உள்ளவை பளிச்சென்று தெரிந்தன. சட்டை மாட்டியிருந்த இடத்துக்குப் பக்கத்தில் அன்று மாலை அவருக்கு அந்த ஊர் போலீஸ்காரர்களால் வாசித்தளிக்கப்பட்ட பிரிவு உபசாரப் பத்திரம் தொங்கியது. முப்பது வருஷ போலீஸ் சர்வீஸில், ஒரு சின்னக் கறைகூடப் படாதவர் அவர். போலீஸ் வேலையைச் சட்டத்தின் இரும்புப் பிடியாகக் கருதாமல் எல்லாருக்கும் உதவும் சாதனமாக அமைத்துக் கொண்டவர். பதினைந்து வருஷங்கள் போலீஸ்காரராகவும், பதினைந்து வருஷங்கள் தலைமைப் போலீஸ்காரராகவும் இருந்துவிட்டு மறு நாள் ஓய்வு பெறுவதை முன்னிட்டு அன்று மாலை போலீஸ் ஸ்டேஷனில் ஒரு பாராட்டு விழா நடந்தது. அன்று அந்த ஊரில் முகாம் செய்திருந்த டி. எஸ். பி.யும் அதில் கலந்து கொண்டார். கந்தசாமியை அவருக்கு நன்றாகத் தெரியும். ஓய்வுபெறும் ஊழியரை மனம் விட்டுப் பாராட்டினார், டி.எஸ்.பி. ''போலீஸ் வேலை என்பது ஒரு விதத்தில் சாக்கடையைத் துப்புரவுபடுத்தும் வேலையைப் போன்றது. சாக்கடையில் கழிவு நீரே விழுவதுபோல் சமூகத்தின் வேண்டாத சக்திகளையே சந்தித்துச் சந்தித்துப் போலீஸ்காரர்களின் மனமும் ஒருவித இறுக்கம் அடைந்துவிடுகிறது. ஆனால் முப்பது வருஷங்கள் சர்வீஸில் இருந்தும் மனத்தைக் கறைபடிய விடாமல் வைத்துக் கொண்டிருப்பவர் கந்தசாமி. போலீஸ் இலாகாவில் ஒரு கரும் புள்ளிகூட இராமல் இருப்பது மிகவும் அரிது. அவர்கள் வேலையின் தன்மை அத்தகையது. அப்படிப்பட்ட இடத்தில் முப்பது வருஷங்களாக இருந்தும் ஒரு கரும்புள்ளிகூட வாங்காமல் ஓய்வுபெறும் கந்தசாமி ஓர் அபூர்வமான, நேர்மையான, நாணயமான, மனிதர்........''

தொடர்ந்து பாராட்டியவர்கள் அத்தனை பேரும் அதையே திருப்பித் திருப்பிச் சொன்னார்கள். ''சர்வீஸில் ஒரு கரும்புள்ளி கூட விழாதவர்.... ஒரு கரும்புள்ளிகூட.....''

கந்தசாமி கட்டிலிலிருந்து எழுந்து போய்க் கண்ணாடி போட்டு மாட்டியிருந்த அந்தப் பாராட்டுப் பத்திரத்தை எடுத்தார். அதையே நெடுநேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

'' என்னங்க இது? இத்தனை வருஷமா வீட்டிலே வந்து படுத்தா, அடுத்த நிமிஷமே நிம்மதியாத் தூங்கிடுவீங்க. இன்னைக்கு என்ன இப்படி....? அப்படி உங்க மனசை என்னதாங்க வாட்டுது? எங்கிட்டே சொல்லக் கூடாதா? பணம் விஷயமாக இருக்க முடி



யாது. பிள்ளை குட்டியினாலே கவலை இல்லே. கடை வச்சிருக்கிற சோமு, நீங்க எப்ப வந்து அவனோட தங்கப் போறீங்கன்னு காத்துக் கிட்டிருக்கான். அப்புறம் என்ன?''

கந்தசாமி பெருமூச்சு விட்டார். ''எனக்கு அந்தக் கவலையெல்லாம் இல்லே. ஆனாலும் தூக்கம் வரமாட்டேங்குது. மனசை ஒரு பெரிய பாரம் அழுத்துது. முப்பது வருஷங்களா எங்கியோ மனசின் கோடியிலே இருந்த பாரம் இப்போ பெரிய இரும்புக் குண்டா மனசிலே கனக்குது.....''

''அது என்னன்னு சொல்லுங்களேன்.''

''சொல்றேன். சொல்லாம இருக்க முடியாது போலிருக்கு. இந்தப் போலீஸ் இலாகாவிலே என்னை மாதிரி வேலை பார்த்தவன் ஒரு கறைகூடப் படியாதவன் இருக்க முடியாது. ஆனா, கண்ணம்மா, ஒரே கறையாக இல்லாம வரிசையாகக் கறை படிஞ்சிருந்ததால் பழைய கறைகள் மறைஞ்சுகிட்டே வரும். ஆனால் ஒரே ஒரு கறை மாத்திரம் இருந்திருந்தா...?''

''என்ன சொல்றீங்க....?''

''என் மேலே கறையே படியல்லேங்கிறது பொய்.....''

''அப்படி என்ன கறை...?''

'' சொல்லிடறேன். சொல்லாட்டி, அதுவும் உன்கிட்டே சொல்லாட்டி, எனக்கு இன்னைக்கு மாத்திரம் இல்லே, இனி உள்ள வாழ்நாள் முழுதும் தூக்கம் வராது.... சொல்லவா ? உனக்கு இப்போ தூக்கம் வருதா?.....?''

''இல்லே, சொல்லுங்க....''

''நான் லஞ்சம் வாங்கல்லே. திருடல்லே. பொய் சொல்லல்லே. மத்தவங்க சொத்தை அபகரிக்கல்லே. ஆனா அதையெல்லாத்தையும்விடப் பெரிசா....'' சொல்லிக் கொண்டு வரும்போதே கந்தசாமியின் உடல் சிலிர்த்தது. குரலைப் பதற்றப்படாமல் வைத்துக் கொண்டு, ''முப்பது வருஷங்களுக்கு முந்தி..'' என்று இரு உள்ளங் கைகளையும் கண்களில் புதைத்துக் கொண்டார் கந்தசாமி.

அப்போது கந்தசாமிக்கு இருபத்தைந்து வயது. போலீஸ் வேலையில் சேர்ந்த புதிது. வெள்ளைக்காரன் காலம். போலீஸ்காரர் என்றால் மதிப்பும் பெருமையும் இருந்த நாட்கள். கந்தசாமிக்குக் கல்யாணம் ஆகவில்லை. அப்போது.....'

தண்ணீர்க் கஷ்டம் உள்ள சின்ன ஊர் அது. ஊரின் மேலக் கோடியில், தெரு முடிந்து இருநூறடி போனதும், சாலையின் இடது பக்கத்தில் இறங்கி ஐம்பது அடி தூரத்தில் பெரிய கிணறு. அருகில் இருந்த நாலைந்து தெருக்களுக்குப் பொதுக் கிணறு அது. பகல் முழுதும் அங்கே குடங்களுடன் குடங்கள் மோதி யுத்தம் நடக்கும். அந்தச் சண்டையில் கலந்து கொண்டு ஜெயிக்கத் தெம்பு இல்லாதவர்கள் மாலை நேரம் மங்கி, முன்னிரவு சூழ்ந்து கூட்டம் குறைந்ததும் தண்ணீர் எடுத்துக் கொண்டு போவார்கள்.

கிணற்றின் அருகில் இருந்த தெருவின் கோடி வீட்டில் ஒரு தாயாரும் பெண்ணும் மாத்திரம் இருந்தார்கள். கிணறு வீட்டின் அருகில் இருந்ததால் அந்த வீட்டினர், அநேகமாக இரவு சூழ்ந்து, கூட்டம் எல்லாம் போன பிறகுதான் தண்ணீர் மொள்ள வருவார்கள்.

போலீஸ்காரர்களின் குடியிருப்பு அந்தக் கிணற்றையும் தாண்டி மேலும் கொஞ்ச தூரம் போன பிறகு வரிசையாக இருந்தது. அதனால் கந்தசாமி அந்தத் தெரு வழியாகப் போகும்போதும் வரும் போதும் அந்த வீட்டில் இருந்த பெண்ணைக் கவனிக்க நேரிட்டது. வயதும் வாளிப்பும் சேர்ந்த அந்தப் பெண்ணை, வீட்டு வாசலிலும், இடுப்பில் குடத்துடன் வழியிலும் பார்க்கும்போதெல்லாம் கந்தசாமியின் வாலிப உடல் சிலிர்க்கும்.

ஒரு நாள். கார்த்திகை மாதம். மாலை முழுதும் மழை பெய்து, இருட்டிய .பிறகு சிறுசிறு தூறல்களாக விழுந்து கொண்டிருந்தது. இரவு மணி எட்டிருக்கும்.


கந்தசாமி டியூட்டி முடிந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். அந்தத் தெரு முனைக்கு வரும்போது அந்த வீட்டினுள்ளிருந்து வெளியே வந்த பெண் குடத்துடன் கிணற்றை நோக்கிச் செல்வது தெரிந்தது. தெரு முடிந்து, சாலையில் இருநூறு அடி தூரத்தையும் அவன் பின்னாலேயே நடந்து கடந்தான். அவள் சாலையிலிருந்து இறங்கிக் கிணற்றுக்குப் போய்க் கயிற்றில் குடத்தைக் கட்டித் தண்ணீர் மொண்டாள். சாலையில் நின்றபடி பின்னால் பார்த்த கந்தசாமி அந்த வேளையில் தண்ணீர் மொள்ள வேறு யாரும் வரவில்லை என்று பார்த்துக் கொண்டான். அவன் கால்கள் சாலையிலிருந்து இறங்கி, கிணற்றை நோக்கி நடந்தன.

அந்த ஐந்து நிமிஷ நேரத்தில் உடல் முழுவதும் சூடேறித் தன்னையே மறந்த கந்தசாமி, எதிரே வந்த பெண்ணைப் பார்த்து ''நில்லு'' என்று மெதுவாகச் சொன்னான். எதிரில் வரும் ஆளுக்காக வழிவிட்டுப் பாதையிலிருந்து இறங்கி நடந்தாள் அவள். கந்தசாமி விடவில்லை. அவள் அருகில் சென்று மெதுவாக விசில் அடித்தான். குடத்தைப் பிடித்தான். கத்தப் போன அவள் வாயை அப்படியே பொத்தினான். இடது கையால் குடத்தை வாங்கிக் கீழே வைத்துவிட்டு அப்படியே அவளைத் தூக்கியபடி, கிணற்றுக்கருகில் பெண்கள் மறைவாகக் குளிக்க என்று கட்டி வைத்திருந்த சிறு கட்டடத்தை நோக்கி நடந்தான்.

அவள் திமிறினாள். இரு கால்களாலும் உதைத்தாள். அவளைக் கட்டடத்தில் கொண்டு போய்க் கிடத்தும் வரையில் கந்தசாமி பிடியை விடவேயில்லை. ஆனால் அவளைக் கீழே இறக்கிய அந்த ஒருகண நேரத்தில் அவள் துள்ளி எழுந்து விட்டாள். கந்தசாமி கையை நீட்டுமுன் அவன் பிடியிலிருந்து அந்தப் பெண் தப்பி வெளியே ஓடிவிட்டாள். கந்தசாமியும் பின்னாலேயே ஓடினான். கிணறு குறுக்கிட்டது.. அவள் கிணற்றுப் படியேறி அதைச் சுற்றிச் சுற்றி வந்தாள். நேர்ப் பாதையில் ஓடாமல் கிணற்றைச் சுற்றியதால், அவளை எட்டிப் பிடிக்கச் சற்று நேரம் ஆகிவிட்டது. கடைசியில் அவன் கையை நீட்டி அவளை எட்டிப் பிடித்தபோது, அவள் மீண்டும் அவன் பிடியிலிருந்து சுழன்று கொண்டு கிணற்றின் கட்டைச் சுவரில் ஏறி


திருமணச்
செல்வம்
ந
ர
சு
ஸ்
கா
பி
100% PURE COFFEE


Kruschen
Salts
க்ருஷன் ஆறு முக்கிய மானதாது உப்புக் களின் சேர்க்கை இது !
• மூத்திரப்பைகளைக் கழுவுகிறது
• நாடிகளை நன்றாக இயங்கச் செய்கிறது
• இரத்தத்தை சுத்த மாக்க உதவுகிறது
• மலச்சிக்கல் அகல உதவுகிறது
• ஜீரண சக்தியைப் பெருக்குகிறது
• பசியெடுக்க வைக் கிறது
• மூட்டு வலிகளை அகற்றுகிறது


மிகச் சகாயமான விலையுள்ள இந்த
டெடர்ஜென்ட் கேக் உங்களுக்கு அளிப்பது...
பாதி
உழைப்பிலே
50% அதிக
பளிச்சிடும்
சலவைத்
திறன்!
திருமதி அவர்களே, இது உங்களுக்கான போனஸ்!
எத்தகைய நீரிலும் போனஸின் நுரைவளம் கொழிக்கும். ஏனெனில் இது சிறப்பாக சலவை செய்யும் ஒரு டெடர்ஜென்ட் — சோப்பல்ல!
அதிக துணிகளை வெகு நன்றாக சலவை செய்ய துணிகளை நன்கு ஊறவிடுங்கள். உபயோகத்திற்குப் பின், போனஸை உலர்ந்த இடத்தில் வைக்கவும்.
இன்றுமுதலே துணிகளைப் பிரகாசமாக சலவை செய்ய உபயோகிப்பீர்
போனஸ்
சிறப்பாக சலவை செய்யும் டெடர்ஜென்ட்!
Bonus
Super-Washing Detergent with Concentrated Washing Power
டாடா தயாரிப்பு

விட்டாள். கந்தசாமி கண் மூடிக் கண்திறக்கு முன் அவள் அப்படியே கிணற்றுள் பாய்ந்து விட்டாள்.

காமத் தீயால் உடல் முழுவதும் வெந்து கொண்டிருந்த கந்தசாமிக்குத் தண்ணீரின் அடியிலிருந்து எழுந்த சத்தம் இரத்தத்தை யெல்லாம் உறைய வைத்தது. அவன் மேலும் யோசித்துக் கொண்டிருக்கவில்லை. அவனும் கட்டைச் சுவரில் ஏறிப் படிகளின் வழியாகக் கீழே இறங்கினான். கடைசிப் படியில் நின்று கொண்டு தண்ணீரில் கையை விட்டுத் துழாவியபோது கையில் அவள் உடல் தட்டுப் படவில்லை. கடைசியில் அவனும் தண்ணீரினுள் மூழ்கி, உள்ளே சேற்றில் செருகியிருந்த உடலை எப்படியோ வெளியில் எடுத்துக் கொண்டு தண்ணீர் மட்டத்துக்கு வந்தான். அந்த இருட்டிலும் பதற்றத்திலும் அவள் மூக்கிலிருந்து மூச்சு வருகிறதா, உயிர் இருக்கிறதா. என்று எதுவுமே பார்க்கத் தோன்றவில்லை. அவளைத் தூக்கிய படியே படிகள் மீது ஏறவும் முடியவில்லை. அப்படியே நின்று கொண்டிருந்தான்.

சிறிது நேரம் கழித்துத் தண்ணீர் எடுக்க வந்த யாரோ குடத்தை உள்ளே விடும் உணர்வு தெரிந்தது. கந்தசாமி கிணற்றுக்குள்ளிருந்து கத்தினான். "கிணத்துக்குள்ளே ஒரு பெண்ணு விழுந்துட்டுது. தெருவுக்குப் போய் ஆட்களைக் கூட்டியாங்க...."

தண்ணீர் எடுக்க வந்த உருவம் பயந்து அலறி அடித்துக் கொண்டு தெருவுக்குப் போயிற்று. கூட்டம் வந்தது. வெளிச்சம் வந்தது. ஆட்கள் உள்ளே இறங்கினார்கள். எல்லாருமாகச் சேர்ந்து பெண்ணின் உடலை வெளியே எடுத்தார்கள்.

முதலுதவி செய்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போனார்கள். கிணற்றில் விழும்போதே தலையில் அடிபட்டுக் காயம் பட்டிருந்ததால், நினைவு திரும்பாமலே அவள் உயிரை விட்டாள்.

ஆஸ்பத்திரியிலிருந்து ஸ்டேஷனுக்கு வந்து போலீஸ் ரிப்போர்ட்டை எழுதினான் கந்தசாமி. "டியூட்டி முடிந்து வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தபோது கிணற்றில் யாரோ விழும் சத்தம் கேட்டு ஓடிப் போய்ப் பார்த்துக் கிணற்றுக்குள் இறங்கி....." என்று நடுங்கும் கையால் எழுதி முடித்தான்.

அந்தப் பெண்ணின் தாயார் சொன்னாள். "அந்தப் பெண்ணுக்குப் பத்து வருஷங்களாகத் தீராத வயிற்று வலி. வறுமை...."



கந்தசாமியின் அறிக்கை மேலதிகாரிகளுக்குப் போன போது. தன் உயிரைப் பொருட்படுத்தாமல் வேறு ஓர் உயிரைக் காப்பாற்றத் துணிந்ததற்காக சர்வீஸில் நல்ல 'மார்க்' கிடைத்தது.

ஆனால் கந்தசாமி பைத்தியம் பிடித்ததுபோல் ஆனான். அதிலிருந்து பெண்களைக் கண்டாலே அவன் உடல் நடுங்கியது. கிணறுகளைப் பார்க்கும் போதெல்லாம் வாய்விட்டுக் கதற நினைத்து முடியாமல் துணியை அடைத்துக் கொண்டு கண்ணீர்விட்டான்.

வருஷங்கள் ஓடியும், பெண்ணைக் கண்டு பயத்தால் கல்யாணமே செய்து கொள்ளாமல் முப்பத்தைந்து வயது வரையில் காலத்தைக் கடத்தினான்....

ஒரு வழியாகச் சொல்லி முடித்ததும், அந்த மார்கழி மாதக் குளிரிலும் கந்தசாமியின் உடல் முழுவதும் வியர்த்தது. குரல் குழறி, நடுங்கியது.


அவர் மௌனமானார். கண்ணம்மையும் பேச்சற்றுப் போனாள்.

நெடுநேரம் கழித்துக் கண்ணம்மை சொன்னாள். "போகட்டும். எப்பவோ முப்பது வருஷங்களுக்கு முந்தி நடந்தது. அந்தப் பெண்ணின் தலையில் அப்படி எழுதியிருந்தது. அதைப் பத்தி இனிமேல் என்ன? எல்லாத்தையும் மறந்துட்டுத் தூங்குங்க...."

"முப்பது வருஷமா, யார்கிட்டேயாவது மனம் விட்டுச் சொல்ல மாட்டோமான்னு இருந்தது. எத்தனையோ தடவை சொல்லியிருக்கேன். ஆனால், என் கதையா இல்லே. ராத்திரி வேளையிலே, போலீஸ் லாக்கப்பிலே இருக்கிற கைதிங்ககிட்டே, பொழுதுபோகக் கதை சொல்கிற மாதிரி, யார் வாழ்க்கையிலேயோ நடந்ததாகச் சொல்லி என் மனசைச் சமாதானப்படுத்திக்கப் பார்த்திருக்கேன். இப்பதான் உன்கிட்டே, அது நான்தான்னு சொல்றேன்......"

" சொல்லிட்டீங்க இல்லே? இனிமேல் என்ன? பாரம் மனசிலேருந்து இறங்கிட்டு இல்லே ? பேசாமல் தூங்குங்க. இதைச் சொன்னதாலே எனக்கு உங்க மேலே இருக்கிற மதிப்பு மாறப் போறதில்லே. போதுமில்லே? தூங்குங்க."

" ஊருக்கெல்லாம் சட்டம் பேசினேன். எனக்குத் தெரிஞ்ச குத்தம் செய்தவனே, அவன் ஆயிரம் ரூபாய் தருவதாகச் சொன்னதும் விட்டதில்லே. ஆனால் என் வரையில் சட்டம் என்கிறதே பொய்யாப் போச்சு. ஒரு



''உனக்கு முன் பக்கம் கிழக்கு. வலதுபக்கம் தெற்கு. இடது பக்கம் வடக்கு. பின் பக்கம் என்ன, சொல்லு?''
''டிராயர்லே கிழிசல் சார்! அப்பவே அம்மாகிட்டே சொன்னேன் வாத்தியார் கேப்பாரும்மா, தச்சு அனுப்புன்னு. தைக்கலே.''

குத்தம் பண்ணினு, அவன் தாற்காலிகமாக வேணும்னு தப்பிச்சுக்கலாம். ஆனுல், என்னைக்காவது அகப்பட்டுக் கிட்டுத்தான் தீருவான்னு அடிக்க அடிக்கச் சொல்லி யிருக்கேன். நான் மாத்திரம் கடைசி வரையிலே தப்பிச்சுக் கிட்டேன். இனிமேல் என்ன பண்ணுவது? ரிடையர் ஆன பிறகு கோயில் கோயிலாகப் போய்ச் செய்த குத்தத்தைச் சொல்லி மன்னிப்புக் கேட்க லாம்......''

''சொல்லுங்க, சிரிப் பாங்க.... சரி, சரி, மணி என்ன தெரியுமா? நாலு. தூங்குங்க..'' என்று சொல்லி, எழுந்து வந்து கீழே விழுந்து கிடந்த போர்வையை எடுத் துக் கந்தசாமியின் உடல்மீது போர்த்திவிட்டுத் தன் இடத் துக்குப் போய்ப் படுத்துக் கொண்டாள் கண்ணம்மை.

சிறிது நேரத்தில் வாசல் பக்கத்துக் கதவு இடிக்கும் சத்தமும், ''ஐயா...'' என்று கூப் பிடும் சத்தமும் கேட்டன. ''ஐயா..... ஏட்டையா...... !''

கந்தசாமி எழுந்து விளக்கைப் போட்டு விட்டுக் கதவைத் திறந்தார்.

வாசலில் ஐந்தாறு பேர்கள் நின்று கொண் டிருந்தார்கள். வராந்தாவுக்கு வெளியே இருட்டில் மேலும் ஐந்தாறு பேர் நின்று கொண்டிருந்தார்கள்.

முதலில் நின்று கொண்டிருந்தவர் மேப்ப ஞர் கிராமப் பஞ்சாயத்துப் போர்டு தலைவர். ''ஏட்டையா, ஒரு அசம்பாவிதம் நடந்து போயிடுச்சு. அதை உங்ககிட்ட நேரிலே சொல்லிட்டுப் போகலாம்னுதான் இந்த நேரத்திலே வந்து கதவைத் தட்டி னேம்'' என்று சொல்லி விட்டுக் கைகளைப் பிசைந்தவாறே பின்னல் நின்றவர்களைப் பார்த்தார். அவர்கள், ''நீங்களே சொல் லுங்கள்'' என்று ஜாடை காட்டவே அவரே தட்டுத் தடுமாறித் தொடர்ந்தார்.

''உங்க மகன் சோமுவைப் பத்திங்க.... கடையை நல்லாத்தான் நடத்திக்கிட்டிருந் தான். ஊரிலே மேலக்கோடியிலே தனியே ஒரு ஏழைக் குடும்பம். அம்மாவும் பெண்ணுமா இருந்திச்சு. கடையிலே வந்து கடனுக்குச் சாமான் வாங்கும். கடையிலே எல்லாருக்கும் தான் கடன் உண்டு. உங்க மகன் என்ன நினைச்சுட்டானே? கடன் கொடுத்திருக்கிற தைரியமோ என்னமோ, ராத்திரி அந்தக் கோடிக் குடிசைக்குள்ளாற எப்படியோ போயிட்டான்..'ஐயையோ'ன்னு மகள் கத்த, அம்மாவும் சேர்ந்து கத்த, ஊர் கூடிடிச்சு. நாலு பேரா சேர்ந்து, ஓடப் பார்த்த சோமு வைக் கட்டிட்டாங்க. இதைப் பெரிய கேசா பதிஞ்சு மேசிரிட்டு வரையிலே கொண்டு போகணும்னு ஒரு கட்சியும், 'அட வயசுப் பயல் உள்ளே ஏறிக் குதிச்சிருக்கான், சத்தம் போட்டு ஊரைக் கூட்டிட்டதாலே பெண்ணு மானம் போகல்லே, ஏட் டையா மகன்கிறதாலே மேலே கேசு போடறது சங் கடம்'னு ஒரு கட்சியுமா ராத்திரிப் பூராக் கூடி யோசிச் சோம். கடைசியிலே நேரா உங்ககிட்டேயே வந்து சொல் லிடறதுன்னு தீர்மானிச்சு வந் திருக்கோமுங்க....'' என்று ஒருவாறு சொல்லிமுடித்தார்.

கதவைப் பிடித்தபடியே, கீழே விழுந்து விடாமல் கேட்டுக் கொண்டிருந்தார் கந்தசாமி. கடைசியில், '' எங்கே அவன்...?'' என்று கேட்டார்.

''கையோடே பிடிச்சாந் திருக்கோம்.....அதோ, கைக் கட்டோடு நிக்கிறான்....''

''உங்களை மீறி மேலே கேசு போட எங்களுக்கு மனசில் லேங்க. ஏதோ பெண்ணு கெடுக்கிறதினலே, இத்தோட விட்டுட லாம். ஆனு, ஒண்ணுங்க. இனிமே சோமு ஊர்ப் பக்கம் தலை காட்டக் கூடாது. மளிகைக் கடை சாமான் முச்சூடும் அள்ளி வண்டியிலே போட்டுக் கொண்டாந்துட்டோம். அவன் உங்க மகனு இருக்கிறதனலே.....''

கந்தசாமி வராந்தாவைக் கடந்து கீழே படியிறங்கினர். அங்கே சோமு இரு கைகளும் கட்டப்பட்டுத் தலை குனிந்தவாறு இருந் தான். ஒருவர் அவன் கட்டுக்களை அவிழ்த்து விட்டார்.

''ஏன் கட்டை அவிழ்க்கிறீங்க? அப் படியே அழைச்சுக்கிட்டு வாங்க ஸ்டேஷ னுக்கு.''

''என்னுங்க, இது.......?''

''நாலைந்து பேர் ஸ்டேஷனுக்கு வாங்க. கேசு பதிஞ்சு நடவடிக்கை எடுத்தாகணும்..''

''என்னங்க, இது? ஊர்க்காரங்க நாங்க சொல்றோம். நடவடிக்கை ஒண்ணும் வேணும்னு.....''


'' குத்தம் பண்ணினுல் தப்பித்துக் கொள் ளவே முடியாது....... உம்.....''

''குத்தம் நடக்காம ஊரிலே பார்த்துக்கிட் டாங்களே.....''

''குத்தம் இவன் செய்யாம இருக்கலாம். இவன் அப்பன் பண்ணியிருக்கலாம். தண் டனையை அனுபவிச்சுத்தான் தீரணும்..... உம்......''

சட்டையை எடுத்து மாட்டிக் கொள்ள உள்ளே திரும்பினர். அங்கே கதவு மறைவில் நின்று எல்லாவற்றையும் கேட்டுக் கொண் டிருந்த கண்ணம்மை, ''என்னுங்க?'' என்று வாயில் துணியை அடைத்துக் கொண்டாள்.

'' ஆண்டவன் ரொம்ப நல்லவரு, கண்ணம்மை. 'ஐயோ, குத்தம் பண்ணி னேமே, தப்பிச்சுக்கிட்டோமே'ன்னு மன சார நினைச்சு வருத்தப்பட்டேன். 'வருத்தப் படாதேடா, தண்டனை நான் வாங்கித் தாறேன்'னு ஆண்டவனே இப்படிச் செய்திருக் காரு..... உம்.... என் கையாலே எடுக்கிற கடைசி கேசு இது! என்றார்.''


1911
1921
1931
1941
1951
1961
1971
ஸ்தாபிதம்
1901

தம் பதின்மூன்றும் வயதிலேயே, சர்க்கஸில் மிரு கங்களை ஆட்டி வைக்கும் தொழிலின்மீது காதல் கொண்டு விஸ்கான்ஸினிலிருந்து தம் செல்வக் குடும் பத்தை விட்டு ஓடிப்போனவர் நார்மன் ப்ரோவ்ஸ்க். காட்டில் மிருகங்களைப் பிடித்து விற்பனை செய்யும் ஒரு வியாபாரி அவரை ஆப்பிரிக்காவில் வன விலங்கு களைப் பிடிக்கும் கோஷ்டியில் எடுபிடி வேலை செய்ய அனுப்பினார். பிடிபடும் குட்டிகளைப் பரா மரிக்கும்வேலை. ப்ரோவ்ஸ்க்குக்கு அது மிகவும் பிடித் திருந்தது. அன்று அவைகளிடம் ஏற்பட்ட நட்பு விரைவிலேயே ப்ரோவ்ஸ்கை உலகத்தின் மிகச் சிறந்த சர்க்கஸ் மிருக வித்தைக்காரராக்கிவிட்டது.

நாற்பது ஆண்டு காலத்தில் நார்மன் ப்ரோவ்ஸ்க் அள்ளிக் குவித்துக் கொண்ட புகழ் அளவிடற்கரியது.

''மை டேர்ன் நெக்ஸ்ட்'' என்ற அவரது புத்தகத் தின் சுவையான பகுதி இது.



என் சிங்கத்தோழி

நார்மன் ப்ரோவ்ஸ்க்

தமிழாக்கம்: யமுனா

அண்ட்ராகிளிஸும் சிங்கமும் என்ற கதையை அநேகமாக எல்லோரும் பாடப் புத்தகத்தில் படித்திருப்பார்கள்.

அண்ட்ராகிளிஸ் காட்டில் போய்க் கொண் டிருந்தபோது காலில் முள் தைத்து அவதிப் பட்டுக் கொண்டிருந்த சிங்கம் ஒன்றைக் கண் டான்; பயப்படாமல் இரக்க மனத்துடன் அதனருகில் சென்று, முள்ளை அகற்றித் துயர் தீர்த்துவிட்டுப் போனான். பின்னாளில் அவனே மன்னனின் கைதியாகி, ஒரு சிங்கக் கூட்டுக் குள் இரையாக நுழையும்படி நேர்ந்தது. போய்ப் பார்த்தால் அதே பழைய சிங்கம். பசியோடு பாய்ந்து வந்த அந்தச் சிங்கம், அருகில் வந்ததும் அவனை அடையாளம் தெரிந்து கொண்டு, அடிபணிந்து, வாலை ஆட்டி, விசுவாசத்துடன் நின்று எல்லாரை யும் வியப்பில் ஆழ்த்தியது.

'இப்படி நிகழ்வது சாத்தியமா? வெறும் கட்டுக் கதையாகத்தான் இருக்கும்' என்று நானே ஒரு காலத்தில் நினைத்தேன். ஆனால் என் வாழ்க்கையில் நானே, ஓர் அண்ட்ரா கிளிஸாக ஒரு சிங்கத்துக்கு மாறியாக வேண் டிய அனுபவம் வாய்த்தது. கதையில் வந்தது சிங்க ராஜா; என் வாழ்க்கையில் வந்தவள் ஒரு சிங்க ராணி.

அவள் பெயர் கோரே. நான் அவளை முதன் முதல் சந்தித்தது மார் செயில்ஸ் துறை முகத்தில். அப்போது அவளுக்கு மூன்றே வயதுதான் ஆகி யிருந்தது. துருதுருவென்று கண் கவர் அழகியாக இருந்தாள். ஆப்பிரிக்காவி

விருந்து, தன் வயதையொத்த ஏழெட்டு ஆண் சிங்கக் குட்டிகளுடன், அவளும் வந்து இறங்கியிருந்தாள்.

சுதந்திரமாக, நிர்ப்பயமாக, மட்டற்ற சுதந்திரத்துடன் வாழ்ந்த தன் வன வாழ்க்கையைச் சில வாரங்களுக்கு முன் இழந்து, இப்போது பயமும் குழப்பமும், நிம்மதியின்மையுமாகக் கூண்டில் அடைந்து கிடந்தாள். அவளைத்தான் நான் பழக்க வேண்டும்.

அவள் கூட வந்த குட்டிகளையெல்லாம் கூட வெகு சீக்கிரத்தில் என் விருப்பம்போல் ஆட்டிவைத்து, அரீனாவுக்கு வந்து வித்தைகள் செய்யப் பழக்கிய பின்னும் கோரே மட்டும் சகஜ பாவமே காட்டாமல் ஒதுங்கியிருந்தாள். நான் நீட்டிய நேசக் கரங்களை அவள் பொருட்படுத்தவேயில்லை. அதுமட்டுமல்ல; என்மீது தக்க தருணத்தில் பாய்வதற்காக, என் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிப்பதாகச் சந்தேகம் கூட எழுந்தது.

என் பயம் வீண்போகவில்லை. ஒரு நாள் நிஜமாகவே அது நிகழ்ந்து விட்டது. அரீனாவில் ஒரு நாள் சாட்டையை நான் கவனக் குறைவால் கீழே நழுவ விட்டு விட்டு, பின் எடுக்கக் குனிந்தபோது, கோரே என் பிடரி மீது தாவிப் பாய்ந்து விட்டாள். விநாடிப் பொழுதில், அது மின்வேகத்தில் நிகழ்ந்து விட்டது; கூண்டின் கதவு இருக்கிற இடத்தைக்கூடத் தெரிந்துகொள்ள இயலாதபடி என் முகம் முழுவதும் ரத்தம் வழிந்தது. ஆனால் அவளுடைய கூரிய நகங்கள் என்னைச் சிராய்த்து விழ்த்தி விட்டு அப்பால் சென்று விட்டன. நல்ல வேளையாக, சாட்டை என் கையில் கிடைத்து விட்டது. ஒரு சொடுக்குச் சொடுக்கி, எல்லாவற்றையும் அதனதன் இடத்தில் அடக்கித் தப்பினேன்.

அடுத்த முகாமான செக்கோஸ்லோவெகியாவில், கோரே அரீனாவில் சற்று அடங்கியிருந்தமாதிரி இருந்தது. ஆனால் ஆட்டம் முடிகிற தறுவாயில், அவள் சற்றும் எதிர்பாராத விதமாக என்மீது மீண்டும் பாய்ந்துவிட்டாள்.

என் இரு தோள்களிலும் தன் நகங்களைப் பதித்துக் கொண்டு அவள் உறுமின பிறகு தான் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது எனக்குப் புரிந்தது. அதிர்ஷ்டவசமாக என் கைகள் நீண்டு அவளுடைய குரல்வளையைப் பற்றி அசுர பலத்துடன் இறுக்கின. இதை அவள் எதிர்பார்க்கவில்லை போலும். அவள் மூச்சுத் திணறியது. என் புஜங்களின் மீதிருந்த அவளுடைய இரு பாதங்களும் சோர்ந்து நழுவின. ஆனால் அதற்குள் என் புஜங்களில் ரத்தப் பிரவாகமே கொட்டி என் காலடியில் குளமாகத் தேங்கிவிட்டது.

ஆனால் சுற்றிலுமிருந்த யாருமே எனக்கு நேர்ந்த ஆபத்தைப் புரிந்து கொள்ளவில்லை. என் தோள் மீது கோரே உறுமினதையும் அதனுடன் நான் போராடினதையும் ஒரு சர்க்கஸ் காட்சி என்றே நினைத்துச் சபையினர் ஆரவாரம் செய்து கொண்டிருந்தார்கள். தன் சுதந்திரத்தை அநியாயமாகப் பறித்து விட்ட மனித குலத்தின் பிரதிநிதியை ஒரு வன மிருகம் பழிதீர்த்துக் கொள்ள முயன்ற முயற்சி என்பது, பின்னால்தான் எல்லாருக்கும் தெரிந்தது.

கோரே மூச்சுத் திணறியதும், என்னை விட்டு விட்டு நழுவி அப்பால் போய்விட்டாள். நான் தட்டுத் தடுமாறி வெளியே வந்து விழுந்தேன்; பிழைத்தேன்!

பிரசவம் பார்த்தேன்

ஒரு வருஷம் ஓடிப் போய் விட்டது. இடையில் விபரீதமாக ஏதும் நடைபெறவில்லை. அப்போது இங்கிலாந்தில் என் சிங்கப் பரிவாரங்களுடன் காட்சிகளை நடத்திக்கொண்டிருந்தேன்.

கோரே அப்போது பூர்ண கர்ப்பிணியாக இருந்தாள். பிரசவ சமயம். ஒரு நாள் பிற்பகலில் சர்க்கஸ் உணவுச்சாலையில் என் உதவியாளர்களுடன் அமர்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று என் பணியாள் ஒருவன் உள்ளே ஓடிவந்து, ''கோரே இறந்து கொண்டிருக்கிறாள்; கோரே இறந்து கொண்டிருக்கிறாள்'' என்று கத்தினான்.

அரைக் கணமும் தாமதிக்காமல் எழுந்து, கட்டிடத்தின் பின் பகுதியை நோக்கி ஓடினேன். அங்கேதான் கோரேயின் இரும்புக் கூண்டு இருந்தது. என்னைத் தொடர்ந்து என் உதவியாளர்களும் ஓடி வந்தார்கள்.

கூண்டுக்குள் கோரே புழுவாகத் துடித்துக் கொண்டிருந்தாள். உறுமிக் கொண்டும், தீனமாகக் கத்திக் கொண்டும், வளைய வளைய வந்தும், சுருண்டும், உருண்டும், சில சமயம் கூண்டின் கம்பிகளைக் கடித்தும் அவள் பட்ட பாட்டைக் கண்டு எனக்குத் தாள முடியவில்லை. பாவம், அதுதானே அவளுக்கு முதல் பிரசவம்!

''நான் அவளிடம் போகப் போகிறேன்'' என்று திடீரென்று கத்தினேன். ''இவ்வளவு கொடும் துயரை அவள் அநுபவித்துக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டு என்னால் இங்கே ஒரு நிமிஷம்கூட நிற்க முடியாது'' என்று வாசற் கதவருகில் விரைந்தேன்.

''ப்ரோஸ்கி, இது என்ன முட்டாள்தனமான தீர்மானம்! ஏற்கனவே அவள் உன் மீது வஞ்சம் கொண்டிருக்கிறாள். இப்போது போனால் கொன்றே விடுவாள்'' என்று நண்பர்கள் தடுத்தார்கள்.

ஆனால் நான் அதற்குள் கோரேயின் கூண்டுக்குள் விருட்டென்று போய்க் கதவைச் சாத்திக் கொண்டு விட்டேன். திரும்பினேன். கோரேயை நோக்கி இரண்டடிகூட எடுத்து வைத்திருக்க மாட்டேன். அதற்குள் அவளே என்மீது பாய்ந்து என் இரு தோள்களின் மீதும் இரு முன்னங் கால்களையும் போட்டு, அப்படியே அணைத்துக் கட்டிக்கொண்டாள். நல்லவேளை பக்கத்துக் கிராதிச் சுவர் மீது நான் சாய்ந்து விட்டதால், கீழே விழாமல் தப்பினேன். கோரேயின் இரு முன்னங் கால்களும் என் தோள்களைத் தழுவியிருந்தன. அவள் முகம் என் இடத் தோளில் சாய்ந்திருந்தது. கம்பிச் சுவர் பின்னால் இருந்ததினால் அவளுடைய பெரும் பாரத்தை என்னால் சுலபமாகத் தாங்கிக் கொள்ள முடிந்தது.

அப்போது என்னிடம் எந்த ஆயுதமும் இல்லை. இருந்தாலும் பிரயோசனப்படாது. அவசியமும் இல்லை. அவள் வேதனை மட்டும் தான் என் நினைவில் இருந்தது. நானும் அவளை



கண்களுக் கெட்டாத சிறப்புகள் பல கொண்டது "ஸான்ஃபரைஸ்டு" சின்னம்

"ஸான்ஃபரைஸ்டு" சின்னம் சுருக்கத்திற்கு எதிரான பாதுகாப்பை உங்களுக்கு அளிக்கிறது. "ஸான்ஃபரைஸ்டு" முத்திரையிட்ட பருத்தி மற்றும் பருத்தி கலந்த துணிகளிலிருந்து தயாரிக்கப்படும் ஆடை அணிகள், எத்தனை தடவைகள் சலவை செய்தாலும் உருமாறுவதோ சுருங்குவதோ இல்லை.

"ஸான்ஃபரைஸ்டு" முத்திரையிட்ட துணிகள் நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு நல்ல மதிப்பைப் பெறுவதற்கு உத்தரவாதம். "ஸான்ஃபரைஸ்டு" கலை நுட்பப் பிரதிநிதிகளின் சுருக்கத்திற்கெதிரான கடும் சோதனைகளில் தேறியவை இத் துணிகள். இந்த டிரேடு மார்க்கின் உரிமையாளர்கள் விதித்துள்ள தராதரங்களுக்கு உட்பட்ட துணிகள் இவை என்று உறுதி செய்வதற்காக அவர்கள் சோதனை செய்கிறார்கள், அளவெடுக்கிறார்கள், அளவுகளை ஒத்திட்டுப் பார்க்கிறார்கள், புள்ளி விவரங்களை சோதிக்கிறார்கள், குறிப்பெடுத்து அனுப்புகிறார்கள்.

·SANFORIZED·
REGD TD MK

'ஸான்ஃபரைஸ்ட்' என்னும் டிரேட் மார்க்கின் உரிமையாளர்களான க்ளுயெட், பீபாடி அண்ட் கோ. இன்க். (யு.எஸ்.ஏ.வில் வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் இணைக்கப்பட்டது) வெளியிட்டது. சுருங்காத்தன்மையின் கடுமையான தேவைகளைப் பூர்த்தி செய்யும், பரிசீலிக்கப்பட்ட துணிகளுக்கு மட்டுமே உரிமையாளர்கள் இந்த டிரேட் மார்க்கை உபயோகிக்கின்றனர் அல்லது பதிவு செய்யப்பட்ட உபயோகிப்பாளர்களை உபயோகிக்க அனுமதிக்கின்றனர்.

maa SAN.728 TAM.

அணைத்துக் கொண்டு அவள் தலையை அன்பாகத் தடவிக் கொடுத்தேன். தலை, பிடரி, உடம்பு எல்லாவற்றையும் தடவிக்கொடுத்தேன். அது மட்டுமல்ல; நோயுற்ற ஒரு நண்பனுக்கு ஆறுதல் சொல்கிற மாதிரி கோரேக்கும் ஆறுதல் மொழிகளை வாய் விட்டுச் சொன்னேன். ''தைரியமாக இரு, கோரே'' என்றேன்.

ஆச்சரியப்படும்படியாகக் கோரேயின் பதற்றம் அடங்கியது. ஆறுதலின் இனிய ஸ்பரிசத்தை அவள் உணர்ந்தாள். ஆனாலும் பிரசவ வலியினால் அவள் உடல் இன்னும் நடுங்கிக்கொண்டுதான் இருந்தது.

எத்தனை நேரம்தான் அந்தப் பெரும் பாரத்துடன் ஒரே நிலையில் நிற்பது. என் கால்கள் வலுவிழந்து தடுமாறத் தொடங்கின. கொஞ்சம் நகர்ந்து என்னை ஒரு சௌகரியமான நிலையில் வைத்துக் கொள்ள முயன்றேன். ஆனால் அதைக் கண்டதும், ''வேண்டாம்; தயவு செய்து என்னை விட்டுப் போகாதே'' என்கிற மாதிரி அவள் பிடி இன்னும் வலுவாக என்னை இறுக்கியது.

திடீரென்று கோரே என்னையும் இழுத்துக் கொண்டு, பெரிதாகக் கத்திக்கொண்டு கீழே விழுந்து தரையில் இப்படியும் அப்படியுமாக உருள ஆரம்பித்தாள். என்னால் விடுவித்துக் கொள்ளவும் முடியவில்லை, இடிபடவும் முடியவில்லை.

சில நிமிடங்களுக்குப் பின் அவள் உடம்பு ஒரு தடவை குலுங்கினது தெரிந்தது. அவள் உருளல் நின்றது — ஓ. அவளுக்குப் பிரசவமாகி விட்டது... ஓர் அழகான சின்ன சிங்கக் குட்டி... ஆனால் இறந்து பிறந்தது..

கோரே துயர் நீங்கின மகிழ்ச்சிப் பெருக்கில் ஒரு சிரிப்புச் சிரித்தாள். அவள் பிடி தளர்ந்தது. நான் மெதுவாக எழுந்திருப்பதற்குள் இன்னும் மூன்று குட்டிகளை ஈன்று விட்டு, சோர்ந்து படுத்துக் கண்களை மூடிக் கொண்டாள். அசதியினாலும் அடுத்த கணமே தூங்கவும் ஆரம்பித்து விட்டாள்.

பஞ்சுப் பொதிகளைப் போன்ற அழகிய கவர்ச்சிகரமான மூன்று சிங்கக் குட்டிகளையும் எடுத்துத் தடவிக் கொடுத்துவிட்டு, கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தேன்.

கோரேயின் நேசக் கரம்

டேனியல், இரேயோலா, ஸோனிபாய் என்று கோரேயின் குழந்தைகளுக்கு நான் பெயர் சூட்டினேன். என் சிங்கப் பரிவாரத்தில் அவர்களும் சேர்ந்து அதை ரம்மியமாக்கினார்கள்.

பிரசவத்துக்குப் பிறகு கோரே அடியோடு மாறிப் போய்விட்டாள். பிரசவம் நல்லபடியாக முடிந்து, அவள் தூங்கத் தொடங்கினாள் என்றேனல்லவா? அவள் விழித்துக்கொண்டு விட்டாள் என்று தெரிந்ததும், நான் அவளைப் பார்க்கப் போனேன். என்னைக் கண்டதும் கம்பிகளின் அருகில் ஓடிவந்து பின் கால்களில் எழுந்து நின்றாள். நான் நெருங்கியதும், கம்பிகளின் வழியாக என் கன்னத்தில் முத்தமிட்டாள்.

அன்று மட்டுமல்ல; அவள் குழந்தைகளுக்கு அவசியமானதைச் செய்ய நான் போகும்போதெல்லாம் தினமும், என்னை அவள் முத்தமிடத் தவறியதே இல்லை. தன் நன்றியைத் தெரிவிக்க இந்த வழியைத்தான் அவள் அறிந்தாள் போலும்.

என்னை நிம்மதியற்று இருக்க வைத்து, என் நேசக் கரங்களை யெல்லாம் தள்ளி, என்னை ஜன்மப் பகைவனாகக் கருதின கோரேயா இவள் என்று நானே நினைக்கும்படி, அத்தனை அன்புடன் பழகத் தொடங்கி விட்டாள். அதுமட்டுமல்ல; என் சிங்கப் பரிவாரங்களுக்குள்ளேயே என்னை மிக நேசித்த, நம்பிக்கைக்குரிய மிருகம் அவளன்றி வேறு கிடையாது என்றும் நான் நினைக்கும்படி அத்தனை நல்லவளாக மாறிவிட்டாள்.

தலையையும் கொடுக்கத் தயார்!

நிலைமை இப்படி மாறிவிட்டதில் எனக்குச் சொல்ல முடியாத மகிழ்ச்சி. நான் கோரேக்கு எல்லா வித்தைகளையும் இப்போது எளிதாகச் சொல்லிக் கொடுக்க முடிந்தது. அவளும் வணங்கி வந்து எல்லாவற்றையும் கற்றுக் கொண்டாள். நான் இப்போது அவள் வாயில்கூட நிர்ப்பயமாகத் தலையைக் கொடுக்க முடியும்.

ஏழெட்டுச் சிங்கங்களை வரிசையாகப் படுக்க வைத்து, அவற்றின் மீது நான் படுத்துக் கொள்வேன். என் மீது கோரே படுத்துக் கொண்டு, வாயைத் திறந்து கொள்வாள். நான் படுத்தவாறே எழும்பி, என் தலையை அவளுடைய இரு கோரைப் பற்களுக்கிடையே விடுவேன் — இந்தக் காட்சி எனக்கு மகத்தான புகழைச் சம்பாதித்துக் கொடுத்தது. கோரேயின் வாயில் நான் தலையைக் கொடுக்கும் போது சர்க்கஸ் கூடாரம் முழுதும் விதிர் விதிர்த்து நிற்கும். பிறகோ ஒரே அப்ளாஸாகப் பொழியும்.

நான் கோரேக்கு நடனமாடவும் கற்றுக் கொடுத்தேன். உலக சர்க்கஸ் சரித்திரத்திலேயே, முதன் முதல் ஒரு சிங்கப் பெண், டாங்கோ நடனம் ஆடினது எங்கள் சர்க்கஸில் தான். நானும் அவளும்தான் அப்படி ஆடுவோம். இன்றைக்கு இத்தனை விருதுகளையும், புத்தகங்களையும் புகழையும் நான் வாரிக் கொண்டிருப்பதற்கு யாராவது காரணம் என்றால் அது என் அருமைத் தோழி கோரே தான்.

பொய்க்காத புனித நட்பு

ஒரு நாள் ஜெர்மானிய சிறு நகரம் ஒன்றில் நிகழ்ச்சிகளை நடத்திக்கொண்டிருந்தேன். ஒரு மின்சார ஜெனரேட்டர்தான் கூடாரம் முழுவதற்கும் ஒளி தந்து கொண்டிருந்தது.

அது, சிங்கங்களின் மீது நான் படுத்துக் கொண்டு கோரேயின் வாயில் தலையைக் கொடுக்கவேண்டிய காட்சி. எல்லாச் சிங்கங்களும் தயாராக அரினாவுக்குள் வந்துவிட்டன; கோரேயும் வந்துவிட்டாள்.

திடீரென்று ஜெனரேட்டரில் ஏதோ கோளாறுகி, மின்சாரம் தடைப்பட்டு ஒரே இருளாகி விட்டது. கூடாரம் முழுவதும் முணு முணுப்பும், இரைச்சலும், தீப்பெட்டி ஒளியும் எழுந்தன. அரினாவுக்குள் ஒரே அந்தகாரம் சூழ்ந்துவிட்டது.

அரைக் கணத்துக்குள் எப்பேர்ப்பட்ட ஆபத்தான சூழ்நிலைக்குள் சிக்கிக் கொண்டிருக்கிறேன் என்று உணர்ந்தேன்.

எட்டு பயங்கர ரத்தவெறி பிடித்த மிருகங்கள் என் எதிரே இருக்கின்றன. இருளில் அவைகளை நான் பார்க்கவும் முடியாது. ஆனால் அவைகளால் என்னைப் பார்க்க முடியும்! இருளில்தானே அவைகளுக்குப் பார்வை நன்றாகத் தெரியும்? ஆட்டத்தில் எந்தப் பகுதியில் நிறுத்தினாலும் அவை வெருண்டு, என் மீது பாய்ந்துவிடக் கூடும்.

முக்கியமாக வெளிச்சம் வரும் வரை அவை எல்லாம் என் உணர்வுக் கட்டுப்பாட்டுக்குள்ளாவது இருக்க வேண்டும். நான் உடனே, ஒரு தீர்மானத்துக்கு வந்தேன். அந்த இருட்டிலேயே பாதியில் நின்ற ஆட்டத்தைத் தொடர்ந்து நடத்துவது என்று முடிவு செய்தேன். சிங்கங்களையெல்லாம் ஒவ்வொன்றாகப் பெயர் சொல்லி அழைத்து, படுக்க வைத்து, அவற்றின் மீது படுத்துக் கொண்டு, கோரேயையும் அழைத்தேன். இரவும் பகல்போல அவற்றுக்குத் தோன்றுமாகையால், இருளின் திடீர்ப் பிரவேசத்தைச் சற்றும் உணராமல் சிங்கங்கள் எல்லாம் கீழ்ப்படிந்து சொன்னபடி கேட்டன. நான் அவற்றின் மீது படுத்திருந்தேன்; என் மீது கோரே — நிம்மதியாகப் பெருமூச்சுவிட்டேன். இப்போது எல்லா ஆபத்தான மிருகங்களும் எனக்குக் கீழே என் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. அது போதும்—ஆனால் அப்போதும் என் உள்ளம், "கடவுளே, இந்த மிருகங்கள் விஷயத்தை உணர்ந்து கொள்வதற்குள் வெளிச்சத்தைக் கொண்டு வந்து தந்துவிடு" என்று இடைவிடாது மறுகிக் கொண்டுதான் இருந்தது.

"கோரே! என் தலையை இலேசாகக் கவ்விக் கொள்." — நான் கட்டளை இட்டேன்.

கோரே குனிந்தாள்.

அடுத்த விநாடி, பட்டப் பகலைப் போன்ற ஒளியைப் பரப்பிக் கொண்டு மின்சாரம் திரும்பி விட்டது. ஆனால் அடுத்த கணம் சபை முழுவதும் திடுக்கிட்டு 'வீல்' என்று பெருங் கூச்சல் இட்டது. கோரேயின் வாயில் என் தலையை எதிர்பாராமல் கண்ட அவர்கள் என் உடம்பைக் கோரே மறைத்திருப்பதைக் கவனியாமல், என்னைத்தான் ஒரு சிங்கம் விழுங்கிக் கொண்டிருப்பதாக நினைத்துவிட்டார்கள். மின்சாரம் தடைப்பட்டபோது மிருகங்கள் எல்லாம் வெவ்வேறு இடத்தில் இருந்ததை அல்லவா அவர்கள் பார்த்தார்கள்? இப்போதோ எல்லாம் ஒரே இடத்தில் குவிந்திருந்ததோடு, அவற்றிடையே ஒரு சிங்கத்தின் வாயில், என் தலை— திடுக்கிடக் கேட்பானேன்?

நான் உரிய விநாடிக்குப்பின், சமிக்ஞை செய்தேன். கோரே மெதுவாகத் தலையை உருவிக் கொண்டு கீழிறங்கி ஒதுங்கினாள்; நான் முழு ஆளாக, வெற்றி வீரனைப் போல் எழுந்து நின்று சபைக்குச் சிரம் தாழ்த்தினேன். அதைக் கண்டு அந்தச் சபையே மகிழ்ச்சிப் பெருக்கால் ஆர்ப்பரித்தது. அன்றைய பாராட்டைப் போல் நான் வாழ்நாள் முழுதும் அடைந்ததே இல்லை.

அந்த ஆபத்திலிருந்து நான் மீண்டதற்காக யாருக்காவது நான் நன்றி சொல்ல வேண்டுமானால் அது கோரேயாகத்தான் இருக்க முடியும். கோரே என் அருமைச் சிநேகிதி; அந்த நம்பிக்கையை என்னுடன் இருந்த கடைசி விநாடி வரையில் அவள் பொய்த்துப் போகச் செய்ததே இல்லை.

வட்ட மேஜை


நம் மருத்துவ மனைகளில் எப்பொழுதும் இரத்தம் பற்றாக்குறை இருந்துகொண்டே இருக்கிறது. இதற்குக் காரணம் இரத்த தானம் அளிக்கப் போதுமானவர்கள் முன்வர வில்லை என்று கூறப்படுகிறது. அதற்குக் காரணம் அவர்களுக்குப் போதுமான வெகுமதி அளிக்கப்படவில்லை என்பதேயாகும். தற்பொழுது இரத்ததானம் அளிக்கும் நபருக்கு ஏழு ரூபாயும் ஒருவேளை சத்துள்ள உணவும் அளிக்கப்படுகிறது. கடந்த பதினைந்து ஆண்டுகளாக இதே ஏழு ரூபாய்தான் அளிக்கப்படுகிறது.

தனியார் மருத்துவ மனைகளில் இரத்த தானம் அளிப்பவர்களுக்கு இருபது ரூபாய் வரையில் அளிக்கிறார்கள். பம்பாய் முதலிய மாநிலங்களில் பதினைந்து, ரூபாய் அளிக்கப்படுகிறது. ஆகவே தமிழ்நாடு அரசும் உடனடியாக இதைப் பரிசீலித்து அன்பளிப்புத் தொகையை உயர்த்தினால் மேலும் பல கொடையாளிகள் முன்வருவர். எவ்வளவோ உயிர்களும் காப்பாற்றப்படும்.

வேலூர்,
17–11–71 ந. சுந்தரமூர்த்தி

அண்மையில் அமெரிக்கா சென்று விட்டுத் திரும்பி யிருக்கும் முதல்வர் கருணாநிதியை வரவேற்பதற்காக ராமநாதபுர மாவட்டத் தி. மு. க. செயலாளர் திரு தென்னரசு எம்.எல்.சி. சிவகாசியிலிருந்து 2000 போஸ்டர்களைச் சென்னைக்கு எடுத்துச் சென்றிருக்கிறார். கருணாநிதி அவர்களின் உருவப்படமும், வரவேற்பு வாசகங்களும் உள்ள அந்தப் பல வண்ணப் போஸ்டர்கள் சென்னை நகரெங்கும் ஒட்டப்பட்டுள்ளன. [ஆதாரம்: 6-12-71 தினத்தந்தி] நாடு இருக்கும் இந்த நெருக்கடியான நிலையில் இதுபோன்ற காரியங்கள் தேவைதானா? "ஆடம்பரமான விழாக்கள் நடத்தாதீர்கள்!" என்று அறிக்கைகளை மட்டும் மாநில அரசு விடுக்கிறது! ஆனால் வண்ண வண்ணப் போஸ்டர்கள் மட்டும் ஒட்டலாம் போலிருக்கிறது! அந்த இரண்டாயிரம் போஸ்டர்கள் அடித்ததற்குச் செலவழித்த பணத்தை வங்கதேச அகதிகள் நிதிக்கோ, தேசப் பாதுகாப்பு நிதிக்கோ வழங்கி யிருக்கலாமே!

மதுரை-1
7-12-71 ஜெ. வெங்கட்ராமன்



பல்புகள் மாற்றுவதால் ஏற்படும் அதிகப்படி செலவை நிறுத்துங்கள். பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்திப் பாருங்கள்.

பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் உடனே பொருத்துவதற்கு ஏற்றவாறு தயாரிக்கப் படுகிறது—லாம்ப், லாம்ப் ஹோல்டர், ஸ்டார்டர், ஸ்டார்டர் ஹோல்டர் மற்றும் பாலாஸ்ட்டுடன் சேர்த்து. முன்கூட்டியே அது ஒரு கனெக்டருடன் இணைக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் செய்யவேண்டியது இவ்வளவுதான் — ஸ்ட்ரிப்பின் இரு முனைகளிலும் சுவரிலோ அல்லது மேலிருந்து கீழாகவோ ஆணிகள் போட்டு முடுக்கிப் பொருத்தி விட வேண்டும். மெயின்ஸை கனெக்டருடன் இணைக்க வேண்டும். இப்போது விளக்கு எரிவதற்கு தயார்.

ஒருமுறை நீங்கள் பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்தி விட்டால் பல்பு மாற்றுவதைப் பற்றிக் கவலைப் படவேண்டாம். 5000 மணி நேரங்களுக்கு மேல் அது எரியக் கூடியது.

பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்டில் ஒரு 40 வாட் ப்ளுரோசெண்ட் பல்ப் உள்ளது. அது சாதாரண 40 வாட் பல்பைவிட 5 மடங்கு அதிகமாக வெளிச்சம் தரக் கூடியது. அதனால் குறைந்த அளவு மின்சாரத்தில் அதிக இடத்திற்கு வெளிச்சம் கிடைக்கிறது.

பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்டில் பொருத்தப் பட்டிருக்கும் ஒவ்வொரு மூலப்பொருளும் அதை அதிக காலம் உழைக்கவும், நீங்கள் செலவிடும் பணத்திற்கு அதிகமான வெளிச்சம் அளிக்கவும் உதவுகிறது. உதாரணமாக, அதிலிருக்கும் பாலாஸ்ட்டின் அமைப்பு லாம்பிலுள்ள முழு வாட்டேஜையும் பயன்படுத்துவதற்கும், அதனால் மிகுதியான வெளிச்சம் அளிக்கவும் தகுந்தவாறு செய்யப் பட்டிருக்கிறது. லாம்ப்ஹோல்டர், ஸ்டார்ட்டர் ஹோல்டர் முதலியவை உறுதியாக இணைக்கப் பட்டிருக்கின்றன. அதனால் ஒவ்வொரு முறையும் உங்கள் ட்யூப் தொல்லை இல்லாமல் எரியும். ட்யூபை உருட்டவோ, திருகவோ வேண்டிய அவசியமில்லை.

வருங்காலத்தைப்பற்றி நன்கு சிந்தனை செய்து பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்டில் பணத்தை முதலீடு செய்யுங்கள். அதைக் காட்டிலும் உயர்ந்தது எதுவுமில்லை.

சிறந்த ஒரு லாம்ப் வேண்டுமா?
பிலிப்ஸ் TL வாங்குங்கள்.
பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்.

பிலிப்ஸ்



★ இம்மீன்களின் பெரிய தட்டையான தலையின் மேல் பகுதியில் ஒரு தூண் அல்லது கம்பம் போன்ற பகுதி எப்பக்கமும் வளைந்து கொடுக்கக் கூடிய நெகிழ்திறம் கொண்டதாய்க் காணப்படும். கம்பத்தின் நுனிப் பக்கம் சதைப்பற்றுள்ளது. இது தூண்டில் முள்ளில் உள்ள இரை போன்று காட்சி அளிக்கும்.

பிரிட்டன், ஐரோப்பா, வடஅமெரிக்கா ஆகியவற்றின் அண்மையில் ஆழ்கடலில் இம்மீன்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. சுமார் மூன்று முதல் ஐந்து அடி வரை நீளமுள்ள இம்மீனின் எடை சுமார் எழுபது பவுண்டு வரை இருக்கும். இதன் அகலமான வாயும், வயிற்றுப் பகுதியும் மாத்திரம் இம்மீனின் உடலில் மூன்றில் இரண்டு பங்கு இருக்கும்.

கம்பம் போன்ற பகுதியை இம்மீன் அங்குமிங்கும் அசைக்கும். பசியுடன் வரும் சிறு மீன்கள் இதைக் கண்ணுற்றுத் தான் விரும்பி உண்ணக் கூடிய உணவு என்று தவறாகக் கருதி நெருங்கி வரும். அப்போது தூண்டில் போடும் மீன் தன் கம்பத்தை மெதுவாக வளைத்து வாயின் சமீபம் கொண்டு வரும். சிறு மீன் அதைத் தொடரும். பின்பு திறந்த நிலையில் இருக்கும் தன் பெரிய வாயினுள் இரையை எதிர்பாராத சமயத்தில் சட்டென்று தள்ளிவிடும். உடனே கூர்மையான பற்களையுடைய தன் அகன்ற வாயை மூடிக் கொள்ளும். இவ்விதமாகத் தன் இரையை அசையாமல் ஓரிடத்திலிருந்து கொண்டே பிடித்து விடுகிறது. ஆகவே, இது பருமனாக இருப்பதில் வியப்பில்லை. கடல் பாசிகளின் ஊடே தன் உடலை மறைத்து, தூண்டில் கம்பையொத்தத் தன் தூண் போன்ற பாகத்தை மாத்திரம் வெளித் தெரியும்படி வைத்துக் கொண்டு தன் உணவை வேட்டையாடுகிறது. இதற்குச் சாதகமாக இம்மீனின் நிறமும் கடல்பாசியின் நிறத்தை ஒத்துக் காணப்படுகிறது. ஒரு பெண் தூண்டில் மீன், ஒரே சமயத்தில் 2·67 மில்லியன் முட்டைகளை இடும்.

- அந்தோனி பேசில்

★ தமிழ் வித்வான் ந. கே. லோகநாதன் பிள்ளையவர்களைக் கௌரவிக்க வில்லிவாக்கத்தில் ஒரு விழா நடந்தது. பிள்ளையவர்களின் குறைநிறைகளையும் பண்பையும் பற்றி எல்லோரும் பேசினார்கள். கூட்டம் இனிது கலைந்ததும் விழாவுக்குத் தலைமை தாங்கிய ஸ்ரீ இ. வா. ஜகந்நாதன் அவர்கள் வெளியே வந்தார். அப்போது மழை இலேசாகப் பெய்துகொண்டிருந்தது.

இ. வா. ஜ. அவர்கள் "பார்த்தீர்களா, உள்ளே புகழ்ச்சி, ஆனால் வெளியே தூற்றல்" என்று சொன்னார்.

- எஸ். பி. மணி

★ அமெரிக்காவில் சில ஊர்களில் சில ஆரம்பப் பள்ளிகளில் குழந்தைகள் பாஸாகாவிட்டால் கட்டின சம்பளப் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடும் பழக்கம் இருக்கிறது. அது தானே நியாயம்?

-'டைம்'- 'பாலி'



★ ஸ்பெயின் நாட்டுத் தலைவர் பிராங்கோவுக்கு வயது 78. உடல் நிலை மிகவும் மோசமாகியும் பதவியை விட்டு இவர் விலகவில்லை. 1970ல் ஜனாதிபதி நிக்சன் ஸ்பெயின் நாட்டுக்கு விஜயம் செய்து பிராங்கோவைச் சந்தித்துப் பேசியபோது பாதிப் பேச்சிலேயே பிராங்கோ தூங்கி விட்டாராம்.

- 'டைம்'

★ அமெரிக்காவில் 'பாஸ்கெட் பால்' ஆட்டக்காரர்களை ஒரு கிளப்பிலிருந்து இன்னொரு கிளப்புக்கு விற்கிறார்கள். அதேபோல நிறைய பணம் கொடுத்து வாங்குவதும் உண்டு.

- 'லைஃப்'



★ ஒரு கம்பெனியில் சிக்கனமாக இருக்க யோசனை சொல்பவர்களுக்கு நூறு ரூபாய் பரிசு கொடுப்பதாக அறிவித்தார்கள். அறிவிப்பு செய்த அன்றே ஒருவர் பரிசு பெற்றார். அவர் சொன்ன யோசனை :

"பரிசுப் பணத்தை ஐம்பது ரூபாயாகக் குறைக்கலாமே!"

'பிளேபாய்'

★ அமெரிக்காவில் உள்ள சிகாகோ நகரின் சப்தத்தைக் குறையுங்கள் என்ற ஒரு திட்டத்தின் தலைப்பு 'ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்ஷிகாகோ!'

'டைம்' - 'பாபு'



ஜடாயுவின் வெற்றி



இரண்டு சவங்களும் பிரேத பரிசோதனைக்காக அனுப்பப்பட்டு விட்டன. ஒன்று பைத்தியக்கார ஜடாயுவினுடையது. இன்னொன்று காளு குண்டாவினுடையது.

பைத்தியக்கார ஜடாயுவின் விலாவில் ஓர் ஆழமான காயத்தின் அடையாளம் தெரிந்தது. தோள் பட்டை, கைபோன்ற வேறு இரண்டு மூன்று இடங்களிலும் கூடச் சில காயங்கள் பட்டிருந்தன. ஆனால் விலாவில் பட்ட காயம் காரணமாகத்தான் அவன் மரணமடைந்தான் என்பதில் யாருக்குமே எந்தவிதமான சந்தேகமும் ஏற்படவில்லை. செத்துக் கிடந்த காளுவின் பக்கத்திலே ரத்தம் தோய்ந்த நீண்ட கத்தி ஒன்று கிடந்தது. அந்தக் கத்தி காளுவினுடையதுதான் என்பதும் ஊர்ஜிதமாகிவிட்டது.

இக்கத்தியினால்தான் ஜடாயு கொல்லப்பட்டான். காளுவே தான் ஜடாயுவைக் கொன்றிருக்க வேண்டும் என்று மக்கள் எண்ணினர். ஆனால் காளுவைக் கொன்றது யாராக இருக்கும்? இதுதான் அவர்களுக்குப் புரியவில்லை.

காளு மகா முரடன். அரக்க குணம் படைத்தவன். கன்னங்கரிய கருங்காலி மரம் போன்ற நிறம், தலையிலே கூடை மயிர், தாடி, மீசைகூட அடர்த்தியானவை, சப்பை மூக்கு, உதடுகளுக்கும் மேலாக முன்புறம் துருத்திக் கொண்டு நின்ற இரண்டு பற்கள், ஆறடி உயரம், கட்டுமஸ்தான தேகம். அவனை ஜடாயு போன்ற நடுத்தரமான பைத்தியக்காரன் கொல்வதா? மனம் இதை நம்பவே ஒப்பவில்லை. காளுவின் கழுத்தில் ஆழமான காயம் பதிந்திருந்தது என்னவோ உண்மைதான். ஒருபுறம் நான்கு. இன்னொருபுறம் ஐந்து விரல்கள் புதைந்திருந்த அடையாளங்கள் இருந்தன. யாரோ நகங்களைக் கொண்டே அவன் கழுத்தைக் கிழித்தெறிய முயன்றிருக்க வேண்டும். ஜடாயுவின் அரை அங்குல நீளமுள்ள நகங்கள் ரத்தம் தோய்ந்து காணப்பட்டன. அவனுடைய விரல்களிலும் இரத்தக் கறை படிந்திருந்தது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தேழாம் ஆண்டில் காளுகுண்டா முதன்முதல் அந்தப் பிராந்தியத்தில் காணப்பட்டான். காவி உடை. கழுத்திலே ருத்ராக்ஷ மாலை, தோள்பட்டையிலே தொங்கும் ஜோல்னா பை, கையிலே அழுத்தமான இரும்புக் கிடுக்கி— இப்படியாகத் திடீரென்று ஒரு நாள் அவன் தோன்றி

றான். தன் கையிலே போட்டிருந்த இரும்புக் காப்பை, விடுக்கியினால் தட்டி ஓசைப் படுத்திய வாறே அவன் கூவலானான்:
''ஹே ஹிந்துக்களே! கேளுங்கள்! உயர்ந்த சாதி மக்களே, தாழ்ந்த இனத்தவர்களே! கேளுங்கள்! ஆண்டவன் விசுவநாதனின் கட்டளை இது. கொண்டு வாருங்கள்,



தாரா சங்கர் பானர்ஜி

சந்தாத் தொகையை! ஹிந்துக்களைக் காப் பாற்றியாக வேண்டும்'' என்றான்.

அப்பொழுதுதான் கிராமம் கிராமமாகச் சுற்றிக் கொண்டு தோல், செருப்பு வியா பாரம் செய்து வந்த இம்தியாஸ்மியான் அவ்வழியே வந்தான். காலுவைப் பார்த்த தும் அவன் துணுக்குற்று, ''அடே, அந்தப் பக்கிரியும் நீதானே?'' என்று கேட்டான்.

காலுவின் முகத்திலே துளிக்கூடச் சுருக்கம் விழவில்லை. மாறுதல் ஏற்படவில்லை. ''ஆம், நாம் சந்நியாசி, பக்கிரி எல்லாமே நாம் தான்...!'' என்றான்.

''இல்லை. இல்லை.'' — இம்தியாஸ் தலை அசைத்து. ''நீ அதே இஸ்லாம் பக்கிரிதானே? அன்றொரு நாள் முர்ஷிதாபாத்தில் வாழும் ஷேக்குகளின் தெருவிலே அல்லாவின் ஆணை யென்றும் அவரது தூதர் முகம்மதின் உத்தர வென்றும் கூறி, இஸ்லாமியர்களைக் காப் பாற்ற வேண்டும் என்றும் கூறிச் சந்தா சேக ரித்துக் கொண்டிருந்தாயே, அதே ஆள் தானே? இன்று... இங்கே...'' என்றான்.

இடையிலேயே காலு குறுக்கிட்டுக் கூறி னான்: ''என்னடா சொன்னாய், திமிர் பிடித்த வேறு மதத்தவனே! நானா இஸ்லா மானவர்களுக்குச் சந்தா சேகரித்துக் கொண் டிருந்தேன்? நான் என்ன முஸல்மானா?''

இவ்வாறு கூவியவண்ணம் அவன் இம்தியாஸை நோக்கி நடந்தான். அதைக் கண்ட இம்தியாஸ் ஓடும் கூட்டத்துடன் ஓட லானான். ஆனால் காளியின் அந்த பக்தன் அவனை விடவில்லை. ஓடிப் போய் அவனைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டான். பிறகு கீழே தள்ளி மார்பிலே ஏறி அமர்ந்து கொண் டான். இம்தியாஸ் அழுதே விட்டான். ''என்னை மன்னித்துவிடுங்கள், சாமி! தெரி யாமல் தவறு இழைத்துவிட்டேன்'' என்றான்.

எல்லாருமே சந்தா கொடுத்துவிட்டார்கள். மொத்தம் ஐம்பது ரூபாய் சேர்ந்தது. காலு கிராமம் கிராமமாகச் சுற்றி ஹிந்து மதத்தைப் பாதுகாக்க எண்ணினான். நல்ல காரியம் என்றால் நாலு சீடர்கள், விரைவில் சேரத்தானே செய்வார்கள்? காலு சாமியா ருக்கும் பற்பல சீடர்கள் சேர்ந்துவிட்டார்கள்.

அப்போதுதான் புதிதாகத் தேசப் பிரிவினை ஏற்பட்டிருந்தது. ஒருநாள் போலீஸ்காரர்கள் வந்து காலுச் சாமியாரைப் பிடித்து எல்லா வற்றிலும் பெரிய கிராமமான நவகிராமத் துக்கு இட்டுச் சென்றார்கள். அவன் மீது ஹிந்து முஸல்மான்களுக்கிடையே பிளவை உண்டுபண்ணுகிறான் என்று குற்றம் சாட்டப் பட்டது. ஆனால் மறு நாளே காலு சிறைக் கம்பியை எண்ணாமல் வெளியே வந்துவிட்டான். சாட்சிப் பிரமா ணங்கள் கிடைக்காததினால் போலீஸ் இன்ஸ்பெக்டர் அவனை அதட்டி உருட்டி எச்சரித்து வெளியே அனுப்பி விட்டார்.

காலுச்சாமி நவகிராமத்திலே ஓர் அடர்த்தியான மரத்தினி டையே அமர்ந்து சமாதியில் ஆழ்ந்தான். இரண்டு நாட்கள் தியானம் செய்த பிறகு அங்கே ஒரு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தான். சந்நிதிக்கெதிரே சாம்பிராணி தூபம் போட்டான். சீடர்கள் சேர்ந்தார்கள். காலை, மாலை இரு வேளைகளிலும், வேளை தவறாமல் மணி அடித்துப் பூசை நடக்கத் தொடங்கியது. பகோடா விற்கும் ராம் துலாரியின் மகன் திருடர்கள் கூட்டத்தைச் சேர்ந்தவன். ஆயினும் அவன் பக்தி மேலிட்டு எட்டுத் தூண்களை நிறுத்தி ஒரு வைக்கோல் கூரை வேய்ந்து கொடுத்தான். ஒருபுறத் தில் நான்கு முழம் நீளமும், இரண்டு முழம் அகலமும் உள்ள உறுதியான மேடை அமைக் கப்பட்டது. இதிலே திரிசூலத்தைப் புதைத் துச் சிவனை ஆவாஹனம் செய்தார்கள். அந்தச் சிவனுக்குக் காளிகேசுவரர் என்று பெயர் சூட்டப்பட்டது. காலுச் சாமியின் சிவனல்லவா? அதனால்தான்!

பக்தர்கள் கூட்டத்தோடு கிராமத்திலே திருட்டுகளும் அதிகரித்தன. காலுச்சாமி மக்களை மனம் போனபடி திட்டலானான். ஏன், அடி உதை கொடுத்துக்கூட அவமானப் படுத்தினான். அப்படியிருக்கும்பொழுதுதான் ஒரு நாள் போலீஸ் இன்ஸ்பெக்டர் காளிகேசு வரர் கோயிலுக்கு விஜயம் செய்தார். அவ ருடன் வந்திருந்த ஆசாமியைப் பார்த்ததும் காலு கோபத்தினால் கொதித்தெழுந்து சீறிக்

குதிக்கலானான். இன்ஸ்பெக்டரும், அந்த ஆசாமியும் தங்கள் தங்கள் கைத் துப்பாக்கிகளைக் கையில் எடுத்துக் கொண்டு, ''ஜாக்கிரதை!'' என்று எச்சரித்தார்கள்.

காலு கல்கத்தாவிலே நேபாளத்துப் பெரும் போக்கிரி என்று பெயர் வாங்கியிருந்தான். அவனைக் கல்கத்தாவிலிருந்தே வெளியேற்றிவிட்டார்கள். நேபாளத்துப் போக்கிரி பீஹாருக்குப் போய்க் காலுகுண்டா என்று பெயர் எடுத்தான். அங்கிருந்து கிழக்கு வங்காளத்துக்குச் சென்றவன் ஒரு கொள்ளைக் கூட்டத்துக்குத் தலைவனானான். கொள்ளையடிப்பது, பெண்களைத் தூக்கிச் செல்வது— இதுதான் அவனது வேலை. இப்பொழுது தேசப் பிரிவினைக்குப் பிறகு அவன் காலுச் சாமியாக வடிவெடுத்து வரலானான்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் கல்கத்தாப் போலீஸ் காரியாலயத்துக்குக் காலுச்சாமியின் புகைப்படம் ஒன்றை அனுப்பி வைத்தார். அப்படத்தைக் கொண்டு அவனை அடையாளம் கண்டு கொண்டு துப்பறியும் இலாகாவின் அதிகாரி ஒருவர் நேரிலேயே வந்து விட்டார். போலீஸ் இன்ஸ்பெக்டருடன் காளிகேசுவரரது ஆலயத்துக்கும் அவரேதான் வந்திருந்தார்.

தலைசிறந்த வங்காள நாவல் ஆசிரியர்களிலே தாராசங்கர் பானர்ஜீ முதல் இடம் பெற்றவர். இவரது பல நவீனங்களும், சிறுகதைகளும் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றும் பெருமை சேர்த்துள்ளன. 'கண தேவதா' என்னும் நவீனத்துக்கு பாரதிய ஞானபீடம் லட்ச ரூபாய் பரிசு அளித்துக் கௌரவித்தது. சமீபத்தில் இறைவனடி சேர்ந்துவிட்ட பானர்ஜீக்கு, அவருடைய இச் சிறுகதையை வெளியிடுவதன் மூலம் அஞ்சலி செலுத்துகிறோம்.

போலீஸ் காலுச்சாமியைக் கைது செய்து இட்டுச் சென்றது. ஆனால் சில மாதங்களுக்குப் பிறகு அவன் மீண்டும், ''ஓம், காளி, கல்கத்தாக் காளி, கரத்திலே கத்தியேந்திய காளி, சங்கரா, சம்போ சங்கரா!'' என்று கூறிக் கொண்டே வந்து சேர்ந்துவிட்டான்.

''போலீஸ் என்னை என்ன செய்துவிடும்? காசி விசுவநாதரின் கோபத்தை அதனால் தாங்க முடியுமா? பயந்துபோய் விட்டுவிட்டது. விடாமல் என்ன செய்யும்? நான் என்ன செய்தேன்? நான் எது செய்தாலும் நாட்டுக்காகச் செய்தேன். அப்படியிருக்கும் பொழுது அந்தப் பாவிகளால் என்னை என்ன செய்துவிட முடியும்?'' என்றும் கேட்டான்.

அப்புறமென்ன? அது முதற்கொண்டு அவன் மதிப்பு உயர்ந்துவிட்டது. வெறும் காலுச் சாமியாய் இருந்தவன் 'பெரிய சாமியார்' ஆகிவிட்டான்.

இப்படிப்பட்ட அசகாய சூரன் காலுச்சாமி. அவனையா அந்தப் பைத்தியக்கார ஜடாயு கொன்று போட்டான்?

ஜடாயு பிறவியிலிருந்தே அரைப் பைத்தியம். கருமான் வேலை பார்த்துவந்த சேடியின் மகன் அவன். அவனது பொருளாதார நிலை அப்படியொன்றும் பிரமாதமானதாக இல்லை. ஆயினும், இரண்டு வேளைச் சோற்றுக்கும், உடுக்கத் துணிக்கும் குறைவில்லை. ஜடாயு வீட்டிலே அரை நாழிகை கூடத் தங்குவதில்லை. இங்கு அங்கு என்று எங்காவது ஊர் சுற்றிக் கொண்டிருப்பான். இருபது, இருபத்திரண்டு வயது வரையில் உலையிலே உட்கார்ந்து அவன் தகப்பனுக்கு உதவி செய்து வந்தான். பெரிய இடுக்கியினால் தகப்பன் சிவக்கக் காய்ந்த இரும்பை அழுத்திப் பிடித்துக் கொண்டிருப்பான். ஜடாயு பெரும் சக்தி எடுத்துப் பலம் கொண்டமட்டின் ஓங்கி அடித்துக் கொண்டிருப்பான். பார்க்கும் ஜனங்கள் எல்லாம் இவன், ''வருங்காலத்தில் நல்ல பலம் பொருந்திய கட்டிளங்காளையாக விளங்குவான்'' என்று சொல்வார்கள். அவர்கள் சொன்னபடியேதான் நடந்தது. இருபது இருபத்திரண்டு வயது ஆனபொழுது அவன் இரும்பு மனிதனாகவே திகழ்ந்தான். ஆனால், அதற்குப்பின் அவன் மூளையிலே ஏதோ கோளாறு ஏற்பட்டு விட்டது.

கிராமத்து ஜமீன்தார்கள் வீட்டிலே ராமலீலா உத்சவம் நடந்தது. சீதையை அபகரித்துச் செல்லும் காட்சியைக் கண்டு ஜடாயு விம்மி விம்மி அழலானான். சீதையாக நடித்தவன் கல்கத்தாவைச் சேர்ந்த ஒரு பையன். சீதை வேஷம் அவனுக்கு மிகவும் நன்றாகப் பொருந்தியிருந்தது. கிராமத்தைச் சேர்ந்த சிவநாதனே ராமனாக வேடம் தரித்துக் கொண்டான். இருவருடைய நடிப்புமே வெகு நேர்த்தியாக அமைந்துவிட்டது.

ஜடாயு ராமலீலா நாடகம் முழுவதையும் பார்த்து முடித்த பின்னரும்கூட, இரவு வீட்டுக்குத் திரும்பவில்லை. இரவு முழுவதும் ஆள் நடமாட்டம் ஏதுமில்லாத அந்த மைதானத்திலேயே உட்கார்ந்து கொண்டு அழுது கொண்டிருந்தான். காலையிலே, அவனைப் பார்த்த மக்கள், மூளைக் கோளாறு மேலும் அதிகமாகி விட்டது என்பதைப் புரிந்து கொண்டனர். திடீரென்று லாஹாதாவின் மகன் உமேஷின் மணிக்கட்டைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு ''டேய், புளுகுண்ணி! டேய் குள்ளநரி!'' என்றான் ஜடாயு.

உமேஷ் பிரமித்துப் போய் நின்றான். அக்கம்பக்கத்து ஜனங்களும் வியந்து திகைத்தனர். இந்தப் பயலுக்கு என்ன வந்துவிட்டது?

''விடடா, கையை! வலிக்கிறது'' என்றான் உமேஷ்.

''வலிக்கிறதா?'' என்ற ஜடாயு, வெறுப்புடன், ''வெட்கம் கெட்டவனே! செத்தவன் போல் பாசாங்குதானே செய்தாய்? இப்படி உயிர் வாழ்வதில் உனக்கு வெட்கமாயில்லை? குள்ளநரி வேலை செய்துவிட்டாயேடா. நீ உயிரைப் பணயம் வைத்து ராவணனுடன் போரே செய்யவில்லை. இறந்தவன்போல் பாசாங்கு செய்து கீழே படுத்துக் கிடந்தாய். அங்கே இராவணன் அன்னை

சீதையை அபகரித்துச் சென்றுவிட்டான்.... முட்டாள்!'' என்றான்.

ராமலீலா நாடகத்திலே உமேஷ் ஜடாயுவாக நடித்தான். ஜடாயுவின் தியாகத்தைக் கண்ணாரக் கண்ட டெபு கருமாரியின் மகன் ஜடாயு உண்மையிலேயே மனத்தைப் பறி கொடுத்து விட்டான். அதனாலேயே அவன் அடிக்கடி கரம் குவித்து உமேஷுக்கு வணக்கமும் தெரிவித்தான். நாடகம் நடக்கும் பொழுதே உரத்த குரலில், ''சபாஷ், உமேஷ்! நல்ல காரியம் செய்தாய்! உனக்குக் கோடிப் புண்ணியம் உண்டு. நீ நேரில் சொர்க்கத்துக்கே போவாய்!'' என்றான்.

அதனால்தான் உமேஷை உயிருடன் கண்ட பொழுது அவன் சீறி எழுந்தான். 'உமேஷ் உயிரைப் பணயம் வைத்து உண்மையாகவே போர் புரியவில்லை. இந்த அற்ப உயிரைக் காத்துக் கொள்வதற்காகப் பிணம்போல் கிடந்தான். இராவணன் இதுதான் தருணமென்று சீதையை அபகரித்துச் சென்று விட்டான். இந்த அநீதிக்கு இவனேதான் காரணம்!' என்ற முடிவுக்கு வந்துவிட்டான் ஜடாயு. ''அட, பயங்கொள்ளி! உனக்கு இப்படி உயிர் வெல்லமாகப் போய்விட்டதே!'' என்றும் ஏசினான். ஜனங்கள் அவன் பேச்சைக் கேட்டுச் சிரித்துச் சிரித்து வயிறு புண்ணானார்கள். ''ராமலீலா நாடகத்திலே நடப்பதெல்லாம் என்ன, உண்மையா? எல்லாம் பொய்யடா!'' என்றும் விளங்க வைக்க முயன்றனர்.

ஜடாயு இதற்குப்பின் சிவநாதனின் வீட்டுக்குப் போய்வரலானான். சிவநாதன், ராமலீலா நாடகத்தின் ராமனாக மட்டுமல்ல, கிராமத்து முடிசூடா மன்னனாகவே திகழ்ந்தான். அவன் நடுத்தரக் குடும்பத்திலே பிறந்தவன். எம். ஏ. பட்டம் பெற்றவன். கிராமத்துக் காரியங்களிலும், சீர்திருத்தப் பணிகளிலும் அவன் முன் நின்றான். கல்யாணம் கார்த்திகை என்று ஒன்றும் ஆகாததால் இரவு, பகல் எந்நேரமும், கிராமத்துப் பணிகளிலே அவன் கருத்தைச் செலுத்தினான். அவனது இனிமையான சுபாவத்துக்கு ஏற்றபடியே அவனது முகத் தோற்றமும் கவர்ச்சிகரமாகக் காட்சி அளித்தது.

ஜடாயுவுக்கு அவனை மிகவும் பிடித்து விட்டது. அடிக்கடி அவனிடம் சென்று, ''நானும் ராமலீலாவிலே சேர்ந்து வேலை செய்கிறேனே !'' என்றான்.

சிவநாதனும் முகத்துக்கெதிரே யாரிடமும் முடியாது என்று சொல்ல முடிவதில்லை. ''தருகிறேனே! உனக்கும் அதிலே கட்டாயம் ஒரு வேஷம் தருகிறேனே!'' என்றான்.

ஜடாயுவுக்கு உற்சாகம் எல்லை மீறிவிட்டது. தனது நடிப்புத் திறனை அந்த இடத்திலேயே காட்டத் தொடங்கிவிட்டான்.

''யாரடா நீ? காமுகனே! பாவியே ! பிசாசே! மாசு மறுவற்ற, சொக்கத் தங்கம் போன்ற, தூய்மையே உருவான தேவியை அபகரித்துச் செல்கிறாயே, யாரடா நீ?''

ஜடாயுவின் சம்பாஷணைகள் அனைத்தும், அநேகமாக அவனுக்கு மனப்பாடம் ஆகியிருந்தன. உண்மையாகவே அவனேதான் ஜடாயுவோ என்று எண்ணும் வகையிலே அவன் நடிப்பு மெருகேறி யிருந்தது.

அவன் நடிப்பு சிவநாதனுக்கு மிகவும் பிடித்திருந்தது. பைத்தியக்காரனாக இருந்தாலும் உண்மையில் நடிப்புக்கு உயிரும், உணர்வும் கொடுத்து நடிக்கிறானே என்று மனத்துள் வியந்தான்.

ஒரு நாள் சிவநாதனின் கால்களைப் பிடித்து விட்டுக் கொண்டே, ''ராமச்சந்திரா! நீ திருமணம் செய்து கொள். வீட்டுக்கு சீதை அன்னையை அழைத்து வா'' என்றான் ஜடாயு.

''ஜடாயு ! அந்தப் பாக்கியம் என் தலையிலே எழுதப்படவில்லையடா ! இல்லாமை என்னும் இரும்பினால் சமைக்கப்பட்ட சிவனது வில்லை முறிப்பது என் சக்திக்கு அப்பாற்பட்ட விஷயம்'' என்றான் சிவநாதன்.

ஆனால் திடீரென்று ஓர் அதிசயமான சம்பவம் நிகழ்ந்தது. இல்லாமை என்னும் இரும்பினால் ஆக்கப்பட்ட அந்த உருக்கு வில், சிவநாதனின் கைகளால் ஒரு நாள் ஒடிந்து விட்டது. திடுதிப்பென்று அவன் மதிப்பு உயர்ந்தது. இரவுக்கிரவாகவே அவன் பெரும் புகழ் பெற்று விட்டான்.


சிவநாதனின் நண்பன் ஒருவன் சினிமாவிலே வேலை செய்து வந்தான். ஒரு படத்தை டைரக்ட் செய்யும் வாய்ப்பு அவனுக்குக் கிடைத்தது. வலுக் கட்டாயப்படுத்திச் சிவநாதனை அதில் ஒரு சிறிய பாத்திரமாக நடிக்கும்படி செய்தான். ஆட்டிப் படைக்கும் அதிர்ஷ்ட தேவதையின் அருள்தானோ என்னவோ, அதிலேயே சிவநாதனுக்குப் புகழ் கிட்டிவிட்டது. அவன் தோற்றமும் நன்றாக இருந்தது. நடிப்பும் நேர்த்தியாக அமைந்து விட்டது. எனவே, இன்னும் இரண்டு படங்களில் சிறு சிறு பாத்திரமேற்று நடித்த அவனை மூன்றாவது படத்திலேயே 'ஹீரோ'வாக, பிரதான பாத்திரமாக — நடிக்கும் அரிய வாய்ப்பு தானாகவே தேடி வந்தது.

ஓர் ஆண்டுக்குப்பின் ஊருக்கு வந்தபோது அவன் பெரும் புகழும் பெற்று வந்திருந்தான். அவன் ஏழைமை அவனை விட்டு ஓடியிருந்தது. முகத்திலே முன்னைக் காட்டிலும் அதிகமான அழகு மெருகிட்டிருந்தது. கிராமத்து மக்கள் ஒருவர் விடாமல் அவனைப் பார்ப்பதற்காக கூடிவிட்டனர். ஜடாயுவும் வந்திருந்தான். எல்லோரும் விடைபெற்றுப் போகும் வரை பேசாமல் உட்கார்ந்திருந்தான்.

ஜடாயுவின் மூளை மீண்டும் பிறழ்ந்துவிட்டிருந்தது. ஒட்டி உலர்ந்து ஓடாகியிருந்த உடல், வறண்டு உரிமட்டை நாரெனத் தோன்றிய தலை மயிர், உடலை அலங்கரித்த அழுக்கு வேட்டி, பனியன்; இப்படியாக அவன் ஊரில் திரிந்து கொண்டிருந்தான்.

சிவநாதனைப் பார்த்ததும் அவன் கண்கள் கலங்கி நீரில் மூழ்கின. இரு உதடுகளும் படபடவெனத் துடித்தன. ''நீ இவ்வளவு கல்நெஞ்சனா, ராமா? என்னை விட்டு விட்டு இப்படிப் போய்விட்டாயே! இவர்கள் எனக்கு அந்த வேஷத்தைக் கொடுப்பதில்லை. நான் பைத்தியக்காரனாம், சொல்கிறார்கள்! நீயே சொல். நான் என்ன, நன்றாக நடிக்கமாட்டேனா? — பிறர்போல் அல்லாமல் உயிரைக் கொடுத்தே நடிப்பேனே!'' என்றான்.









சிவநாதன் அவனுக்கு ஆறுதல் அளிப்பதற்காக, ''நீ உண்மையிலேயே நன்றாக நடிக்கிறாய், ஜடாயு !'' என்றான்.

''அப்பொழுது என்னையும் உன்னுடன் கல்கத்தாவுக்கு அழைத்துக் கொண்டு போய் விடேன். ஒரு தடவை எனக்கு ஒரு வேஷம் கொடுத்துப் பார். அப்புறம் நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறேன்.''

என்ன சொல்வான் சிவநாதன்? ''சரி, கவனிக்கிறேன்'' என்று ஆறுதல் சொன்னான்.

சிவநாதன் கல்கத்தாவுக்குத் திரும்பிய பொழுது, ''கட்டாயம் கடிதம் போடு. கிடைத்ததும் நான் வந்துவிடுகிறேன்'' என்றான் ஜடாயு.

இந்த ஜடாயுவா காலுருண்டாவைக் கொன்று போட்டுவிட்டான்? ஊஹூம், இராது. இது நடக்காத காரியம் !

''ஆனால் அப்படித்தான் நடந்திருக்கிறது!'' மாஜிஸ்திரேட்டிடம் சிவநாதன் சொன்னான்: ''நான் உங்களுக்கு நிகழ்ந்தது முழுவதையும் விவரமாகச் சொல்கிறேன்.''

காலு, ஜடாயு இருவரது சவமும் கண்டு பிடிக்கப்பட்டுப் பரிசோதிக்கப்பட்ட அன்று மாலைதான் சிவநாதன் ஊருக்கு வந்திருந்தான். கேள்விப்பட்டதும் நேரே போலீஸ் நிலையத்துக்குச் சென்றான். அவனோடு அவன் மனைவியும் இருந்தாள். சில தினங்களுக்கு முன்னால்தான் சிவநாதன் மணம் புரிந்து கொண்டிருந்தான். ஏறக்குறைய ஒரு மாதத்துக்கு முன்னால் மனைவியை அழைத்துக் கொண்டு கிராமத்துக்கு வந்திருந்தான். அவன் மனைவி, அழகி, அறிவாளி, நன்கு படித்தவள், நன்றாகப் பாடவும் கற்றிருந்தாள்.

சிவநாதன் ஊர் முழுவதையும் அழைத்து நல்ல விருந்து வைத்தான். அதற்கு ஜடாயுவும் வந்திருந்தான். மெதுவாக, அவன் சிவநாதனின் காதருகில் சென்று, ''மிக அழகான சீதை கிடைத்திருக்கிறாள், ராமா! இன்னும் ஒரு தடவை 'சீதாபஹரணம்' நாடகம் போடு. நான் பத்து ரூபாய் சேர்த்துக்கூட வைத்திருக்கிறேன்'' என்றான்.

''இருக்கட்டும், முதலில் வயிறு நிரம்ப நன்றாகச் சாப்பிடு'' என்றான் சிவநாதன்.

சிவநாதனின் மனைவிக்கும் ஜடாயு தனது சம்பாஷணைகளைச் சொல்லிக் காட்டினான். மேலும், ''தாயே! நீ ஸ்ரீ ராமசந்திரனுக்கு என்னைப் பற்றிப் புரியும்படியாகச் சொல்லு, தாயே !'' என்றும் வேண்டிக் கொண்டான்.

முக்கியமான அலுவலின் பேரில் சிவநாதன் கல்கத்தா போகும்படியாயிற்று. மனைவி கிராமத்திலேயே தங்கிவிட்டாள். கிராமத்தில் ஒரு சிறு வீட்டுக்கு அஸ்திவாரம் போடாமல் கல்கத்தாவுக்குத் திரும்புவதில்லை என்று அவள் தீர்மானித்திருந்தது தான் அதற்குக் காரணம். ஸ்டேஷன் போகும் வழியில், சிவநாதனை ஜடாயு சந்தித்தான். ''எங்கு புறப்பட்டு விட்டாய்?'' என்று கேட்டான்.

''கல்கத்தாவுக்கு!''

''சீதை?''

''அவள் இங்குதான் இருக்கப் போகிறாள். நீ அவளைக் கொஞ்சம் கவனித்துக் கொள்!'' என்று கூறிச் சிவநாதன் விடைபெற்றான்.

சிவநாதனின் மனைவி கல்யாணிக்கு அந்தக் கிராமம் மிகவும் பிடித்திருந்தது. எனவே அங்கே ஒரு வீடு கட்டியே ஆகவேண்டும் என்று அவள் பிடிவாதம் பிடித்தாள். ஆனால் ஊருக்குள்ளிருந்த பழைய வீட்டை இடித்துக் கட்ட அவன் விரும்பவில்லை. கிராமத்தின் எல்லைக் கோடியிலிருந்த திறந்தவெளிக்கருகில் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டது. கண்ட்ராக்டர், கொத்தன், மேஸ்திரி எல்லாரிடமும் பேசி முடித்தாகி விட்டது. அப்படி இருக்கும்பொழுதுதான் ஒரு நாள் காளுச்சாமி சிவநாதனின் வீட்டுக்கு வந்தான். சிவநாதன் தனது துப்பாக்கியைத் துடைத்துச் சுத்தம் செய்து கொண்டிருந்தான். "நீ புதிய வீடு கட்டப் போகிறாயாமே? கேள்விப்பட்டேன்" என்றான் காளுச்சாமி.

"ஆமாம். என்ன சமாசாரம்?."

"அந்தக் குத்தகைக்காரன் மல்லனுக்கு நீ காண்ட்ராக்ட் கொடுக்காதே. சிவன் கோவிலுக்கு முன்புறத் தூண்கள் இரண்டு செய்து தருமாறு அவனிடம் சொல்லியிருந்தேன். அவன் பேச்சுப் புரண்டுவிட்டான். நான் உனக்கு வேறொரு குத்தகைக்காரன் ஏற்பாடு செய்து தருகிறேன். அவன் மலிவாக நல்ல முறையிலே வேலை செய்து தருவான். நீ சிவன் கோவிலுக்கு உன் செலவில் இரண்டு தூண்கள் செய்து கொடு, போதும்" என்றான் காளுச்சாமி.

"நான் மல்லனிடம் முழுவதும் பேசி முடித்து விட்டேன். இனி பேச்சு மாற முடியாது" என்றான் சிவநாதன்.

காளு பலமுறை சொல்லிப் பார்த்து விட்டான். ஆனால் சிவநாதன் கேட்கவில்லை. கடைசியில் காளு எழுந்து புறப்பட்டுவிட்டான். ஆனால் போகும்போது, "பார்த்துக் கொண்டேயிரு, சிவனெதிரே உனது இந்தத் துப்பாக்கி நேர்த்திப் பொருளாக வைக்கப்படும். இந்தக் காளுவைப் பகைத்துக் கொண்டு நீ இந்த ஊரில் வாழ முடியாது" என்று பயமுறுத்திவிட்டுச் சென்றான்.

சிவநாதன் அலட்சியமாகச் சிரித்தான். அவன் காளுவின் அதட்டலுக்கு அஞ்சவில்லை. தந்தி வரவே அவசரமாக அவன் கல்கத்தாவுக்குத் திரும்பும்படியாயிற்று. போகும்பொழுது தன் மனைவியிடம் ஜாக்கிரதையாக இருக்கும்படி படித்துப் படித்துச் சொல்லிவிட்டுச் சென்றான்.

அவன் புறப்படும்போதே புது வீட்டுக்கென்று கற்கள் வரத் தொடங்கியிருந்தன. பௌர்ணமிக்கு மறுநாள் கண்ட்ராக்டர் மல்லன், சிவநாதனின் நண்பன் தேவகுமாரன், இருவருடனும் கல்யாணி வீடு கட்ட இருக்கும் இடத்துக்குச் சென்றிருந்தாள். கற்களை எண்ணி வைக்கும்பொழுது இருட்டி விட்டது. சந்திரன் உதித்து நிலவு வீசத் தொடங்கவே எல்லோரும் சிறிது நேரம் அங்கேயே உட்கார்ந்து விட்டார்கள். பேச்சு சுவாரஸ்யத்தில் அவர்களுக்கு நேரம் போனதே தெரியவில்லை. அதனால் திரும்பும்பொழுது இரவு கொஞ்சம் அதிகமாகவே ஆகிவிட்டிருந்தது.

பழைய வீட்டின் வாசற்புறத்துத் திண்ணை வரையில் கல்யாணியைக் கொண்டு விட்டு விட்டு அவர்கள் சென்றார்கள். 'இனி மேல் நான் போய்க் கொள்ளுகிறேன்' என்று கூறி அவளேதான் அவர்களை வழியனுப்பி வைத்தாள். ஆனால் திண்ணைக் குறட்டை அவள் தாண்டிக்கூட இருக்க மாட்டாள். திடீரென்று பின்புறமிருந்து யாரோ அவள் வாயைப் பொத்தினார்கள். கண் மூடிக் கண் திறக்கும் நேரத்தில் அவள் வாயைத் துணியினால் கட்டி அவளை அலாக்காகத் தோளில் தூக்கி வைத்துக் கொண்டு சந்து வழியாக ஓடவும் தொடங்கி விட்டான் வாயைப் பொத்தியவன். அவன் அவ்விடத்துப் பாதைகளை நன்றாகத் தெரிந்து வைத்தவனாகத் தான் இருக்க வேண்டும். கல்யாணியோ ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருந்தாள். அவளால் வாய் திறந்து கத்தவும் முடியவில்லை. கஞ்சாவின் துர்க்கந்தம் வேறு வயிற்றைப் புரட்டிக் கொண்டு வந்தது.

புது வீடு கட்டப்பட்டுக் கொண்டிருந்த இடத்தில் கொண்டு வந்து கல்யாணியைப் போட்டுவிட்டு அந்த மனிதன் அட்டகாசச் சிரிப்புச் சிரித்தான். அவன் வேறு யாருமில்லை; காளுதான்.

திடீரென்று ஒரு பயங்கர ஆரவாரச் சிரிப்பு அவனது அந்தச் சிரிப்பைப் பரிகசிப்பதுபோல் எதிரொலித்தது. "யாரடா நீ? காமுகனே! பாவியே! பிசாசே! மாசுமறுவற்ற, சொக்கத் தங்கம் போன்ற, தூய்மையே உருவான தேவியை அபகரித்துச் செல்கிறாயே, யாரடா நீ?" என்று கோபத்துடன் சீறியவாறே இருளிலிருந்து ஒரு பேய் உருவம் காளுச்சாமியின்மீது பாய்ந்தது.

காளுச்சாமி எதிர்பாராத வண்ணம், அவனை அறியாமலே அந்தப் பேயுருவம் அவன் கழுத்தை அழுத்திப் பிடித்து நெரித்தது. கல்யாணி புரிந்து கொண்டு விட்டாள்—அவன் ஜடாயுதான்.

கல்யாணி இதுவரை விவரமாகக் கூறிவிட்டு மேலும்கூறினாள்: "காளுச்சாமியின் கழுத்தை அழுத்திப் பிடித்துவிட்டதனால் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவன் ஒரு கையால் ஜடாயுவைப் பிடித்துத் தள்ளவும், மற்றொரு கையால் இடுப்பிலிருந்து கத்தியை எடுக்கவும் முயன்று கொண்டிருந்தான். பார்க்கச் சகியாத பயங்கரப் போர் நிகழ்ந்தது. நான் மூர்ச்சித்து விழுந்தேன்.

"எனக்கு நினைவு வந்தபொழுது இரவு எத்தனை நாழிகையாகி யிருந்ததோ, எனக்குத் தெரியாது. வானத்தைப் பார்த்தேன். சந்திரன் தலைக்கு நேராக வந்து கொண்டிருந்தான். நிலவொளியிலே ஒருபுறம் காளுச்சாமி கிடப்பதையும், இன்னொருபுறம் பைத்தியக்கார ஜடாயு கிடப்பதையும் கண்டேன்."

கல்யாணியின் கண்களில் நீர் நிறைந்திருந்தது. அப்பொழுது சிவநாதன் தழுதழுத்துப் போன குரலில், "நான் ஜடாயுவின் சவத்தைக் கேட்பதற்காக வந்திருக்கிறேன். அவனது 'ஈமக்கடன்களை' நானே செய்யப் போகிறேன்" என்றான். ராமாயண காலத்து ஜடாயுவுக்குக் கிடைக்காத வெற்றி இந்தக் காலத்து ஜடாயுவுக்குக் கிட்டியதை எண்ணி நீதி மன்றமே வியந்தது. - தமிழாக்கம்: ரா. வீ.

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



PRATIBHA-1-1-TAM